உ

சிவமயம்.

பதினெண் சித்தர்

திருவாய்மலர்ந்தருளிய

வாதக்கோவை

மூலமும் பொழிப்புரையும்.

இந்த உரை

வித்வான். சூ. அப்பன் செட்டியார் அவர்கள்

மாணுக்கரும்,

ஆயுர்வேத வயித்தியரும், தமிழ்ப்பண்டிதருமான

ம-ா-ா-ஸ்ரீ;

மா. வடிவேலு முதலியாரால்

எழுதப்பட்டு,

பூவிருந்தவல்லி,

பி. எஸ். டி. எம். அண்டு சன்

தமது

சென்னை, சந்திரவிலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

1930

[இதன் விலை] ரிஜிஸ்தர் காப்பி ரைட். [ரூபா 1-0-0.

1748
540

க. மகாலிங்கம்
செப்பனிடுபவர் பெயர்

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட நாள்

செப்பனிட்டு முடித்த நாள்

சரிபார்க்கும் ஆராய்ச்சி
மு. ப. ஏ. உதவியாளர்
கையொப்பம் கையொப்பம்

15 AUG

புத்தக அறிவிப்பு.

மனோபோதை மூலமும் உரையும்.

இது 100-கட்டளைக் கலித்துறையால் பாடிய. வேதாந்த சித்தாந்த சமரச விஷயங்களடங்கியதும் யாவருந் தெரிந்துக்கொள்ள தெள்ளிய உரையுடன் அச்சிடப்பட்டது.

விலை ரூபா—1.

பச்சிலை மூலிகை அகராதி.

உலகில் சர்வ மூலிகைகளும் நமக்கே கடவுள் உற்பத்தி செய்திருக்க, அதில் அனேகருக்கு சில மூலிகைகள் தெரிந்தும் அனேக மூலிகைகள் தெரியாமலும் இருப்ப தியற்கையே. ஆனதால், குடும்பஸ்தர்களுக்கும், வைத்தியர்களுக்கும், வாதிகளுக்கும் தெரிந்து உபயோகமாகும்படி தெள்ளத்தெளிய அதன் மர்மம் செய்கைகளை வெளியிடப்பட்டிருக்கிறது.

விலை அணா - 12.

சித்திரக்கவி சிங்காரம் அல்லது

விச்சித்திர வினாவிடை.

இதில் அர்த்த அனர்கத வாத்தியார் சம்பாஷணை முதல் உலகிலுள்ள பல விகார சாமர்த்திய வினாவிடை சம்பாஷணைகளும், ஆசு-மதுரம்-சித்திரம்-விர்த்தார்த்த மென்னும் நாற்கவியி லொன்றாகிய ஆச்சர்ய சித்திரக்கவி பாடல்களும் நிறம்பியது. பாட்டுபோடும் வித்துவான்களுக்கு இது அவசிய மிருக்கவேண்டியது. படிக்கப் படிக்க திகட்டாத கல்வி ஞான மிதுவே யாகும்.

விலை அணா—8.

பி. எஸ். டி எம் அண்டு, சன்

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

ரிஜிஸ்தர் அறிவிப்பு

உலகத்தில் பிரசித்தியாய் விளங்கிய பதினெண்சித்தர் திருவாய் மலர்ந்த இரசவாதங்களை எல்லாம் ஒன்றாய் திரட்டி வாதக்கோவை யென்னும் நாமஞ்சூட்டி, சென்னை தொண்டை மண்டலம் கல்விச்சாலை பிரதம தமிழ்ப் பண்டிதர் வித்வான் ரு. அப்பன்செட்டியார் அவர்கள் மாணாக்கர் ம-கா-ஸ்ரீ, மா. வடிவேலுமுதலியார் எழுதிய பொழிப்புரையை சென்னை புரசை வல்லம்பங்காருசெட்டி வீதி 25-வது நெம்பர் வீட்டிலிருக்கும் பூ. சு. துளசிங்க முதலியார் குமாரன் பூ. து. மாசிலாமணி முதலியாருக்கு சகல சுதந்தரமும் கொடுத்து விட்டமையால் அவர்கள் அனுமதியின்றி யாவரும் எவ்விதத்தும் அச்சிடாத வண்ணம் கனம் பொருந்திய கெவர்மெண்ட் சட்டப்படி (ரிஜிஸ்தர் காபிரயிட்) செய்யப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1 0 0

எமது விலாசம்:—

பூ. து. மாசிலாமணி முதலியார்

சுந்தரவிலாசம் பிரஸ்.

நெ, 25. வல்லம் பங்காருசெட்டி வீதி, வேப்பேரி, மதராஸ்.

குபேரபுரி சரித்திரம்.

பல் கதைகளைக்காட்டிலும் அஸ்தபூஷணமென அறிஞர்களால் கீர்த்திபெற்ற இந்த சரித்திரம் சிறந்த சாரமாகும் தெள்ளிய நடையும், மனதைக் கவரத்தக்க விஷயமும் அடங்கியதாகும்.

விலை அணா—8.

வேமன்ன யோகீஸ்வரர்

100-பாடல் மூலமும் உரையும்,

வடநாட்டில் ஜனனமாகி, தாசிக்கே திரவியமெல்லாம் கொடுத்து கெட்டு முடிவில் தமையன் மனைவியால் ஞானசிலையடைந்து ஊமத்தங்காய் பயிரிட்டு அவைவ முப்பதும் பொன்னாகும்படி மகா சத்துவத்தைக் காண்பித்து துறவு பூண்டு முத்தியடைந்த யோகீஸ்வரர் திருவாய்மலர்ந்தருளிய தெலுங்கு பாடல் 100-க்கும் தமிழில் உரையெழுதி எல்லோருக்கும் பயன்படுமாறு இந்தப்பிரதியாக அச்சிடப்பட்டது. சுத்தப்பிரதி,

விலை அணா - 6.

பவளக்கொடியாள் நாடகம்.

அல்லிராணி தர்பார் முதல் புலந்திரனுக்காக பவளத்தேர் வேண்டிபோய் பவளக்கொடியை மாலையிடுவதும், அர்ச்சுனன் வண் கேடியால் இறந்துபோவதும் பிறகு அல்லி தர்பார்முதல் ஆதிந்து நத்துணையாகும்படி கிருஷ்ணமூர்த்தி ஜோசியால் எழுந்து திருமணம் முடிப்பது வரையில் அருமையான பாடல்கள் மனோரம்மியமாக இருக்கும். நாடகப் பிரியர்கட்கு நல்ல புத்தகம்,

விலை அணா - 6.

அகட விகடப் பிரசங்க தண்டு பஜாரி கதை.

இந்த கதையின் லட்சணம் நாம் சொல்லாமல் தலைப்பின் பெயரிலேயே தெரிந்துகொள்ளலாம். டம்பாச்சாரி விலாசத்திற்கு முதலென்றே சொல்லும்படி தலைபாஜியால் நடந்தேறும் பல்வித சல்பிணையால் விளையும் விபரீதம் வெகு விமரிசை, சிரிப்பு, ஆனந்தமாக இருக்கும். மதியசப் பெண்களுக்கு புத்தியைப் புகட்டும்.

விலை அணா - 8.

பி. என். டி. எம். அண்டு சன்-
வெப்பேரி போஸ்டு, மதராஸ்.

புத்தக அறிவிப்பு.

நெஞ்சறி விளக்கம்

மூலமும் உரையும்.

உலகில் மானிடர் துன்மார்க்க கடையில் கெட்டுப்போவதற்கும் கடைத்தேருவதற்கும் நெஞ்சமே காரணமாகியலால், மனதின் குணம், சரியை - கிரியை - யோகம் - ஞானம், தானம் - தவம், சொப்பன - சுழுத்தி முதலிய அனுபவதசையைத் தெரிந்து நல்வழி யடையும்பொருட்டு எழுதிய பாசுரங்களை கற்றோரும் மற்றோரும் எளிதில் தெரிந்துகொண்டு பலனடையுமாறு தெள்ளிய நடையில் உரையெழுதி உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டிருக்கிறது.

விலை அணா - 6.

விபசார சம்சார விநோதம் அல்லது

அகட விகட விபசாரி.

சம்சாரிகளுக்குரிய கற்பிலக்கணத்திற்கு எதிர்மறையாக சிற்சில ஸ்திரீகள் அடிவீணத்தால் குடும்பத்திற்கும் மற்றவைக்கும் எறுமாருகவும் விபசாரத்தன்மையும் செய்வதால் அவர்களுக்குப் பிறகும் தற்காலத்தும் விளையும் தீங்கையும், பதிபக்தியையும், குடும்ப பரிபாலனத்தையும் விளக்கிக்காட்டி இம்மை மறுமைக்குரிய நன்னடையை அடையும் விவேகத்தை யெடுத்துக்காட்டி ஸ்திரீ கடைத்தேறவைக்கும் நூல் இதுவே.

விலை அணா - 8.

பி. எஸ். டி. எம். அண்டு சன்ஸ்,

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை

பதினெண்சித்தர்
திருவாய்மலர்ந்த
வாதக்கோவை.

முகவுரை.

கடல் சூழ்ந்த இந்த உலகத்தின் கண்ணே மனுஷ ஜென்மமே உயர்ந்தது. அந்தச் சென்மம் கிடைத்தபோதே யோகஞானங்களை அநுபவித்து மோக்ஷத்தைப் பெற வேண்டியது அவசியம். அந்த யோகஞானங்களைச் சாதனஞ் செய்வதற்காகத் தேகத்தை இறவாமற் பாதுகாக்கக் கற்பசாதனஞ் செய்யவேண்டும். அச்சாதனங் கைகூடத் திரவியம் வேண்டும். அந்தத் திரவியத்தைப் பலவகையாகத் தேடாதபடி இருந்தவிடத்திலிருந்தே சம்பாதித்துக் கொள்ளும்பொருட்டு "இரசவாதம்" என்னும் ஒரு அரியவித்தையை நூல்களின் வழியாக முன்னோர்கள் சொல்லி யிருக்கின்றனர். அந்த இரசவாதம் கைகூடப் பெறவேண்டியவன் இன்னலக்கினத்தானும் இன்ன கிரக வரிசையுடையவனுமாவான் என்பதையும் சொல்லி யிருக்கின்றனர். இப்படியெல்லாம் இருக்கப் பலபேர்களும் அந்தத் தெய்வீகமான இரசவாதத்தைச் செய்யப்புகுந்தால் அது கைகூடுமோ? கூடாது. இதுநிற்க,

மேலே சொன்ன இரசவாதங்கள் இதுவரைக்கும் ஆங்காங்குச் சிதறிப் பிழைபட்டுப் பலவகையாக இருப்பதால் அவைகளை அவரவர்கள் மனம்போனபடியேசெய்து, இருக்கிற திரவியத்தை யிழப்பதுமல்லாமல் தேககஷ்டத்தையும் பெற்றுத் தடுமாறுகின்றனர். ஆகையால், என்னால் ஆனவரைக்கும் அவைகளிற் சிலவற்றை எடுத்துத் திருத்தி அவைகளுக்குத் தக்கவாறு நான் பெரியோர்கள் மூலமாகக் கேட்டபடியே ஒருவிதமாக அர்த்தமும் எழுதி "வாதக் கோவை" என்றுபேரிட்டு ஒருநூல் அச்சிட்டேன்.

வாதசித்தியடைவோர் இலட்சணம்.

பாயிரம்.

பார்த்திடவே நந்தீசர் மூலமூர்த்தி
பண்பான வகத்தீசர் சட்டைநாதர்
கோர்த்திடவே பதஞ்சலியுங் கூனர்கண்ணர்
கோரக்கர் கமலமுனி சண்டிகேசர்
கூர்த்திடவே யிடைக்காடர் சிவாயசித்தர்
கொங்கணைய ரவர்தந்தை போகநாதர்
கார்த்திடவே மச்சமுனி புண்ணாக்கீசர்
காலாங்கி சுந்தரருங் காப்புத்தானே.

(பொழிப்புரை.) கயிலாசத்திற்கு முதற்காவலரான) நந்தீஸ்வரரும், திருமூலரும், அகஸ்தியரும், சட்டைநாதரும், பதஞ்சலியாரும், கூனரும், அழுகண்ணரும், கோரக்கரும், கமலமுனியாரும், சண்டிகேசரும், இடைக்காடரும், சிவவாக்கியரும், கொங்கணரும், அவர் தகப்பனரான போக

ரும், மச்சமுனியாரும், புண்ணாக்கீசரும், காலாங்கிநாதரும், சுந்தராநந்தரும் (ஆகிய பதினெண்சித்தர்களும்) இந்த நூலைப் பாதுகாக்கவேண்டியது, எ-று. (1)

வானைத்தா வியபொதிகை மகத்தான
  சித்தியுடைய வாக்குநேர்மை
பானைத்தா வியபூசைப் பரிவான
  சிவயோகப் பண்போர்கேளும்
மீனைத்தாவியராசி விளங்கிநின்ற
  கன்னிமுதல் வில்லுமேடம்
சேனைத்தா வியதுலாச் சென்மரா
  சிக்கருவைச் செப்புறேனே.

(பொ-ரை.) ஆகாயம் வரைக்கும் உயர்ந்து நீண்டிருக்கின்ற பொதிகைமலையில் எழுந்தருளி யிருக்கும் அகஸ்திய முனிவர் திருவாய்மலர்ந்த பூசாவிதியை, சிவயோக சாதனையுள்ள பெரியோர்களே நீங்கள் கேட்பீராக. (அது என்னவென்றால்) கன்னியாராசிமுதற்கொண்டு, தநுசுராசி, மேஷராசி, துலாராசி ஆகிய இந்தச்சென்மராசிகளின் மூலக் கருத்தைச் சொல்லுகின்றதை, எ-று. (2)

செப்புகிறேன் துலாத்தோர்க்குத் தேவிமுதல்வாசி
  சிவனொடு மந்திரங்க ளெல்லாஞ்சித்தி
ஒப்புகிறேன் குளிகைசித்தி வாதஞ்சித்தி
  உகந்துநின்ற காயசித்தி யுறுதியாகும்
தப்புகிறே னென்றாலும் தவறொட்டாது
  சாதகமாய் வாசனையாய்த் தானேதாக்கும்
கொப்புகிறே னுலகத்தில் கசிதைகூடப்பெற்று
  கொடியசிவ யோகியெனக் கூறுவாரே.

(பொ-ரை.) யாரொருவர் துலாராசியில் பிறந்தாரோ, அவர்களுக்கு, தேவிமுதலாகவாசி, சிவன், மந்திரங்கள்,

குளிகை, இரசவாதம், இவைகளும், காயத்தை அழிவு படாதபடி நிறுத்துவதும் ஆகியசித்திகள், அவர்களுக்கு வேண்டாமென்றாலும் தவறாமல் கைகூடும், (ஏனென்றால்) அவர்கள் பிறந்தராசியின் வாசனையாலாகும். இவர்கள் உலகத்தில் பத்துத்திசைகளையும் கிரமமாகக் குருவருளாற்பெற்று மற்றவர்களால் சிவயோகிகளெனக் கொள்ளப்படுவார்கள், எ-று. (3)

கூறியதோர் கன்னிமுதல் மீனத்தோர்தான்
கோடியவர் வணிகரைப்போல் கூர்ந்துசெய்வார்
ஆறியதோர் மனம்பார்த்துப் பின்புகொள்வார்
ஆசைகொண்டு வெகுமனதா யாலோசிப்பார்
தேறியதோர் வாசியிலே தூண்டிநிற்பார்
தேவியவள் பூசையிலே திறமோ கொஞ்சம்
மாறியதோர் மனம்பிடித்தால் வாதஞ்சித்தி
மயக்கமற்றாற் காயசித்தி மருவுந்தானே.

(பொ-ரை.) சொல்லுகின்ற கன்னியா லக்கினத்தில் பிறந்தவர்களும், மீனலக்கினத்தில் பிறந்தவர்களும், அதிகமான வர்த்தகங்கள் செய்வார்கள், மனத்தில் ஒன்றின் மேல் எண்ணம்வைத்தால் அதைத்திர ஆலோசித்து செய்வார்கள், சரமாறுதலான யோகாப்பியாச வழியாகிய வாசிப்பழக்கத்தில் அதிக தீவிரதரமுடையவர்களா யிருப்பார்கள், ஆனால் சத்திபூசையில் கொஞ்சம் உறுதியிருக்குமேயொழிய மிகுதியும் இராது. அப்படி இருந்தாலும் அவர்களுக்குப் பலவகையாக ஓடுகின்ற மனமானது ஒடுங்கி நிற்கும்பட்சத்தில் இவ்விடத்தில் சொல்லப்பட்டுவருகின்ற இரசவாதமானது கைகூடும், மனமாய் கைநீங்கினலோ (காயத்தை உறுதிப்படுத்துவதான காயசித்தியும் உண்டாகும், எ-று (4)

தானென்ற கடகமுதல் தநுசோர்களு
சாதகமாய்க் கொண்டேறித் தாயைப்போற்றி
வானென்ற சமாதியிலே நின்றுதேறி
வாதசித்தி வாசிசித்தி வரவேசெய்வார்
கோனென்ற குருபதத்தை யடுத்துக்காப்பார்
குறையாமற் சாத்திரத்தைத் தேடிவைப்பார்
வேனென்ற மாய்கையிலே மனதுகொள்வார்
வேதாந்த சாத்திரத்தில் விளங்குவாரே.

(பொ-ரை.) கடகலக்கினத்தில் பிறந்தவர்களும் தநுர் லக்கினத்தில் பிறந்தவர்களும், ஆருதார யோக நிலைகளைப் பழக்கமாயேறுவதுபோலேறிப் பிரமபீடத்தி லெழுந்தருளி யிராநின்ற மனோன்மணித் தாயை நமஸ்காரஞ்செய்து சமாதியோகத்தை அடைந்திருப்பார்கள். அவர்களே இரசவாதத்தையும் வாசிமார்க்கத்தையும் கைகூடும்படி செய்து கொள்வார்கள். குருவுபதேசப் பிரகாரமிருந்து அவரை இடைவிடாமல் நமஸ்காரஞ்செய்வார்கள் அதிகமாகச் சாஸ்திரங்களைச் சம்பாதித்து வைப்பார்கள். மாயா விஷயத்தில் மனதைச் செல்ல விடமாட்டார்கள். எப்பொழுதும் வேதாந்த மார்க்கத்திலேயே பழகிக்கொண்டிருப்பார்கள், எ-று. (5)

விளங்கிநின்ற மற்றேழு ராசியோர்கள்
வெறும்பேச்சாய்த் திரிவார்கள் சித்தியில்லை
புளங்கிநின்ற பூசைக்குள் வருவேனென்பார்
புகுந்தாலு மாயத்தே புணர்ச்சிசெய்வார்
தளங்கிநின்ற வாதத்தைச் சட்டமாய்வார்
சாத்திரமுங் குருத்தேடார் தானேயென்பார்
அளங்கிநின்று மலைவார்க ளறிந்துகொள்ளா
ரவரேழு ராசியோ ரறைந்திட்டேனே.

(பொ-ரை.) (மேற்சொன்ன ஐந்துலக்கினமும் போக) இன்னும் இருக்கின்ற மேஷம், ரிஷபம், மிதுனம், சிங்கம், விருச்சிகம், மகரம், என்கிற ஏழுலக்கினத்தில் பிறந்தவர்களெல்லாம் வீண்பேச்சுப்பேசித் திரிவார்களேயொழிய இரசவாதமும், ஞானமார்க்கமும், இன்னும் தேவிபூசை முதலியவைகளும் சித்தியடைந்தவர்களாக மாட்டார்கள், ஆனால் அவர்கள் பலவகையான பூசைகளையும் செய்வேனென்று சொல்லித் திருட்டுச் சோரத்துவம் செய்வார்கள், இரசவாதத்தைச் சுட்டுச்சுட்டுக் கெடுவார்கள், சாஸ்திரவிசாரணை செய்யமாட்டார்கள், குருபதேசம் அடையும் நிமித்தம் போதனை குருவைத் தேடமாட்டார்கள். எல்லாம் தாங்களே யென்பார்கள். இன்னும் மயக்குகின்ற பலவகையான நியாயங்களை யெல்லாம் செய்வார்கள், ஆகையால் மேற்சொன்ன ஏழுலக்கினத்தில் பிறந்தவர்களுடைய குணகுணங்களை மாணாக்கனாகிய நீ அறிந்து கொள்வாயாக, எ-று. (6)

அறைந்திட்ட ராசிக்கு விபரங்கேளா
　யப்பனே யுத்திரமு மத்தத்தோடு
நிறைந்திட்ட சித்திரையுஞ் சுவாதியானால்
　நிலைக்குமடா காயசித்தி யோகசித்தி
பறைந்திட்ட மூலமுத லாத்திராடம்
　பாங்கான வசுபதியும் பரணிதானும்
உறைந்திட்டு நின்றதோ ருத்திரட்டாதி
　யுத்தமனே ரேவதியு மெத்தநன்றே.

(பொ-ரை.) மிகவும் புனிதனான புலத்தியனே நான் சொல்வதைக்கேள் மேலே சொன்ன லக்கினங்களோடு சேர்ந்தால் நன்மையை யடையத்தகுந்த நட்சத்திரங்கள் எவையென்றால் உத்திர நட்சத்திரமும், அஸ்த நட்சத்திர

மும், அஸ்த நட்சத்திரமும், சித்திரை நட்சத்திரமும் சுவாதி நட்சத்திரமும், மூலநட்சத்திரமும், உத்திராட நட்சத்திரமும், அசுவினி நட்சத்திரமும், பரணி நட்சத்திரமும், உத்திரட்டாதி நட்சத்திரமும், ரேவதி நட்சத்திரமும் யோகசித்தி பெறுவதற்கும், காயசித்தி பெறுவதற்கும், இரசவாதசித்தி பெறுவதற்கும் ரொம்பவும் நன்மையான நட்சத்திரங்களாகும், எ-று. (7)

இரச்வாதசித்தி வருவித் தெழுதப்பட்டது.

நன்றான கோளோடு ராசியானல்
நரசெனன மில்லனடா சித்தன் சித்தன்
கன்றான கொள்கின்ற ராசிதொட்டு
கண்டுகொள்ளா யங்கிசத்தின் பலத்தைச் சொல்
ஒன்றான கர்க்கடக வங்கிசத்தி [வேன்
உத்தமனே மதிநிற்க வேண்டும் வேண்டும்
தன்றான துலாவான வங்கிசத்தில்
சகல சித்தாஞ் சுக்கிரன்று னிருக்கப்பாரே.

(பொ-ரை.) மேலேசொன்ன நல்ல லக்கினங்களில் சுபக்கிரகங்கள் இருக்குமானல் அவன் நரசென்மத்தில் பிறந்திருக்கிறவனானலும், நரனாகமாட்டான் சித்தனவான். ஆகையால் அந்தந்த லக்கினத்தில் கிரகங்கள் நிற்கவேண்டிய முறையைச் சொல்லுகிறேன் தெரிந்து கொள்ளுவாயாக. (அவை எவையென்றால்) மேலேசொன்ன கடகலக்கினத்தில் சந்திரன் இருக்கவேண்டும். துலாலக்கினத்தில் சுக்கிரன் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் அந்தச்சாதகன் சகலசித்திகளையும் அடைவான். நீ பரிட்சிக்கவேண்டுமானல் பரீட்சித்துப்பார், எ-று. (8)

பாரப்பா தநுசாகு மங்கிசத்தில்
பாங்கான வியாழந்தா னிருத்தனன்று

நேரப்பா விருச்சிக வங்கிசத்தில்
நேர்ந்ததொரு செவ்வாய்தா னிருந்தனன்று
வேரப்பா சிங்கமென்ற வங்கிசத்தில்
வேதாந்த விதிநிற்க மெத்தநன்று
காரப்பா கும்பமென்ற வங்கிசத்தில்
காரிநின்றால் காயசித்தி கைக்குள்ளாச்சே.

(பொ-ரை.) தநுர்லக்கினத்தில் வியாழனிருந்தால் நல்லது விருச்சிக லக்கினத்தில் அங்காரக னிருந்தால் நல்லது. சிம்மலக்கினத்தில் புதன் இருந்தால் நல்லது. கும்பலக்கினத்தில் சனி இருந்தால் நல்லது (என்ன நல்லதென்றாலோ) காயசித்தி, வாதசித்தி, யோகசித்திகள் கைகூடுமென்பதற்கேயாம், எ-று. (9)

ஆச்சப்பா கன்னியென்ற வங்கிசத்தி
லாச்சரியம் புதனின்றால் ஞானியாவான்
மாச்சாப்பா விப்படியே யங்கிசங்கணின்றால்
மாசித்தன் மாசித்தன் வாதஞானி
ஒச்சப்பா விதைவிட்டு வரவுவீட்டி
லுயர்ந்துநின்ற வங்கிசத்தில் கிரகம்நின்றால்
மூச்சப்பா வற்றிடத்தே வாசிசித்தி
மூதண்ட காயசித்தி யாகுந்தானே.

(பொ-ரை.) கன்னியாலக்கினத்தில் புதனிருந்தால் அவன் ஞானவானவன். மேலேசொன்ன பிரகாரமே ஒவ்வொரு லக்கினத்திலும் ஒவ்வொரு சுபக்கிரகங்கள் இருந்தால் அவன் சித்தனாகவும் இரசவாதஞ் சித்திக்கப்பெற்றவனாகவும், ஞானவானாகவு மிருப்பான். (இதுவுமல்லாமல்) பாக்கிய ஸ்தானாதிபதியானவன் அந்தப் பாக்கியஸ்தானத்திலேயே யிருப்பானேயானால் அவனுக்கு வாசிசித்தியும், காயசித்தியும், உண்டாகும், எ-று.

இப்படியெல்லாம் இரசவாதசித்தியை யடையவிரும்பு வோனுக்கு இலட்சணங்கள் சொல்லியிருப்பதால் எல்லா ருக்குமே அந்த இரசவாதம் சித்தியாதென்பது உண்மை யே. அப்படியிருக்க இந்நூல் என் பதிப்பித்தனை என் றால் ஆ! நன்று வினவினாய்; அந்த இலட்சணத்தோடு கூடி யவர்களும் தத்தம் மனதுக்கேற்றபடி செய்து வருந்தா திருக்கும்படி இந்நூலை வெளியிட்டோம் என்க. இனிநூல் வருமாறு (10)

முற்றிற்று.

கைகமுறை

பாக்கெட் வைத்தியம்.

சுமார் 30-வருஷகாலமாக கைமுறையாக சுருதி, யுக்தி, அநு பவத்துடன் கைபாகம் செய்பாகம் தீட்சைபாகம் தவறாமல் செய்து முடித்து பலருக்கும் கொடுத்து பூரண சௌக்கியம் உண்டாகி எங் கும் பிரபலமான அநேக முறைகளை உலக பரோபகாரமாக இதில் எழுதியிருக்கிறது. ஒவ்வொருவரும் எவ்வித நோய்கள் வந்தபோதி லும் ஆபத்துகாலத்தில் வைத்தியரை தேடாமலே இதிலுள்ள ஔ ஷதமுறைகளை நம்பிக்கையாக செய்து சௌக்கியத்தை ஆச்சரியப் படத்தக்கவிதமும் அடையலாம். இது ஒவ்வொரு குடும்பங்களிலும் அவ சியமாக கையிருப்பில் இருக்கவேண்டியதாகும். எப்போதும் ஜேபி யில் மடியில் இருப்பதற்காக சிறிய பாக்கெட் சைஸில் அழகிய பயி ண்டுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது. போலி புத்தகங்களை வாங்கி யேமாறாமல், கைமுறையென்றும், சுந்தரவிலாசம் அச்சுக்கூடத்தில் பதிப்பித்ததென்றும் கவனித்து வாங்குங்கள்.

விலை ரூபா—1 0 0

பி. எஸ். டி எம் அண்டு, சன்
வேப்பேரி ரோடு, மதராஸ்.

ஸ்ரீ நந்தீஸ்வரர்

திருவாய் மலர்ந்தருளியவை

காப்பு

வாத முறையை வகையா யுரைக்கப்
போதவானை பொன்னடி பணிவாம்.

கறியுப்புக்கட்டு.

பணித்திடவே செவந்தகுரு மானைப்போலும்
பார்த்தரைத்தே யுப்புக்குக் கவசஞ்செய்து
எணித்திடவே சிலைமண் கஜபுடத்தி
லிட்டிடவே கறியுப்புக் கட்டிப்போகும்
துணித்தகறி யுப்பதிலே கழஞ்சதொன்று
சொல்லாதி லிங்கமது வராகனென்று
விணித்த தாளகமொன்று வீரமொன்று
வெடியுப்புச் சினமிவை வராகனென்றே.

(பொ-ரை.) காட்டில் திரிகின்ற மானைப்போல் ஒருவகையாகச் செவந்திருக்கின்ற குருவண்டு என்று சொல்லும் ஜெந்துவைக்கொண்டுவந்து ஒருபலம் உப்புவுக்கு 5-பலம் ஜெந்துவை அரைத்துக்கவசஞ்செய்து ஏழுசிலைமண்செய்து 10-வரட்டியில் புடம்போட மேற்படி உப்புக்கட்டிப்போகும். அதை அப்படியே வைத்துக்கொண்டு வேறே கறியுப்பு ஒன்றேகால் வராகனெடையும், சாதிலிங்கம் ஒருவராகனெடையும், தாளகம் ஒருவராகனெடையும், வீரம் ஒருவராகனெடையும், வெடியுப்பு ஒருவராகனெடையும், சினகாரம் ஒருவராக னெடையும் நிறுத்து வைத்துக்கொண்டு, எ-று.

ஒன்றுவரா னெடைவீதம் பழச்சாற்றாலே
யுற்றரைத்துக் கட்டுப்பு மேலேபூசி
அன்றுரவி காயவிட்டுக் குகையிலிட்டே
யந்தவாய் வட்டோடு மூடிமண்செய்
நின்றுசாயங்காலம் காடாக்கினியெரித்து
நீயெடுத்துப்பார்க்கவே களங்கதாச்சு
வென்றி தாமிரமொன்று வெள்ளிநாலு
வேதித்து மட்டயிட்டுப் பாருவேதை.

(போ-ரை.) மேலேசொன்ன சரக்குகளையெல்லாம் கல்வத்திற்போட்டுப் பழச்சாறுவிட் டரைத்து மெழுகுபதமான போதுமுன்னே கட்டிவைத்திருக்கின்ற உப்புக்கட்டுக்கு மேலேபூசி அன்றைக்கெல்லாம் வெயிலில் காயவைத்துப் பிறகு அந்தக்கட்டை ஒருமூசைக்குள் இட்டு மேலே ஓடுமூடிச் சீலைமண்செய்து ஒருவாயகன்ற சட்டிக்குள் மணல்கொட்டி, அந்தமணலுக்கு நடுவில் இந்தமூசையை வைத்து மேலும்மணல்கொட்டி மேல்சட்டிமூடிச் சீலைமண் செய்து அன்று சாயங்காலமே காடாக்கினித் தீயிட்டு எரித்துச் சட்டி நன்றாய்ச் செவந்த பக்குவத்தில் ஒருவிலக யான நாற்றம் உண்டாகும், அந்தச்சமயத்தில் மேலே சொன்ன சட்டியை யிறக்கி ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் பிரித்துப்பார்க்க களங்காயிருக்கும் இதை வைத்துக்கொண்டு, நன்றாய்ச் சுத்திசெய்த செம்பு ஒருபங்கும் வெள்ளி நாலுபங்குமாகச் சேர்த்து இரண்டையும் உருக்கி அவைகள் உருகி நன்றாய்க்கலந்து கண்விட்டாடுஞ் சமயத்தில் மேற்படி களங்கில் ஒருபங்கு எடுத்து அதில்போட்டு ஊதினால் பழுத்து நிற்கும், பிறகு இதையெடுத்து மாற்றுப்போட்டுக்கொள்ளலாம், எ-று. (2)

வெள்ளிமுறை.

வேதையிது களங்கமா யுருகாதின்றால்
வேதைக்குத் தடவிவிடு சாவாது தன்னை
பாதையிஃ துருகிவிடும் பார்காணாமல்
பண்புபெறச் செய்விப்பாய் பாரோர்க்கெல்லாம்
காதையிதா பின்னமொரு போக்குக்கேளு
கடியசெருப் படிச்சாறு சின்னிச்சாறு
தாதையிலே கர்ரையிலைச் சாறுழக்கு
சாறுவகைக்காரு மிலுப்பை நெய்கால்.

(பொ-ரை) முன்சொன்ன உப்புக்களங்கானது நன்றாய் உருகாவிட்டால் வேதைக்குக் குருமருந்தில் கொஞ்சம் எடுத்துத் தடவி விட்டால் நன்றாய் உருகி மாற்றுக்காட்டும் இதுநிற்க (வேறுவெள்ளி செய்யும்படியான வகையைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக, எப்படியென்றால்) சிறுசெருப்படி என்னும் இலைச்சாறு உழக்கும் இலுப்பைநெய் கால் வீசையுமாகத் தயார்செய்து வைத்துக்கொண்டு, எ-று. (3)

நெய்தனிலே வெள்ளீயம் பலமொன்றாக
நீயுருக்கி யயக்கரண்டி தன்னிலேதான்
மெய்தனிலே மூன்சாறு மூன்றுமொன்றாய்
விட்டதிலே யுருக்கிச்சா யிருபத்தொன்று
பெய்தனிலே பின்னுமம் முறையேசெய்யிற்
பிசகாமல் முன்னிருபத் தொன்றுமுறையே
கைதள்ளிச் சாய்க்கையிலே சுத்தியாச்சு
கனகார மிட்டுருக்க வெள்ளிதானே.

(பொ-ரை.) முன்சொன்ன சாறுகளையெல்லாம் ஒன்றாய்க்கலந்து அந்தச்சாற்றில் ஒருபலம் வெள்ளீயத்தை இரும்புக் கரண்டியிலிட்டு உருக்கி உருக்கி இருபத்தொரு

தரம் சாய்த்து பிறகு இலுப்பை நெய்யிலும் அந்தமாதிரி யாகவே இருபத்தொருதரம் உருக்கியுருக்கிச் சாய்த்தால் அந்த வெள்ளீயமானது சுத்தியாகும்பின்பு அப்படி சுத்தியாய் முடிந்திருக்கும் வெள்ளீயத்தில் வெங்காரத்தைக் கொடுத்து உருக்கினால் அந்த ஈயமானது வெள்ளியாகும், எ-று.

ஆனால், ஈயத்தில் வெங்காரத்தைக் கொடுப்பதற்கு அளவு வாதகுரு முகாந்தரத்தில் தெரிந்துகொள்ள வேண்டியது. (4)

அயக்களங்கு.

வெள்ளியைவிட் டிரும்புருகல் வராகனொன்று
விதமிகுந்த தங்கமது வராகனொன்று
துள்ளியைவிட் டிரும்புருகு முகத்தில்தங்கம்
கூட்டிடவே யுருகுமதின் பின்புகேளு
தள்ளிவிட்டுக் கட்டியதோர் சாதிலிங்கம்
தாக்கிப்பார் கொடுத்திடவே களங்கமாகும்
நள்ளிவிட்டுக் களங்கதனை வெள்ளீயத்தில்
நாட்டிடவே பத்தரையுங் காணும்பாரே.

(பொ-ரை.) (முன்சொன்ன வேதைதனிற்க வேறுகளங்க மூலமாகச் சொல்லுகின்ற வேதையைக் கேட்பாயாக எப்படியென்றால்) இரும்புச்சிட்டம் ஒரு வராகனெடையும், தங்கம் ஒரு வராகனெடையும் தயார்செய்து வைத்துக் கொண்டு, பின்பு அந்த இரும்புச் சிட்டத்தை மூசையி லிட்டு உருக்கி, அது உருகிக் கண்விட்டாடும்போது மேற்படி தங்கத்தைக்கூட்ட இதுவு முருக்கிக்கலந் திருக்கும், அப்படிக்கலந்து களங்கமான மருந்தையெடுத்து வைத்துக்கொண்டு (வேறுசாஸ்திரங்களின் மூலமாக நன்றாகக் கட்டப்பட்டுள்ள சாதிலிங்கத்தில் முன் உருக்கியெடுத்த

களங்கத்தில் கொஞ்சம் கொடுத்துருக்க அந்தலிங்கம் களங்கமாகும்) அப்படி களங்கமான லிங்கத்தை வெள்ளீயத்தில் கொடுத்து ஊதிப்பார்த்தால் பத்தரைமாற்றுன பொன்னய் நிற்கும். (இதையெடுத்துச் சோதித்துப்பார்த்துக் கொள்ளலாம்) எ-று.

ஆனல் ஒருமருந்தில் ஒருமருந்தைக் கொடுத்து உருக்குவதற்கும், ஊதுவதற்கும் சேர்க்கவேண்டிய அளவை குருமுகாந்தரத்திலாணலும், நூல்முகாந்தரத்திலாணலும், அநுபவமுகாந்தரத்திலாணலும் தெரிந்துகொள்ள வேண்டியதாம் என்று முன்னோர்கள் சொல்லக் கர்ணபரம்பரையாகக் கேட்டிருக்கின்றபடி நடந்துகொள்ள வேண்டியது. (5)

வெடியுப்புக்கட்டு.

காணுமடா வங்கங்குத்தி யூதிப்போடு
கடைசியிலே யின்னமொரு வகையைக்கேளு
பூணுமடா வெடியுப்புக் கழஞ்சதொன்று
புகழான நவாச்சாரம் கழஞ்சதொன்று
ஆணுமடா விரண்டையுந்தா னரைத்துப்பில்லை
யருஞ்சிறிய குகையினில்வைத் தோடுமூடி
நாணுமடா சீலைசெய்து புடமிட்டப்பா
நவாச்சாரம் வெடியுப்புங் கட்டிப்போச்சே.

(பொ-ரை.) முன்பத்தரைமாற்றுன பொன்னில் வங்கத்தையிட்டுருக்கினல் சுத்தமாய்விடும். அதுநிற்க வேறு வெடியுப்புக்கட்டினைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக எப்படியென்றால்) ஐஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு ஒன்றேகால் வராகனெடையும், நவாச்சாரம் ஒன்றேகால் வராகனெடையும், எடுத்து இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து

நன்றாயரைத்துப் பில்லைதட்டி மூசையில் வைத்து மேலே ஓடுமூடி மண்சிலை ஏழுசெய்து உலர்த்தி ஒரு அளவாக வறுட்டி யடுக்கிப் புடம்போட்டால் இரண்டும் ஒன்றாகச் சேர்ந்து கட்டிப் போகும், எ-று. (6)

கட்டியதைக் குழிக்கல்லி லிட்டுக்கொண்டு
கனமான கர்ப்பூரம் கழஞ்சு மரையாக
இட்டிடக் கழஞ்சுபச்சை நவாச்சார
மியலான கொழுப்புசற்றே கூடவிட்டுக்
கட்டியைத்தான் கறண்டிதனி லிட்டுக்கொண்டு
கனலிலிடு தீவெதுப்பிக் கழஞ்சுசெம்பு
விட்டிடு மஞ்சாடியிட்டுச் செம்புமூன்று
வெள்ளி யேழிருக்க மாற்றாறுதானே.

(போ-ரை.) முன்னே கட்டிப்போன வெடியுப்புக்கட்டை வேறே வைத்துக்கொண்டு அதற்காக இரசகர்ப்பூரம் உஹூ, வராகனெடையும், நவாச்சாரம் உஹூ, வராகனெடையும் கொஞ்சம் பூநீறு காய்ச்சும்போது உண்டாகும் கொழுப்பும், ஆக மூன்றையும் ஒன்றாகச்சேர்த்துக் கல்வத்திலிட்டு அரைத்துக் காம்புநீண்ட கறண்டியில் வழித்துப்போட்டு அடுப்பிலிட்டு உருக்கி உருகும்போது கவ-வராகனெடை சுத்திபண்ண செம்பும், முன் கட்டின வெடியுப்பு, ஒரு மஞ்சாடியும் இட்டு நன்றாயுருக்கி வேறே வைத்துக்கொண்டு, சுத்திபண்ண செம்புமூன்றெடையும், வெள்ளி ஏழெடையும் சேர்த்து உருக்கி உருகும் பக்குவத்தில் முன் கரண்டியில் பாகப்படுத்தினமருந்து ஒரு எடைகொடுத்து உருக்கி எடுத்துக்கொள்ள ஆறுமாற்றுக் கொடுக்கும்படியான வேதையாகும், எ-று. (7)

வங்கக்கட்டு.

தானான வீயமொன்று நாகமுக்கால்
தாய்முக்கால் தாரமுக்கால் துருசுமுக்கால்
ஏனான சம்பளத்தின் சாற்றரைத்து
ஈயத்தைப்பொதிந்துகொண்டு சீலைசெய்து
மானான கோழிபுட மிட்டெடுத்து
மஞ்சாடி யிதுவெள்ளி நாலுமாக
நானாக வுருக்குமாற் றாறுமாச்ச
நலமான நிறம்போனால் சாரமிட்டுருக்கே.

(பொ-ரை) வங்கக்கட்டினால் செய்யப்படும் வேதை வருமாறு: எப்படி என்றால், சுத்திசெய்த ஈயம் ஒருபலம் எடுத்துக்கொண்டு, சுத்திசெய்த சிறுகண் துத்தநாகம் முக்காற்பலம், வட்டப்பொன் முக்காற்பலமும், அரிதாரம் முக்காற்பலமும், மயில்துத்தம் முக்காற்பலமும் நிறுத்தெடுத்துக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச்சாற்றால் நன்றாயரைத்து, இப்படி அரைக்கப்பட்ட அந்தமருந்தினுள் முன்சொன்ன ஈயத்தைக் கட்டியாகவே வைத்து மேலேமருந்துமூடி எழுசீலைமண்செய்து (10) வருட்டியில் புடம் போட்டு எடுத்துப்பார்க்க முன் வங்கம் கட்டிப்போயிருக்கும். அப்படியிருக்கும் மருந்தில் ஒருமஞ்சாடியும், வெள்ளிநாலு மஞ்சாடியும் சேர்த்துருக்கிப்பார்த்தால் ஆறுமாற்றுப் பொன்னாகும். ஆனால் ஒருவேளை நிறங்கறுக்கும், அப்படி கறுக்காத முன்னமே மறுபடியும் வெங்காரம் கொடுத்து அதை யுருக்கினால் கறுக்காது எ-று.

இங்கே வங்கம் என்றது எந்த வங்கத்தையானாலும் எடுத்துக் கொள்ளலாம். (8)

ரசக்கட்டு நாகக்கட்டு.

உருக்கமுன் வங்கம்போற் கட்டுஞ்சூத
மொருகழஞ்சு மரிதாரங் கழஞ்சதொன்று
மிருக்கவே லிங்கமது கழஞ்சதொன்று
மிவைரண்டுஞ் செம்பருத்தம் பூச்சாற்றூட்டி
மருக்கவே குகைபிடித்துக் கட்டுஞ்சூதம்
வைத்துமுன் பூச்சாறு மூன்றுதுளிவிட்டு
குருக்கவே மேல்மூடி மண்குகைக்குள் வைத்து
குருவிட்டோ டிட்டிரண்டு சீலைசெய்யே.

(போ-ரை.) இது ரசக்கட்டினாலும், நாகக்கட்டினாலும் நடத்தும் வேதைகளைச் சொல்லுகின்றது. அவை வருமாறு எப்படியென்றால் முன்னர் வங்கத்தைக் கட்டியது போலவே இந்த இரண்டையும் கட்டி வைத்துக்கொண்டு பிறகு, அரிதாரம் (கவ) வராகனெடையும், லிங்கம் (கவ) வராகனெடையும் நிறுத்து இந்த இரண்டையும், செம்பருத்திப் பூச்சாறுவிட்டு அரைத்து மூசைசெய்து முன்னே கட்டிவைத்திருக்கும் இரசத்தில் (கவ) வராகனெடை எடுத்து இந்த மூசைக்குள்வைத்து முன் செம்பருத்திப் பூச்சாறு மூன்றுதுளிவிட்டு மேலே ஓடுமூடிச் சீலைசெய்து வேறு ஒருமண் மூசைக்குள்வைத்து மேல்மூடி (21) சீலைமண்செய், எ-று. (9)

சீலைசெய்து சிறுபுட மிட்டெடுத்துப்பாரு
செந்தூரம் வெள்ளிதனி லொருமாவீய
ஏலமென்ன மாற்றஃதே மூரையாக்காணு
மினியென்ன காட்டிடக முருகும்போது
மாலென்ன மேனிரசம் சுறுக்குத்தாக்கு
மைந்தனே செந்தூர மாகும்பாரு
பாலென்ன கழஞ்சுவெள்ளி யுருகும்போது
பார்த்தெடுத்து மஞ்சாடி செந்தூரமீயே.

(போ-ரை.) முன்போலவை சிலைமண்செய்து லகுபுடம் போட்டெடுத்துப்பார்த்தால் இந்த இரசமானது செந்தூரமா யிருக்கும் அந்தச்செந்தூரத்தில் ஒருமாவெடை யெடுத்து நாலுமாவெடை வெள்ளியை யுருக்கிக்கொடுத்தால் எழரைமாற்றுப் பொன்னுன வேதையாகும். (இதுவேறு) முன்பாட்டில் சொல்லியிருக்கிற நாகக்கட்டை மூசையிலிட்டு ஊதினல் இருகும். அப்படி அதுயுருகிக் கன்விட்டாடுஞ் சமயத்தில் குப்பைமேனிச்சாறு சுறுக்குக்கொடுத்தால் அந்தநாகம் செந்தூரமாகும். அந்தச் செந்தூரத்தில் ஒருமஞ்சாடி எடையெடுத்து (கவ) வராகனெடை வெள்ளியை யுருக்கி அதில் கொடுக்கவேண்டும். (10)

துருசுசுண்ணம்.

சயவே பத்தரை மாகும்பாரு
யின்னமொரு துருசினெடை கழஞ்சுக்கேதான்
மாயவே பச்சை கர்ப்பூரம் ரண்டு
மஞ்சாடி வீரங் கழஞ்சு ரண்டுக்கு
சயவே சங்குசுட்ட துடனே கேளா
யெலுமி மிச்சம் சாற்றிலிட்டுடனே கேளாய்
ஆயிந்தமருந் திரண்டும் பொடித்துச் சுண்ணும்
புத்தன்னீ ரித்ததிலே துருசுவையே.

(பொ-ரை) அப்படிகொடுக்கவே பத்தரை மாற்றுயுள்ள பசும்பொன்னுவதான வேதையாகும். இதைவிட்டு துருசு வேதையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக, எப்படியென்றால் மயில்துத்தம் (கவ) வராகனெடைக்கு, இரசகர்ப்பூரம் இரண்டுமஞ்சாடியும், வீரம் (கவ) வராகனெடையும் எடுத்து இந்த இரண்டையும் எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவைத்தெடுத்துப்பின்பு இந்த இரண்டையும் பொடிபண்ணி

ஒரு சட்டியிற்போட்டு அதின்மேற் கற்சுண்ணாம்பு கொட்டித்தாளித்து இறுத்த சலத்தில் முன்சொன்ன மயில்துத்தத்தை ஊறவைக்க வேண்டும். (11)

வெங்காரக்கட்டு.

வைத்துப் பின்னைந்துநாள் காயவைத்து
    வைக்கவே நீலகண்டர் வெள்ளையானார்
வெற்றியடா விந்தநீரு வேதைபாரு
    வெருசருக்கு வேதைகளிற் கொடுத்துப்பாரு
உற்றதொரு பொரிகாரக் கட்டைக்கேளு
    யொருகழஞ்சு பொரிகார நெல்லிக்கந்தம்
அற்றதொரு முக்கழஞ்சு தனிலிட்டேய
    யக்கரண்டி தனிலிட்டுக் காரக்கட்டே.

(பொ-ரை.) மேற்படியாக ஊறவைத்துப்பின் ஐந்துநாள் வரைக்கும் வெய்யிலில் வைத்துக்கொண்டு வந்தால் அந்த மயில்துத்தமானது வெள்ளையாய் வெளுத்துப் போகும். அப்படி வெளுத்த இந்தச் சுண்ணமானது ரொம்பவும் காரமுடையது. ஆகையால், இதை வேதையின் மார்க்கப்படி (செம்பு நாலுபங்கு, வெள்ளி யொருபங்கு, இந்த மருந்து ஒருபங்காகக் கொடுத்து உருக்கினால் பழுப்பாகும்) இது நிற்க இனி வெங்காரக்கட்டுதலாகின்ற வேதையைச் சொல்லுகின்றேன். கேட்பாயாக, எப்படியென்றால், வெங்காரம் ஒன்றேகால் வராகனெடையும், நெல்லிக்காய்க்கந்தகம் மூன்றேமுக்கால் வராகனெடையும், ஒன்றாய்க்கூட்டி இரும்புக்கரண்டியில் போட்டு உருக்கி வெங்காரத்தைக் கட்டவேண்டியது, எ-று. (12)

காரத்தின்கட்டிதனைப் புரட்டிமுந்நாள்
    காயவைத்துப் பிறகெடுத்துப் பொறுக்கைத்தள்ளி

வாரத்தின் முன்னரிட்டுக் கொதிக்கும்போது
மறுபடி காரம்புரட்டி ரவியினில்வைத்
திரமது விரண்டுநாள் காய்ந்தபின்ன
ரிறுகவதைக் கட்டிவிடு மதையெடுத்துச்
சூரத்து வெள்ளியுநால் காரமொன்று
கூட்டிடவே சோதியது தங்கமாமே.

(பொ-ரை.) முன்சொன்ன கந்தகமானது உருகும்போது அதில் வெங்காரத்தைப் புரட்டிப் புரட்டிக் கந்தகம் ஆய்விட்டபின்பு மூன்றுநாள் வரைக்கும் அந்தப் புரட்டின வெங்காரத்தைக் காயவைத்துப்பிறகு எடுத்துப்பார்த்தால் மேலெல்லாம் பொறுக்குப் பொறுக்காயிருக்கும். அந்தப் பொருக்குகளை யெல்லாம் தள்ளிப் போட்டு மறுபடியு முன்போலவே கந்தகத்தை யுருக்கி அதுகொதிக்கும்போது முன் புரட்டின வெங்காரத்தை மறுபடியும் அதில் புரட்டி இரண்டுநாள் வெய்யிலில் உலர்த்திக் காய்ந்தபின்பு பார்த்தால் இந்தக் கந்தகமானது வெங்காரத்தை இறுக்கி கட்டியாக்கிக் காண்பிக்கும். அந்தக் கட்டியையெடுத்து நாலுபங்கு வெள்ளியையுருக்கி இதில் இந்தக்கட்டு ஒருபங்கு கொடுத்தால் இரண்டுங்கலந்து தங்கமாகும் வேதையாகும், எ-று. (13)

நந்தீஸ்வரர் வாதம்

முற்றிற்று.

வேறு

கந்தகத் தைலம்.

காணப்பா கந்தகத்தின் தயிலஞ்சொல்வேன்
கைமுறையாய்க் கந்தகமும் பலமும்பத்து
பூணப்பா கல்வத்தில் போட்டுக்கொண்டு
புகழான வெள்ளைத் தாமரைப்பூச் சாற்றால்
தோணப்பா விருபதுநாள் நன்றாயாட்டித்
துகளான வழிஞ்சில்விதை பலமும்போடு
ஊணப்பா மூன்றுநா ளரைத்துவாங்கி
புத்தமனே நன்றாக வுலர்த்திடாயே.

(பொ-ரை.) கந்தகத்தயிலத்தால் செய்யப்படும் வேலை யாவது: எப்படியென்றால், சுத்திசெய்த நெல்லிக்காய்க் கந்தகம் பத்து பலத்தைக் கல்வத்தில்போட்டு வெள்ளைத் தாமரைப்பூக்கொண்டுவந்து இடித்துச்சாறெடுத்து இருபது நாள் வரைக்கும் (நாளொன்றுக்கு நாலுநாழிகை விகிதமாக) நன்றாயரைத்துப் பின்னர் இருபத்தோராவதுநாள் காலையில் ஒருபலம் இறங்கழிஞ்சில் விதையை முன்னரைத்துள்ள கந்தகத்துடன்சேர்த்து மூன்றுநாள் வரைக்கும் முன்மாதிரியே யரைத்து வெய்யிலில் வைத்து உலர்த்தி விடவேண்டும், எ-று. (1)

உலர்த்தியல்லோ குப்பையிலே போட்டுநீயு
முத்தமனே குப்புக்குச் சீலைசெய்து
கலர்த்தியல்லோ குப்பியின்வாய்க் கப்பிவைத்து
கட்டியதோர் சட்டியிலே நடுவேவைத்து

மலத்தியல்லோ வையாமற் கவிழ்த்துக்குப்பி
வைத்தல்லோ கட்டியதின் தமருக்குள்ளே
தளர்த்தியல்லோ சீலைசெய்து சந்துக்கெல்லாம்
சார்வாகக் குப்பியின்மேல் மணலைப்போடே.

(பொ-ரை.) இப்படிசெய்து உலர்த்தின மருந்தைக் கா
சிக் குப்பியில்போட்டு அந்தக்குப்பிக்குச் சீலைமண்செய்து
அந்தக் குப்பியின்வாயில் சிறுகம்பி ஒன்றுவைத்து ஒரு
குடைவு சட்டிமேற்படி குப்பியின்வாய் பிடிக்கும்படி
துவாரஞ்செய்து அந்தக் குப்பியை அந்தவாய்க்குச் சரிப்
படுத்தி நன்றாகச் சீலைமண்செய்து அந்தச் சட்டியிலுள்ள
குப்பி நன்றாய் மறையும்படி அந்தச்சட்டி நிறைய வெள்ளை
மணலைப்போட்டு நிறைத்து வைத்துக் கொள்ளவும், எ-று.

போட்டல்லோ மணல்மேலே புடத்தைப்போடு
புகழான சட்டியைத்தான் மூக்கவரில்வைத்து
நீட்டியல்லோ குப்பிதனின் மூக்கிற்குள்ளே
நேராகப் பீங்கானை வைப்பாயப்பா
மூட்டியல்லோ தயிலமெல்லாம் பீங்கானில்விழும்
முறையாக விழுமட்டும் புடத்தைப் போடு
ஆட்டையிலே தயிலத்தில் சவர்க்காரம்போட்
டப்பினல் தருசின்மேல் வெள்ளையாமே.

(பொ-ரை.) மணலால் அந்தச் சட்டியை நன்றாக நிறை
யப்பண்ணிக் கீழே மூன்று பெரியகல்லை அடுப்புப்போல்
வைத்து அந்த அடுப்பிற் குள்ளாக ஒரு பீங்கான் வைத்து
அந்த அடுப்பின்மேல் மேற்படி சட்டியை வைத்து அந்தச்
சட்டியிலிருக்கும் குப்பியினுடைய வாயிலிருக்கும் கம்பியா
னது அந்தப் பீங்கானில் படும்படி வைத்து மேலே வறட்டி
யடுக்கிப் புடம்போடவேண்டியது. அப்போது அந்தக்
குப்பியிலிருந்து தயிலம் பீங்கானில் விழும், அப்படி தயி

லம் விழாமற்போனால் தயிலம் இறங்குமட்டும் புடத்தைப் போடவேண்டியது. பின்னால் அந்தத் தயிலத்தில் சவர்க் காரம் கூடப்போட்டரைத்துத் துருசின்மேல் போட்டப் பின்னால் அந்தத்துருசானது வெள்ளையாய்ப்போகும், எ-று. (3)

வெள்ளையென்ற துருசியதைச் சூதத்திலூட்டு
விரவியே குப்பியதில் தயிலம்வைக்க
சள்ளையென்ற சூதமது கட்டிப்போகும்
சரக்கெல்லா மிப்படியே கட்டுங்கட்டும்
கொள்ளையென்ற வொவ்வொன்றில் கோடிவேதை
கட்டலாஞ் செந்தூரங் களங்கங்கோடி
அள்ளையென்ற தங்கமிட்டுச் சூதங்கட்ட
வறுபத்துநால்முகமு மாடுந்தானே.

(பொ-ரை.) அப்படி வெள்ளையான துருசிச் சுண்ணத் தை ரசத்திலிட்டு முன் தயிலம் குத்தினால் அந்த இரசம் கட் டிப்போகும். இப்படியே மற்ற சரக்குகளெல்லாமும் கட் டிப்போகும் அப்படி சரக்குகளெல்லாம் கட்டிப்போனால் ஒவ்வொன்றிலும் அநேக வகையான வாதங்கள் செய்யலாம். ஆனாலும் தங்கத்தையும், இரசத்தையும் கூட்டி வேதிக்க அறுபத்துநான்கு சரக்குகளையும் வேதிக்கக்கூடும், எ-று.

தாளென்ற செப்புதனை நருக்கிக்கொண்டு
சாதகமாய்க் குகையிலிட் டுருகும்போது
காளென்ற தயிலமது மூன்று துளிகுத்த
கடுங்களிம்பு கட்டிரவி செவப்புமெத்த
ஊளென்ற செம்பினிட ஆறலும்போச்
சுத்தமின செம்பொன்போ லாச்சுதாச்சு
தேளென்ற செம்பிரண்டு தங்கமொன்று
தெளிவான வெள்ளியதி லேழுங்கூட்டே.

(பொ-ரை.) சுத்திசெய்யாத செம்பை உருக்கிக்கொண்டு மூசையில் வைத்து உருக்க அது உருகும்போது மேற்படி

தயிலத்தில் மூன்று துளி குத்தினால் அந்தக் களிம்பு அற்றுப்போய் பொன்போலாகும். அப்படி சுத்திபண்ணின செம்பு இரண்டுபங்கும், தங்கம் ஒருபங்கும், வெள்ளி ஏழு பங்கும் கூட்டவேண்டியது, எ-று. (5)

கூட்டியல்லோ வுருக்கிடவே பொன்னுமாகும்
குறையாம லெட்டரையே காணும்காணும்
நீட்டியல்லோ தினந்தோறும் தயிலந்தானும்
நினைவாக மண்டலமே கொண்டாயானால்
ஆட்டியல்லோ நோய்களெல்லா மகன்றுபோகு
மப்பனே விந்துமெத்த வயிர்தமாகும்
பூட்டியல்லோ விதினோடே செயராசமுங்கொண்டாற்
பொன்போலே காயமது சித்தியாமே.

(பொ-ரை.) இப்படியெல்லாம் கூட்டியுருக்கினால் ஒன்றாய்ச் சேர்ந்து எட்டரை மாற்றுள பொன்னாகும். இப்படி இந்தத் தயிலத்தினால் வேதை செய்வதைவிட்டு ஒருமண்டலம் வரைக்கும் தினமும் ஒருதுளியாகச் சாப்பிட்டுக் கொண்டு வருவாயானால் தேகத்திலுள்ள நோய்களெல்லாம் ஒழிந்து விந்துவிர்த்தி யடைந்து தேகம்பலமடையும். இந்தத்தயிலத்தோடு ஜெயராசமும் சேர்த்துச் சாப்பிட்டால் தேகம் சித்தியடையும், எ-று. (6)

வெடியுப்புச் செயநீர்.

தானென வெடியுப்புச் செயநீர்கேளு
சாதகமாய்ப் பலம்பத்து நிறுத்துக்கொண்டு
வேனை சோடசமாங் குருபூநீறு
விளங்கியகா சைந்தாகுங் கல்லுப்பைந்து
கோனை நவாச்சார மன்னபேதி
கொடியதோ ரப்பிரகந் துருகசினம்

பாஞன் சூடன்வெள்ளை வெங்காரம்பூரம்
வரிசையுட னிந்துப்புக் கடல்நுரையுங்கூட்டே.

(போ-ரை.) வெடியுப்புச் செயநீராமாறு கூறுகின்றது: எப்படியென்றால், ஐஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு பத்துபலமும், பதினாறுமுறை சுத்திசெய்தரைத்து எண்ணெயெடுத்துவிட்ட பூநீறு ஐந்துகாசெடையும், கல்லுப்பு ஐந்துகாசெடையும், நவாச்சாரம், அன்னபேதி, அப்பிரகம், மயில்துத்தம், சிறுகாரம், ஆலாத்தி கர்ப்பூரம், வெள்ளைப்பாஷாணம், வெங்காரம், இரசகர்ப்பூரம், இந்துப்பு, கடல்நுரை, ஆகிய இவைகளும் ஐந்தைந்து காசெடையுமாக நிறுத்துச்சேர்த்து, எ-று. (7)

கூட்டுவது வீரமுடன் காசைந்துசேரு
குறிப்புடனே தொளையற்ற பூரணமும்பாரு
ஆட்டுவது புளியெட்டுக் கொருக்காயெட்டு
மழகான வீரனென்ற சடையுமெட்டு
பூட்டுவது பழச்சாற்றி னரைத்துக்கொண்டு
புகழாக முறையுடனே யெழுநாளாட்டித்
தீட்டுவது பில்லைதட்டிக் கலயத்துள்ளே
சிறப்பாகக் கற்சுண்ணம் பூசியாற்றே.

(போ-ரை.) வீரம் ஐந்து காசெடையும், பூநீற்றைக்காய்ச்சும்போது உண்டாகும் ஒருவகையான புளியுப்பு எட்டுக்காசெடையும், அதிலிருந்து உண்டாகும் கொருக்காய் எட்டுக்காசெடையும், சரல் சடையென்று சொல்லுகின்ற பூநீற்றுக்குழம்பு எட்டுக்காசெடையும், ஆகக்கொண்டு, இவைகளை பழச்சாறு என்று சொல்லுகின்ற பூநீற்றுச்சலத்தினால் கரைத்து ஏழுநாள் வரைக்கும் ஒரு நாளைக்கு நான்கு நாழிகைவீதம் நன்றாய்ப்பலங்கொண்டு அரைத்துப் பில்லைசெய்துலர்த்தி இரண்டு அகல்களில் உள்ளே தாளித்த கல்சுண்ணாம்பைப் பூசி நிழலிலுலர்த்தி, எ-று. (8)

ஆறினபின் பில்லைவைத்துச் சீலைசெய்தே
யடைவாக நூறெருவிற் புடத்தைப்போடு
தேறினபின் நாலிலொன்று சாரங்கூட்டிச்
சிறப்பாக வாட்டியதை வழித்துப்பீங்கான்
கூறினபின் வீராச்சு வீரப்பூரம்
கூடவிட்டுச் சரக்குகளிற் றடவிவாட்டி
மாறினபின் செயநீரைச் சுருக்குத்தாக்க
மாண்டுபோம் நவலோக பொன்னும்பாரே.

(பொ-ரை.) அதற்குள் ஷெ பில்லையைவைத்து மேலே அகல்மூடி ஏழு சீலைமண்செய்து உலர்த்தி நல்லவறுட்டி னூறடுக்கி மத்தியில் அகலை வைத்துப் புடம்போட்டு நன்றாய்க் குளிர்ந்தபின் அதை யெடுத்து நிறுத்து அது இருக்கும் எடைக்கு நாலிலொருபங்கு நவாச்சாரம் கூடச்சேர்த்து நன்றாயரைத்து வழித்து ஒரு பீங்கானில் வைத்துப் பார்த்தால் வெடிப்புப்புச் செயநீராயிருக்கும். வீரமும், பூரமும் ஒரு அளவாக நிறுத்தெடுத்து ஷெ செயநீராலரைத்து ஆறுஞ்சரக்கு அறுபத்து நாலுக்கும் தடவிநெருப்பில் வாட்டி அந்தச்செயநீரைச் சுருக்குக் கொடுத்தால் அந்த லோகங்கள் பொன்னாய்விடும், எ-று. (9)

முற்றிற்று

நோயில்லா வாழ்வு.

சரீரசாஸ்திரம், சயனசாஸ்திரம், மாதவவிதானம், பதார்த்தகுண கலாநிதி, இப்பேர்க்கொத்த உயர்ந்த சாஸ்திரங்களில் ஆராய்ச்சிசெய்து அச்சிட்ட (நோயில்லா வாழ்வு) இவைகளில் வருணத்தாருக்கும் ஒவ்வொரு புத்தகம் இருக்கவேண்டுமென்றறிக.

விலை ரூபா—1 0 0

பி. எஸ் டி எம் அண்டு, சன்
வேப்பேரி போஸ்டு, மதறாஸ்.

உ

கடவுள் துணை

ஸ்ரீகயிலாச பரம்பரை

சட்டைமுனியார் அருளிய

வாதங்கள்

உப்பின் பேர்கள்.

சாரியிதென்றுந் தனித்தகல் லுப்பென்றும்
வாரியினுப்புடன் மாமதி சூடனும்
சேரவே நாலாய்ச் சேரவைபென்று
மாரிப்பிறப்புக்கு வழலையினுப்பே.

(போ-ரை.) வாதமார்க்கங்களுக்குப் பிரதானமான பூநீற்றுப்புக்குப் பலபேர்கள் உண்டு. அப்பேர்களின் விவரங்களை இங்கே சொல்லுகின்றது, எப்படியென்றால், அந்த உப்பானது சாரமென்றும், கல்லுப்பென்றும், கடலுப்பென்றும், இந்துப்பென்றும், சூடனென்றும், மழையினாற் பிறத்தலாம் வழலையுப்பென்றும் பெயரிடப்பட்டு வருகின்றது, எ-று. (1)

வழலையினுப்பென்று மாநிலவுப்பென்றும்
வழலைக்குச்சார மாமதியுப்பென்றும்
நிழலைக்கடந்து நேரேகரந்திட்டேன்
களவில்லைசொன்னேன் கைகண்டவாதமே

(போ-ரை.) நிலத்துப்பென்றும், நவாச்சார மதியுப்பென்றும், புலவகையான பேரிட்டும்பெரியோர்கள் வழங்-

கிக்கொண்டு வருவதை நான் மற்றையசித்தர்கள் ஒ
திருப்பதைப்போல் ஒளிக்காமல் வெளிப்படையாகச்சொ
லிவிட்டேன். ஆகையால் என்னால் சொல்லப்படும் வ
மானது அனுபவத்திற்கு வந்ததேயொழிய வேறில்
எ-று. (

வாதம்பிறக்கும் பாறையினுப்பாலே
நாதம்பிறக்கு நல்லகல்லுப்பாலே
போதம்பிறக்கும் பூரணன்றன்னாலே
வேதம்பிறக்கும் வெடியுப்புச்சூதமே.

(பொ-ரை.) இரசவாதமானது பாறையிலிருந்து வெட்
டியெடுக்கப்படும் பாறைவுப்பால் உண்டாகும். நாதமான
மலைகளிலிருந்து வெட்டியெடுக்கப்படும் கல்லுப்பால் உ
டாகும். ஞானமானது எங்கும் நிறைந்தவனான சிவபெ
மானால் உண்டாகும். வெடிப்பின் வேதையும், சூதவேதை
யும் வேதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன, எ-று. (3)

சூதச்சிப்பியின் சுண்ணஞ்சேர்த்திட
சீதருணங்கள் சினஞ்சேர்க்கிடில்
வேதம்விளங்கும் வேந்தனுமாயிடும்
தோதமார்க்கந் துறவியறிவோர்க்கே.

(பொ-ரை.) சூதச்சுண்ணத்தையும், சிப்பிச் சுண்ணத்
தையும் சீனகாரத்தைக் கட்டிச்செய்த சுண்ணத்தையும்
ஒன்றாகக்கூட்டினால் வேதையின் துறையையறிபவர்களுக்கு
வேதை கைவல்ய மாகும் எப்படியென்றால் வேதமானது
ஞானிகளுக்கு விளங்கி அதில் ஞானமுதிர்ச்சியினால் அரச
னாகவு மாகக்கூடும், எ-று. (4)

அறிவான சபையென்னும் பஞ்சபூத
மாகியே மிகச்செய்யும் புரியஷ்டகத்தால்
குறியான பூரணமாம் விந்துநாதம்
கொள்கையாய் மேருவில் பேருண்டாகிப்

பிரியாம லொன்றாகிச் சடலமாகிப்
  பெருமையுற்றுச் சவர்க்காரப் பிறவிக்கப்பால்
வறியாத பேறுக்குவாதமேது
  மகத்தான வழலைசெய்யும் வகையைக்கேளே.

(பொ-ரை.) ஞானமாகியசபையென்றும் பஞ்சபூத சபையென்றும் புரியஷ்டகத்தின் மார்க்கத்தால் விளங்கும் பூரணமாகிய விந்து, நாதங்களுடைய தன்மையை யுடையதாய் மேருவென்னும் ஒரு அரிய இடத்தில் பேர்பெற்றதாகி எக்காலத்தும் ஒன்றைவிட்டொன்று பிரியாமலிருக்கின்றமையால் பெருமையை யடைந்திராகின்ற உயர்ந்த சவர்க்காரமென்றும் சொல்லப்படுகின்ற ஜெந்மத்துக்கப்பால் விளங்கும் பெரியோர்களுக்கு வாதம் என்னப்பிரயோஜன முண்டாக்கும் ஒன்றுமில்லை. ஆகையால் மற்றையோர்க்கே வாதம் பிரயோஜன முண்டுபண்ணும் என்றபடி. ஆனாலும் முன்னே சொன்னவழலையப்புச் செய்யும் மார்க்கத்தை இனிச் சொல்லுகின்றேன். அதைநன்றாய் கேட்பாயாக, எ-று. (5)

கேளாயமுரி கெடியாய்ப் பதினாறு
  வாளா யெவாச்சாரம் வளமாய்ப்பதினெட்டு
கோளாங்கற்சுண்ணம் கொட்டும்படிரண்டு
  நாளாங்ககல்லுப்பு நாட்டும்படியொன்றே.

(பொ-ரை.) மாணாக்கனாகிய அறிவுடையவனே நீ கேட்பாயாக. சுத்தகங்கையென்று பெரியோர்களால் சொல்லப்பட்டு வருகின்ற, அமுரிச்சலம் பதினாறுபடி யளந்து ஒரு பாண்டத்தில் விட்டு, அதில் எவாச்சாரம் பதினெட்டுப்படியும், கற்சுண்ணாம்பு இரண்டுபடியும் கல்லுப்பு ஒருபடியும் எ-று (6)

ஒன்றாய்த்தெளியவைத் தூறவாகக்காய்ச்சி
  நன்றாய்க்குழம்பும் பருவத்தினிறைகேளு

சென்றேயடிமுடிக் குள்ளேயிணக்கினைக்
கொன்றேயெடுத்துக் குழைப்பிடுமெண்ணெய்க்கே.

(பொ-ரை.) மேலேசொன்ன உப்புக்களையெல்லாம் அந்த முரியில்போட்டு நன்றாய்க் கலைத்துவைத்துத் தெளிந்தபின் அந்தத் தெளிவை யிறுத்துவிட்டுக் காய்ச்சிவரும் பருவத்தில் மேலே நுரைத்து வருகின்ற எண்ணெயை நீக்கி உள்ளேயிருக்கும் உப்பைவேறேயெடுத்துக் கொள்ளவேண்டும், எ-று. (7)

எண்ணெயரைப்படி யிணங்கனரைப்படி
ஒன்றாகக்கரைத் துறவிடுமெண்ணெய்க்கு
புன்னரியவீரமும் பூரமும்வெள்ளையும்
நன்னரியசினமும் நான்வகைக்கொன்றே.

(பொ-ரை.) அப்படியெடுத்த அரைப்படி எண்ணெயில் அரைப்படி உப்பைச்சேர்த்து அதில் வீரம் ஒருகாசெடையும் பூரம் ஒருகாசெடையும் வெள்ளைப்பாஷாணம் ஒருகாசெடையும், சினகாரம் ஒருகாசெடையுமாக, நிறுத்து எடுத்துக்கொள்ள வேண்டும், எ-று. (8)

வகைவிதன் காசெடை வகையா யெண்ணெய்க்குள்
நகையாகச் சொன்னேனொரு சத்தியமாமது
வகையாய் முறிவி லப்பியேவார்த்திடாய்
கசமாய்ப்பதத்தில் தோன்றிடு முண்மையே.

(பொ-ரை.) மேற்படி சரக்குகளை யெல்லாம் முன்சொன்ன எடைப்பிரகாரம் எடுத்து எண்ணெய்க்குள் போட்டுக்காய்ச்சினால் வழலையென்ற பேர்பெறும் அந்தவழலையானது நன்றாகக்காயும் பருவத்தில் அதிலிருந்தும் ஒரு உண்டை வெளிப்படும், எ-று. (9)

உண்டைவிளங்காய் போலேயுருட்டிடும்
கண்டிடுங் கொங்கணர் கடைக்காண்டம்சூத்திரம்

விண்டேயுரைத்தார் மேவிகலந்துபார்
சண்டாளத்திரச் சாற்றினார் சத்தியம்.

(பொ-ரை.) அப்படி வெளியேவரும் உண்டையானது விளாங்காய் அளவாகவும் அதைப்போலவே கெட்டியாகவுமிருக்கும். அப்படி அதுவாதபக்குவமறிந்து கொங்கணர் கடைக்காண்டத்தில் சொல்லியிருக்கின்ற வகையின் பிரகாரம்வேதையை பார்த்துக்கொள்ளவேண்டியது, எ-று. (10)

பதஞ்சலியார்

வாத சூத்திரம்.

பூமலியுங் கண்ணுடன் பாதம்போற்றி
புகலுவேன் வாதத்தின் திறவுகோலை
நாமுரைப்போ மைங்நான்கு பாடற்குள்ளே
நலமான வாதவித்தை ஞானமார்க்கம்
சோமனுற்ற வேணியரு ளுபதேசத்தால்
துறையறியும் பதஞ்சலியார் சூத்திரத்துள்
ஏமவித்தைக் காதியென்ற வஸ்துவுப்பை
யிதையறிய மாட்டாம லேங்கினரே.

(பொ-ரை.) தாமரை மலர்போன்ற கண்களையுடைய சரஸ்வதி தேவியின் திருவடிகளை நமஸ்காரஞ்செய்து வாதத் திறவுகோலைச் சொல்லுகிறேன் கேட்பாயாக, ஏனென்றால் நான்சொல்வது வாதவித்தையும், ஞானவித்தையும், ஆனால் இருபதுபாட்டிலே போயடங்கும். எந்தப்பலத்தால் சொல்லுகின்றேனென்றால் சிவபெருமான் எனக்கு உபதேசஞ்செய்த திருவருட் பலத்தாலாகும். ஆனால் அப்படிப்பட்ட இரசவாதவித்தைக்குப் பிரதானமான உப்பைத்தெரிந்து கொள்ளாமல் இரசவாதிகளெல்லாம் தவிக்கின்றார்கள், எ-று. (1)

ஏங்கினர் வஸ்துவுப்பைக் கண்டாற்போல
விதினாலே யிருக்குதென்பா ரெதுதானென்பார்
பாங்கியர்கள் திட்டுமென்பார் விந்தாமென்பார்
பனிரண்டும் பதினாறும் பருவமென்பார்
தாங்கிவளர்த்திட்ட தலைப்பிள்ளை யென்பார்
சமாதியிலே வைத்திருக்குந் தலையோடென்பார்
தூங்கையிலே சொப்பனத்தி லாயிவந்து
சொன்னதென்பார் பூடென்பார் சுசியென்பாரே.

(பொ-ரை.) மேற்படி உப்பு இன்னதென்று தெரிந்து கொள்ளாதபடியால் பலவகையாக அந்த உப்பு இதிலிருப்பதென்றும், அதிலிருப்பதென்றும் சொல்லி வருத்தப்படுவார்கள். ஆனால், சிலர் தீட்டாகிய இரத்தமென்றும், சிலர் இந்திரியமென்றும், சிலர் அந்த உப்பு எடுப்பதற்கு பன்னிரண்டு வயசு ஆகுமென்றும், பதினாறு வயசு ஆகுமென்றும், சிலர் தலைப்பிள்ளையே அந்த உப்பென்றும், சிலர் சமாதியாக வைத்திருக்கும் பிணத்தின் தலையோடென்றும், சிலர் தங்களுடைய கனவில் சத்திவந்து சொன்னதாகிய ஒருவஸ்து வென்றும், சிலர் பூண்டென்றும், சிலர் நிர்மலமான பொருளென்றும் இப்படி பலவகையாகச் சொல்லுவார்கள், எ-று. (2)

சுசியென்பார் கோழிமுட்டை கிளிஞ்சில்ரண்டும்
சுத்தஜலமானுக்கல் தொழிலாமென்று
தலையென்புளிதானே பலமாமென்றும்
சாரமென்று சூத்திரமே தப்பாமென்றும்
குகையென்ன செவிகுஞ்சு கண்ணீரென்றும்
கோசமென்றும் பூதமென்றும் குருவண்டென்றும்
திகையாதே சடத்திலையங் காயமென்றும்
சிலுகமென்றும் பூரகத்தெளிவென்பாரே.

(போ-ரை.) மேலே சொன்ன வஸ்துவுப்பை கோழிமுட்டையென்றும், கிளிஞ்சில் என்றும், இந்த இரண்டும் ஜெயநீராகுமானல் வேதை முடியுமென்றும், புளியென்றும் நவாச்சாரமென்றும் சூத்திரமென்றும் அமிர்தமென்றும் கண்ணீரென்றும், கோசமென்றும், பஞ்சபூதங்களென்றும், குருவண்டங்களென்றும், ஐங்காய மென்றும் பூநாகத்தின் தெளிவென்றும், இப்படியாகப் பலமுறையாகச் சொல்லுவார்கள், எ-று. (3)

தெளிந்தவர்போற் சித்தர்சொன்ன சூத்திரத்தில்
சிக்கறுத்துப் பாராமல் செகத்துள்ளோர்கள்
அளந்தியதி லுத்திபண்ணிப் பாராமற்றான்
அவரவர்கள் நினைத்தபடி சுட்டுப்பார்த்து
இளந்த சொல்லாமென்று சொல்லினால்வெறுத்
தில்லறமே நல்லறமென் றிருந்தார் கோடி
களந்தபிண போல்மெலிந்து சிலதுபேர்கள்
கானத்து மலையிடத் திருகினரே.

(போ-ரை.) சிலபேர்கள் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டதுபோல் நடித்துச் சித்தர்களாற் சொல்லப்பட்டிராநின்ற சூஸ்திரங்களிலுள்ள சிக்குகளையெல்லாம் நீக்கி அவைகளை நன்கு யாராய்ந்து பாராமல் அவர்கள் மனம் போல சுட்டுச் சுட்டுப்பார்த்துஇந்தச்சாஸ்திரங்கள் பொய்யானவை யென்றுசொல்லி அந்தச் சாஸ்திரங்களில் வெறுப்புண்டாகி இல்லறத்தையே நல்ல தரும மார்க்கமாகக் கொண்டு அதிலே யிருந்து மடிந்தவர்கள் இவ்வுலகத்தில் அநேகர்கள் இருக்கின்றார்கள், செத்த பிணம்போல் மெலிவடைந்து காட்டையே தமக்கு இருப்பிடமாகக் கொண்டிருப்பவர்கள் சிலபேர்கள், எ-று. (4)

கருதினார் சிலபேர்கள் குருத்தான்வந்து
காட்டுவா ரென்றுசொல்லிச் சூஸ்திரத்தை

புருவமே விழித்தெதிர்த்து விண்வரைப்பேசி
  புழுங் கதவிப் பார்களிருவாக்கும்பேர்கள்
மருளினார் சிலபேர்கள் வாதவித்தை
  வந்தவர்போற் சொல்லியவர் பிழைப்போமென்று
முருளினார் யோகதண்டம் காஷாயங்கள்
  யோகநிஷ்டை பெற்றவர்போ லுருக்கொள்வாரே.

(பொ-ரை) சிலபேர்கள் குரு வழூர்றுவிவந்து சட்டிக் காட்டுகிலே இது ஆகக்கூடுமென்று சித்தர்களால் சொல்லப்பட்டிரா நின்ற சூத்திரங்களைக் கிழித்துப்போட்டுத் தவிக்கின்றார்கள் சிலபேர்கள் தமக்குவாதவித்தை கூடிவிட்டதுபோல அந்நியர்களுக்குச் சொல்லித்தாங்கள் பிழைப்பதற்காகப் பலவகையான தந்திரங்களைச்செய்து யோகதண்டம் காஷாயம் முதலியவைகளைப் பெற்று யோகநிஷ்டாபரர்கள்போல் வேஷங்கொண்டு திரிகின்றார்கள், ரு-ரு. (5)

கொன்றுவார் செபமாலை கையிலேந்திக்
  குறியிட்டு கடைகட்டப்பார் குகையிற்காப்பால்
நின்றுவார் வாதயோக ஞானங்
  வேதாந்தத்தின்முடிவை விசாரித்தோர்போல்
தன்றுவாருபதேசம் செய்வோமென்பார்
  குதயணிகட்டிக்கொண்டு தொழில்பாரென்பார்
தன்றுவார்பொருளாசை நமக்கேனென்பார்
  சுவர்க்கவாசம் குருமுடிக்கில் தனவென்பாரே.

(பொ-ரை.) சிலபேர்கள் செபமாலையைக் கையினிடமாகக்கொண்டு காவிலபாதக்குறடுதரித்துக் குகைகளினிடத்திலிருக்கு வாதம், யோகம், ஞானம் என்னும், இவைகளை வேதாந்த விசாரணை மிகவும் செய்தவர்களைப்போலச் சொல்லுவார்கள். இரசத்தை மணியாகக் கட்டுவோம்.

அதைநீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சொல்லுவார்கள். நமக்குப் பொருளின்மேல் ஆசையில்லை யென்பார்கள். சவர்க்காரத்தாலுண்டாகும் குருமருந்தை முடித்து விடுவோமானால் அதுவே நமக்கும் பொருளாகு மென்று சொல்லுவார்கள், எ-று. (6)

தனமென்ன வாலைமனோன்மணித்தா யென்பார்
சாராயம்பூசிக்கத் தண்ணீரென்பார்
கனமென்ன காந்தசத்துக் கிண்ணம்பண்ணிக்
கற்பமென்று பெண்ணாசை கடந்தோமென்பார்
மனமென்ன வாய்ப்புரட்டால் கைப்புரட்டால்
வாதவித்தை போற்காட்டி மயக்கஞ்செய்வார்
தினமிந்தப்படிதானே யுலகத்துள்ளே
சீவனங்கள் செய்வார்கள் சிலபேராமே.

(பொ-ரை.) நாம் இப்பொழுது தனமென்று சொன்னது பொருளா இருந்தாலும் இந்தப்பொருளல்ல மனோன்மணித் தாயான பொருள் என்பார்கள். யாராயினும் எதிரேவந்து இவ்வளவுஞாயத்தைத் தேர்ச்சியடையும்படி சீடர்களுக்கு உபதேசிக்கின்ற நீரே சாராயங் குடிக்கலாமாவென்று கேட்டாலோ அதற்கு அந்தச்சாராயத்திற்கு ஒருமந்திரத்தை அபிமந்திரித்தால் அது உடனே தண்ணீராய்விடும் பிறகு தோஷமில்லையென்று சொல்லுவார்கள் காந்தச்சத்தினால் கிண்ணஞ்செய்து அதனால் சற்பசாதனஞ்செய்து பெண்ணாசையை நீக்கினோமென்பார்கள். இந்தப்படியே கைப்புரட்டாலும் வாய்ப்புரட்டினாலும் தினந்தோறும் மேற்படி இரசவாதத்தில் விருப்பம் வைத்துள்ள சிலபேர்களை மயக்கி மோசஞ்செய்து ஜீவனஞ் செய்பவர்கள் இந்த உலகத்தில் அநேகர் இருக்கின்றார்கள், எ-று.

இந்தப்பதஞ்சலியார் வாதருத்திரம் என்கிற பெயரால் இருபதுபாட்டுகள் அடங்கிய எழுநூல் இயற்றினார்.

அந்த நாலிலிருந்தே இந்த எழுபாட்டும் எடுத்துக்கொள்ளப்பட்டன. மற்றவைகளிலும் இந்தவிதமாகவே புத்தி சொல்லுகின்றார். ஆகையால் அவைகளை எழுதாமல் விட்டு விட்டோம். ஆனாலும், இவருடைய முக்கியகருத்து என்னவென்றால், உலகத்தில் அநேகர்கள் சிவவேடம்பூண்டு இரசவாதத்தில் விருப்பமுள்ள சிலபேர்களை எட்டுமாற்றுச் செய்வேன், பத்துமாற்றுச் செய்வேன் என்றுசொல்லி மயக்கி அவர்களுடைய திரவியங்களையெல்லாம் கொள்ளைகொண்டு அவர்களை ஓட்டாண்டியாக்கிப் போகின்றார்கள். ஆகையால் அப்படிப்பட்டவர்களைச் சேர்க்காதேயுங்கள் என்பதாம். (7)

பதஞ்சலியார் வாதம்

முற்றிற்று.

அஷ்டதிக்கு ஆருட சாஸ்திரம்.

இந்த அஷ்டதிக்கு ஆருட சாஸ்திரத்தை யாரொருவர் கையாண்டு கருத்திலுச்சிக் கொள்வார்களோ அம்மகானுபாவர்கள் மற்றவர்கள் யாவருக்கும் திருஷ்டாந்தம்போல நடக்கும் நன்மை தீமைகளைப் புகலலாகும் இச்சாஸ்திரத்தில் இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானியன் முதலிய அஷ்டதிக்குகளில் எத்திக்கையோத்து பிரசன்ன கேட்கிறார்களோ அத்திக்கின் பலனை அடையாளத்துடன் அனந்த மடைபுமாறு சொல்லலாகும், இதில் அஷ்டதிக்கு ஆருடம், பஞ்சபட்சி ஆருடம், ஆஞ்சநேயராருடம், ஜெயமுனிவர் ஆருடம், வால்மீகர் ஆருடம், ஆக ஐந்துவித ஆருடங்களும் அமைந்திருக்கின்றது.

விலை ரூபா—1 0 0

பி. எஸ். டி எம் அண்டு, சன்

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

23

உ

கடவுள் துணை

கூனர்

திருவாய்மலர்ந்த

நாகரச வேதை.

பிழைக்கவே நாகமைந்து கழஞ்சுசூதம்
பேராகக் கழஞ்சிரண்டு வைத்துக்கொண்டு
அழைக்கவே நாகத்தைக் கறண்டியிட்டு
அதையுருக்கி ரசங்கொடுத் தம்மியில்வைத்
திழைக்கவே வெடியுப்பு காலாங்காய்ச்ச
லிட்டரைமூன்றே முக்காற் கழஞ்சுமப்பா
தழைக்கவரை சண்டுநாழிகையில் வர்ணம்
தான்விசும்போது தண்ணீர்விட் டரைப்பே.

(போ-ரை.) உலகத்தில் இந்த இரசவாதத்தைச்செய்து பிழைக்கும்படி நாகரசவேதையைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக. எப்படி யென்றால், சிறுகண் துத்தநாகம் ஆறேகால் வராகனெடையும், இரசம் இரண்டரை வராகனெடையும், நிறுத்து வைத்துக்கொண்டு பிறகு, அந்த நாகத்தைஒரு இரும்புக் கறண்டியில்போட்டு நன்றாயுருக்கி உருக்குமுகத்தில் அந்த ரசத்தைத் தொந்தித்துப்பின் அப்படி தொந்திக்கப் பட்டிருக்கும் நாகத்தையும் இரசத்தையும் அந்தப்படியே யெடுத்துக் கல்வத்தி லிட்டுக்கொண்டு அதில் காலாங்காய்ச்சல் வெடியுப்பு நாலரையே மூன்றுவீசம் வராகனெடை நிறுத்துக் கூடப்போட்டு இரண்

டொழிகை பரியந்தம் நன்றாயரைத்தால் அது ஒருவகை
யான நிறமுடையதாகவும் புகை கிளம்புவதாகவும் வரும்
சமயத்தில் கொஞ்சம் தண்ணீர்விட்டு அரைக்கவேண்டும்,
எ-று. (1)

அரைக்கையிலே வந்தரச மெடுத்துக்கொண்டு
அதின்பிறகு தண்ணீர்நீர் சாயவிட்டு
உரைக்கையிலே ரசமொக்க வழித்துக்கொண்டு
உடன்மெழுகு பதமானால் வில்லைதட்டி
நிரைக்கவே ரவிகாய்ந்து புடமிட்ட சுண்ணம்
நிசமாகப் பதனமாய் வைத்துக்கொண்டு
உரைத்தெடுத்த ரசத்தைச் சிறுபயறுவீதம்
மூற்றதங்கத் தகட்டினிலே ரசம்விட்டுத்தேயே.

(போ-ரை.) அந்தவிதமாகத் தண்ணீர்விட் டரைக்கும்
போது கொஞ்சம் ரசம் கக்கிப்போகும். அதை வேறே
எடுத்துக்கொண்டு அந்தத்தண்ணீர் அந்தக் கல்லில் இல்
லாதபடி சாய்த்துவிட்டுப் பிறகு கல்லிலிருக்கும் நாகரச
வெண்ணெயை எடுத்துக்கொண்டு பார்த்தால் அது மெழு
குபதமாயிருக்கும். அந்த மெழுகைப் பில்லைதட்டி வெயி
லில் உலர்த்தி நன்றாய்க்காய்ந்தபின்பு குக்குட புடம்
போட்டு எடுத்துப்பார்த்தால் அது சுண்ணமாயிருக்கும்.
அந்தச் சுண்ணத்தை எடுத்து வைத்துக்கொண்டு அதில்
சிறுபயறுவீதம் தங்கத்தகடுதட்டி அதில் கொடுக்க வேண்
டும், எ-று. (2)

தேய்க்கவே யுண்டுகொள்ளுந் தானும்
திரும்பானி காய்த்துமே தகட்டிலப்பா
சாய்க்கவே முன்ரசங் கதிர்பயறுவீதம்
தடவிரவி காயவைக்க நொறுக்குமப்பா
மாய்க்கவே மஞ்சாடி மூன்றுசெப்பு
மாட்டிடவே ரவிபிரபை யாகும்பாரு

தேய்க்கவே யதையெடுத்து வெள்ளியேழு
செய்தங்கள் கொடுத்திடவே செம்புமூன்றியே.

(போ-ரை) அப்படி அந்தச் சுண்ணத்தை தங்கத்தகட்டில் தேய்த்தால் அந்தத்தகடு அந்தச் சுண்ணத்தை விடாமல் பிடித்துக்கொள்ளும், பிறகு அந்தத் தகட்டை வெயிலில் காயவைத்து மறுபடியும் அப்படியே இன்னொருதரம் பூசிக்காயவைக்க அந்தத்தகடானது வெட்டையாய் நொறுங்கிப் போய்விடும் அப்படி நொறுங்கிய தங்கத்தை யெடுத்து மூசையிலிட்டு அதோடுகூட மூன்றுமஞ்சாடி யெடைசெம்புசேர்த்து உருக்கினால் இரண்டும் ஒன்றாகரேசித்து நல்ல செவந்த நிறத்தைக்கொடுக்கும். அப்படி உருகி நின்ற அதையெடுத்து வெள்ளியேழுபங்குக்கு இந்தமருந்து ஒருபங்குகொடுத்து உருக்கிவைத்துக்கொண்டு பிறகு சுத்தி செய்த செம்பு மூன்றுபங்கு எடுத்து உருக்கி அது நன்றாய் உருகிக் கண் விட்டாடுஞ் சமயத்தில் முன் உருக்கிவைத்திருக்கின்ற மருந்தைக்கொடுத்து ஊதினால் எழுமாற்றுப் பொன்னாகும். அப்படி யாகாமற்போனால் மறுபடியும் கொஞ்சம் தங்கம்சேர்த்து புதிய ஓட்டில்வைத்து உருக்கி யூதினால் அந்தமாற்றுச் சரியாயிருக்கும், எ-று. (3)

கொரங்கனார் திருவாய்மலர்ந்த

வேதைகள்.

அயச்செப்பு.

ஆகுமே யயச்செம்பு மஞ்சாடியொன்று
மதிற்றங்கக்கழஞ் சொன் றுருக்கிக்கொண்டு
வாகுமே கந்தியது மஞ்சாடிக்கு
மனோசிலை யவ்விதம் பழச்சாற்றரைத்துப்பூசு

வாகுமே பதினாறு புடம்போட்டப்பால்
வாதகமா மஞ்சாடி வெள்ளிக்கிய
பாகமே பொன்மாற்ற தெட்டுங்காணும்
பண்பாக வின்னமொரு வாதங்கேளே.

(பொ-ரை.) அயத்திலுள்ள செம்மைச் சாஸ்திரக்கிரமமாக எடுத்து அந்தச்செம்பில் ஒருமஞ்சாடி எடையும், தங்கம் ஒன்றேகால் வராகனெடையும் நிறுத்தெடுத்து இரண்டையும் ஒன்றாகச் சேர்த்து மூசையிலிட்டு உருக்கி இரண்டும் நன்றாய்ச் சேர்க்கும்படிசெய்து வைத்துக்கொண்டு, ஒரு மஞ்சாடி எடையும் எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றில் அரைத்து முன் உருக்கிவைத்திருக்கும் மருந்துக்குப்பூசி உலர்த்திக் குக்குடபுடம்போட்டு எடுத்துக் கொள்ளவேண்டியது. இப்படியே பதினாறு புடம்போட வேண்டியது. இப்படி பதினாறும் கிரமப்படி முடிந்தபின்பு ஒருமஞ்சாடி வெள்ளியை உருக்கி அதில் இந்தமருந்தைக் கொஞ்சம் கொடுத்தால் எட்டுமாற்றுப் பொன்னாகும், எ-று. (1)

கந்தகத் தயிலம்.

கேளேநீ கந்தகமோ பலம்பத்தாகும்
கெளிரதம் பலமொன்று குழிகல்லிலிட்டு
வாளேநீ யெருக்கம் பழுப்பதனை யாட்டும்
ரசஞ்சாமம் விட்டரைத்து ரவியில்வைத்து
நாளேநீ நாற்பதுநாள் வைத்தெடுத்தால்
நலமான தயிலம்வரு மெண்ணெய்போல
பீளேநீ பதனம்பண்ணி யடைத்துக்கொண்டு
வெள்ளிதகட்டிற்பூசி முன்பழுப்பிற் பொதியே.

(பொ-ரை.) இனிக்கந்தகத் தயிலத்தால் செய்யப்படும் இரசவாதம் வருமாறு: எப்படியென்றால், சுத்திசெய்த

நெல்லிக்காய்க் கந்தகம் பலம்பத்தும், சுத்திசெய்த இரசம் ஒருபலமும், நிறுத்தெடுத்து இரண்டையும் கல்வத்தில் போட்டு எருக்கம் பழுப்புகொண்டுவந்து நெருப்பில்வாட்டிப் பிழிந்து எடுத்து அந்தச்சாறு விட்டரைத்துச் சூரியனுக்கு முன்னே வெயிலில் நாற்பதுநாள் வரைக்கும் வைத்தெடுத்தால் அதிலிருந்தும் ஒருவகையான தயிலம் வரும் அது எண்ணெயைப்போ லிருக்கும். அந்தத்தயிலத்தைப் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டு வெள்ளியைத் தகடாக அடித்து அதற்கு அந்தத் தயிலத்தில்கொஞ்சம் எடுத்துப் பூசிமுன்னேசொன்ன எருக்கம்பழுப்பை அரைத்து அதில் அந்தத் தகட்டைச் செருகிவைக்கவேண்டும், எ-று. (2)

பொதிந்தெருவி லுமிகலந்து புடமிட்டுப்பார்
  புராரிதுத்த நாகமொரு கழஞ்சுகூட்டி
விதித்தசெம்புத் தகடுமிசை பூசிப்பூசி
  மிக்கவுமிக் காந்தலிலே போட்டுப்பாரு
வதிந்தகந் காசலக்குப் பி தயிலந்தன்னை
  படைத்திடுநீ யதின்பிறகே பொந்தரேய்க்கும்
அதிர்ந்தவுள்ளி யிடுந்ததிலைப் பிழிந்ததண்ணீ
  ரதில்நவாச்சாரங் கருப்புக்கட்டித் தண்ணீரே.

(போ-ரை.) அப்படி பொதிக்கப்பட்ட மருந்தை வரட்டியை ஒன்றும் இரண்டுமாகத் தூள்படுத்தி அத்துடன் உமிகலந்து புடம்போட்டு எடுத்துக்கொண்டு ஒன்றேகால் வராகனெடை துத்தநாகத்தை அத்துடன் கூட்டி உருக்கி வைத்துக்கொண்டு சுத்திசெய்த செம்புத்தகட்டில், அந்தக் கட்டைக் காய்ச்சிக் காய்ச்சிக் களாய்பூசுவதுபோல் பூசிப் பூசி உமிப்புடம் போட்டுப்பார்த்தால் அந்தச்செம்பானது ஆறுமாற்றைக் காட்டும்படியான பொன்னாகும்) இது வரைக்கும் இதை நிறுத்தி அந்தத் தயிலத்தை கங்காசலக் குப்பியென்று சொல்லப்படுகின்ற காசிக் குப்பியில் அடை-

த்து வைத்துக்கொண்டு மனிதர்கள் தேகத்தில் உண்டாகும் எப்படிப்பட்டநோய்க்கும் வெங்காயத்தை யிடித்துப் பிழிந்து அதில்கொஞ்சம் நவாச்சாரமும், நல்லவெல்லமும் கூட்டி இந்தத்தயிலத்தில் மூன்றுதுளிவிட்டுக் கொடுக்க எல்லாம் குணமாய்விடும், எ-று. (3)

இரசவெண்ணெய்.

தண்ணீரும் வட்டதுத்தி புள்ளிகூட்டித்
  தானிடித்துப் பிழிந்தரசந் தன்னிற்குதம்
விண்டிடவே மூன்றுநா ளிருந்துபார்த்தால்
  வெண்ணெயாம் மேனியிலை குகைபிடித்து
கண்ணரச மதில்வைத்துப் புடமூவைந்தில்
  கனலாகித் தீர்ந்துநிற்கும் புகையாதப்பா
வண்ணமுள்ள விரும்பியம் வைக்கக்கேளு
  மக்களே பொரிகாரம் கழஞ்சிரண்டே.

(பொ-ரை.) வட்டத்துத்தி என்னும் மூலிகையும், வெள்ளைப்பூண்டும், ஒரு அளவாகக்கூட்டித் தண்ணீர்விட் டிடித்துப் பிழிந்து அந்தரசத்தில் ஒருபலம் இரசத்தைவிட்டு மூன்றுநாள்வரைக்கும் ஊறவைத்து நான்காநாள் பார்த்தால் அந்தரசமானது வெண்ணெயைப்போ லிருக்கும் அவை யெடுத்துவைத்துக்கொண்டு குப்பைமேனி யிலையை ஒரு அளவாக எடுத்தரைத்து மூசைசெய்து அந்தமூசையில் முன்னர் வெண்ணெயான இரசத்தை வைத்து மேலும் அந்த இலையினாலே மூடிச் சீலைமண்செய்து இருபதுமுறை காடைப்புடம்போட்டால் அந்த ரசமானது புகையாமல் நிற்கும் அதையெடுத்து வைத்துக்கொண்டு வேண்டிய மார்க்கப்படிசெய்து கொள்ளலாம். இனி இரும்பிலிருந்து சயம்

எடுக்கும் வகையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. எப்படியென்றால், இரண்டரை வராகனெடை வெங்காரம் நிறுத்து எடுக்கவேண்டும், எ-று, (4)

அயவங்கம்.

கழஞ்சான சிறுபூளைத் தூளாழாக்கு
காட்டாடு தீண்டாநீர் கழுதைநீருரியாம்
விளைஞ்சகுதிரை சிர்நீரு முரிதானப்பா
மிகமூன்று காப்படியு மொன்றாய்ச்சேர்ந்து
இளஞ்சவே மண்வெட்டி பழுக்கக்காய்ச்சி
யிடிதூளைத் தரந்தரமாய்த் தூற்றித்தூற்றி
இளைஞ்சவே மூன்றுமுறை நீரிலேயிட்
டிறுகவதை யழுத்தவே யீயமாச்சே.

(பொ-ரை.) சிறுபூளை என்னும் மூலிகை கொண்டுவந்து நிழலில் உலர்த்தித் தூள்செய்தது ஆழாக்கு, ஆடுதீண்டாப் பாளைச்சாறு உழக்கு, கழுதைமூத்திரம் உழக்கு, குதிரை மூத்திரம் உழக்கு இம்மூன்றையும் ஒன்றாகக்கலந்து ஒரு மட்பாத்திரத்தில்வைத்துக்கொண்டு ஒருமண்வெட்டியைக் கொண்டுவந்து நெருப்பிலிட்டு நன்றாய்ச் சிவக்கும்படி காய்ச்சி மேற்படி தூளை அந்தக்காய்ந்திருக்கும் மண்வெட்டிமேல் போட்டு மேற்படி சாற்றில் அழுத்த அந்தமண்வெட்டியிலிருந்து ஈயம் இறங்கும். இப்படியே மூன்று முறைசெய்தால் தேவையானமட்டும் கிடைக்கும். (அந்த ஈயத்தை எடுத்துக்கொண்டு வேதைக்குப் போகலாம், (5)
எ-று,

நாகக்கட்டு.

ஈயம்விழுமதை யெடுத்துச் சேர்மானத்துக்
கியல்பாகச் செந்திரிக்க வெள்ளிநாறு

மாயமாஞ் செம்பாறு சேர்த்துத்தாக்க
மாற்றென்ன சரியாச்சு தின்னமொன்று
நாய்வேளைச் சாறுநாய்ப் பாகற்சாறு
நன்றான புகையிலைநீர் மூன்றுஞ்சேர்த்துத்
தோயவே நாகமது சுருக்குத்தாக்கத்
துத்தநாகக் கட்டிச் சொல்லொணுதே.

(பொ-ரை.) அப்படி அந்தமண் வெட்டியிலிருந்து விழுந்த சயத்தை மேலேசொல்லியுள்ள நால்முறைப்படியே செந்தூரமாகச்செய்து வெள்ளி நான்கெடையும் சுத்திசெய்த செம்பு ஆறெடையும்சேர்த்து உருக்கி அந்த இரண்டும் நன்றாயுருகிக் கண்விட்டாடுஞ் சமயத்தில் செந்தூரத்தில் கொஞ்சம் கொடுத்தால் பத்துமாற்றுள்ள பொன்னுகும். அதைவிட்டு இனித்துத்த நாகத்தைக் கட்டுவகையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. எப்படியென்றால், நாய்வேளைச்சாறு ஒரு ஆழாக்கும், நாய்ப்பாகற்சாறு ஒரு ஆழாக்கும், பச்சைப்புகையிலைச்சாறு ஒரு ஆழாக்கும் ஆக மூன்றையும் ஒன்றாகக்கலந்து ஒருபலம் துத்தநாகத்தை உருக்கி அது உருகும்போது மேற்படி சாற்றை அது ஆறுமட்டும் சுருக்குக் கொடுத்துக்கொண்டேவந்தால் நாகமானது கட்டிப்போகும். அப்படி கட்டப்பட்ட அந்தத் துத்தநாகக் கட்டின்பெருமைகளைச் சொல்லமுடியாது, எ-று. (6)

லிங்கமெழுகு.

சொல்லவே லிங்கமது களஞ்சாமப்பா
சுகமான நவாச்சாரங் களஞ்சுகால்தான்
வெல்லவே சவ்வீரம் பலமுமொன்று
மிகுநீரம் பலமிரண்டு முட்டைவெள்ளைக்குத்தி

யல்லவே சட்டியிலே மஞ்சளுருத்தி
பதிவிந்த மருந்தெல்லாம் விரவிக்கொண்டு
மெல்லவே லிங்கம்வைத்து வேதிநேயோடு
மேல்மூடிச் சீலமண்ணு மூன்றுசெய்யே.

(பொ-ரை.) என்னுடைய மாணாக்கனை பெரியவனே, நான் இனி இலிங்க மெழுக்கினால் செய்யப்படும் வேதையைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக எப்படியென்றால், சுத்திசெய்த இலிங்கம் ஒன்றேகால் வராகனெடையும், பச்சை நவாச்சாரம் காலேவீசம் வராகனெடையும் வீரம் ஒரு பலமும் பூரம் இரண்டுபலமும் நிறுத்தெடுத்துக் கொண்டு வந்து அதிலிருக்கும் வெள்ளைக் கருவைத்தள்ளிப்போட்டு, மஞ்சட்கருவை மாத்திரம் வைத்துக்கொண்டு மேற்படி மருந்துகளையெல்லாம் அம்முட்டைக்குள்போட்டு நன்றாய்க்கிளறி அதில் தேவையான மட்டும் லிங்கத்தைச் சொருகி மேலே ஒடுமூடி மூன்று சீலமண்செய்யவேண்டும், எ-று. (7)

செய்ய சட்டியதில் மணலிட்டு முட்டைவைத்து
திரும்பவப்பில் மேலேயோர் சட்டிமூடி
வெய்யப்பத்து நாழிகை யாவாரை
விறகுகொண் டஃதெரியிட் டெரியலாக
வையனே மஞ்சளின் மெழுகுபோலே
யாகுமே பின்னமோ வாதமேது
துய்யமெழு கினையெடுத்து சூட்டிப்பாரு
சோர்வையில்லா துவாதசமே தோணும்பாரே.

(பொ-ரை.) நன்றாய்க் குடைவாயிருக்கும்சட்டி இரண்டு கொண்டுவந்து வாய்பொருந்தத் தேய்த்து ஒருசட்டியில் மணல்கொட்டி அம்மணலின்மத்தியில் முட்டையை வைத்து மேலே யோர் சட்டிமூடி அடுப்பில்வைத்து ஆவ

ரை விறகினால் பத்துநாழிகை பரியந்தம் சிறுதீயாக எரிவிட்டுப்பின் அவ்வளவு நாழிகை ஆறவிட்டு எடுத்துப்பார்த்தால் அந்தமுட்டைக்குள் போட்டடைத்த மருந்தெல்லாம் மஞ்சள்நிறமான மெழுகாயிருக்கும் அந்தமெழுக்கை யெடுத்து வைத்துக்கொண்டு வேதை மார்க்கங்கள் செய்யும் பிரகாரம் (செம்பு நாலும் வெள்ளியிரண்டும் ஒன்றாக்கி உருக்குமுகத்தில் மேற்படி மெழுக்கில் ஒன்றுகொடுத்தால்) யாதொரு பயமுமில்லாமல் பன்னிரண்டு மாற்றான பொன்னாகும், எ-று.

பன்னிரண்டு மாற்றுப்பொன் என்று ஒன்று இல்லாவிட்டாலும் இவர் இங்கே அப்படி சொன்னது நல்ல மாற்றுள்ள பொன்னாகும் என்பதை விளக்குதற்கே யாகுமென்று கொள்ளவேண்டும் என்பதாம். (8)

இரசக்கட்டு-இரசமணி.

பாரடா மால்தேவி பலமிரண்டு
பரவித்து ரசமது தான் பலமுநாலு
யாரடா அரிதாரம் பொடித்துக்கொண்டு
வையனே முள்ளெலியின் வாயிற்போட்டு
சேரடா இரசத்தைவிட்டு கெஞ்சாசார்விட்டு
திரும்பவதின் வாய்வைத்து கட்டிகொண்டு
மாரடா சீலையஞ்சு மண்ணுஞ்செய்து
மருகவொன் னரைமுழத்திற் புடமதாமே.

(பொ-ரை.) நான் இனி இரசத்தைக்கட்டி மணியாக்கும் வகையைச் சொல்லுகின்றேன் நீ கேட்பாயாக 'எப்படியென்றால், இரண்டு பலம் அரிதாரமும் நான்குபலம் இரசமும் நிறுத்து எடுத்துக்கொண்டு முன்னே அரிதாரத்தை மாத்திரம் பொடிபண்ணி ஒரு முள்ளெலியைக் கொண்டு

வந்து அதின்வாயில் அந்தத் தாளைப்போட்டுப் பிறகு இரசத்தைக் கல்வத்திலிட்டுக் கஞ்சாச் சாற்றினால் மேற்படி இரசமானது மடியும்படி அரைத்து மறுபடியும் அதின்வாயில் வைத்துப்பிறகு அந்தவாயை நன்றாய்த் தைத்துவிட்டு அஞ்சு சீலைமண்செய்து ஒன்றரை முழம் பள்ளம்வெட்டி அதில் வறட்டி யடுக்கி மேற்படி எலியை வைத்துப்புடம் போடவேண்டியது, எ-று. (9)

புடமாறி யெடுத்துப்பார் மணியுமாச்சு
 பூட்டிப்பார் வெள்ளிய முருகும்போது
திடமான மணியைவிட்டு நீர் தள்ளிப்போம்
 திரைச்சீலை யிதனிலிட மணிதங்காது
இடமாக வெட்டேது குத்தேதுண்டோ
 வெதிருளி தானேது மணிக்குமேதான்
படமான விடமில்லை பாரு பாரு
 பார்வையில்லை வசியமா மணியுமாச்சே.

(போ-ரை.) அப்படியாகப் போட்ட புடமானது நன்றாய்க் குளிர்ந்தபின் எடுத்துப் பார்த்தால் மேற்படி இரசமானது கட்டி மணியாய் நிற்கும் அந்தமணியை யெடுத்து வைத்துக்கொண்டு வெள்ளியத்தை யுருக்கி அது உருகும்போது இந்தமணியை அதில்போட்டால் அந்த ஈயத்திலுள்ள நீர்வற்றிப்போகும் பிறகு அந்த ஈயம் வெள்ளியாய் விடும் அப்பேர்பட்ட இந்தமணியை யாரொருவர் முடித்து வைத்திருக்கின்றாரோ அவர்களுக்கு எதிரிகளாலும் இன்னும் பேய்முதலிய துஷ்டதேவதைகளாலும், விஷஜெந்துக்களாலும், சூனிய முதலிய மந்திரோச் சாடனங்களாலும் உண்டாகும் கெடுதி ஒன்றுமில்லை எந்தக்காரியத்திற் போனபோதிலும் அந்தக்காரியம் யாதொருதடையு மில்லாமல் நிறைவேறும், எ-று. (10)

அயகின்னம்-தாமிரகின்னம்.

ஆச்சிரும்பு நாலுடனே செம்புநாலு
மதிற்கின்னை யிரண்டுபண்ணித் தீர்த்துக்கொண்டு
வாச்சட்ட சாரணையை யரைத்துக்கொண்டு
மைந்தனே வயக்கின்னைத் துள்ளேவைத்து
எச்சுதுத்த நாகத்தின் கட்டிவைத்து
யின்னமந்த சாரணையை யரைத்து வைத்து
நாச்செம்பு கின்னைத்தால் மூடிக்கொண்டு
நாழிகை சொல்ல லூலையிற் பறக்கவூதே.

(பொ-ரை.) இனி அயக்கின்னைத்தாலும் தாமிரக்கின்னைத்தாலும் செய்யப்படும் வேலைகள்வருமாறு, எப்படியென்றால் இரும்பு நாலுபலமும் சுத்திசெய்த செம்பு நாலுபலமும் கிறுத்தெடுத்து அதில் ஒவ்வொன்றிலும் தனித்தனிக் கின்னமாகச்செய்து வைத்துக்கொண்டு வெள்ளைச் சாட்டரணை மூலம் ஒரு கிதாணமாகப்பிடுங்கி அரைத்து மேற்படி அயக் கின்னத்தி னுள்ளேவைத்து அதின்மத்தியில் கொஞ்சம் துத்தநாகம் வைத்து மேலும் அந்த சாட்டரணையை யரைத்து வைத்து முன்செய்துவைத்திருக்கும் செம்புக் கின்னத்தை மேலே மூடிச் சீலைமண் நன்றாக (நாலுக்கொன்றாய் எழுசீலைசெய்து) கருமானுடைய உலைக்களத்திற் கொண்டுபோய்வைத்து நன்றாகச் செவக்கும்படி பறக்க ஊதவேண்டும் அயக்கின்னத்தில் வைக்கும் மூலிகைக்கு அளவு நாலில்சொல்லப் படாமையால் அந்த மூலிகையெடைக்கு நாலிலொரு பங்கு துத்தநாகம் யென்றும் இரசவாதத்தில் தேர்ந்தவர்கள் நிச்சயம் பண்ணிக்கொண்டு கையாடுகின்றனர், எ-று. (11)

ஊதிடவே மேற்கின்னை மருந்துபற்று
மூன்னிருக்கு மதைவழித்துக் கொஞ்சங்கொஞ்சம்

மோதிடவே நவசாரம் சேர்த்துருக்க
முன்மணிபோல் மணியாக விருக்குமப்பா
வீதிடவே நாகஞ்சுத்தி புதுசட்டிக்குள்
வைத்துமே தாணிக்காய்பத்து கடுக்காய்மூன்று
சூதிடவே மதுரஞ்சீரார் விட்டுமத்தித்
துப்பரவாய் மத்தங்காய் குடைந்துவைத்து.

(போ-ரை.) அப்படி ஊதுவையேயானால் உள்ளிருக்கும் மருந்தானது மேலேமூடியாக மூடியுள்ள செம்புக்கிண்ணத்தில் வந்து பதங்கம்போல் பிடித்துக்கொள்ளும் அப்படிப் பிடித்துக்கொண்ட அந்தமருந்தை வழித்தெடுத்து மூசையிலிட்டுக் கூடக்கொஞ்சம் பச்சைநவாச்சாரம் போட்டு உருக்கினால் அந்தத் துத்தநாகமானது மணிமணியாய்க் கட்டிப்போகும் அதைவேறே ஒரு சட்டியில் வைத்துக்கொண்டு பத்து தாணிக்காயும் மூன்று கடுக்காயும் எடுத்து ஊமத்தைச்சாறுவிட்டு நன்றாயரைத்துப் பிறகு நன்றாய்த் தேர்ந்து பெரிதாயிருக்கின்ற ஊமத்தங்காயைக் கொண்டுவந்து அதை நன்றாய்க் குடைந்துவிட்டு மேற்படி சாற்றால் அரைத்த மருந்தில் பாதியெடுத்து அதற்குள் வைத்து நடுவில் முன்கூடிய நாகத்தை வைத்து மேலே அந்தக்காயின் தோலினாலேயே மூடி நன்றாய் ஏழுசீலைமண் செய்யவேண்டும், (எ-று.) (13)

கெந்தகதயிலம்.

வைத்தஞ்சு புடம்போடு வெட்டையாகும்
மானாகம் நின்றிடைக்கு ரசமுஞ்சேர்த்து
உத்தமனே தொக்கித்துக் குடகரையில்வைத்
துருக்க வெடைபோகா திவ்வெடைக்கு

முந்திகெந்தி பலமொன்று வாழைப்பழத்தோ
  லொன்றாக மாவிரண்டு பலமெடுத்து
நன்றாய்சுத்த வுப்பிலிட்டிடித்து மெழுகுபோ
  லாக்கியே புதிய கலசத்திட்டிடே.

(போ-ரை.) அப்படி சீலைமண்செய்து பத்துவராட்டியில் புடம்போடவேண்டும் இப்படியே மறுபடியும் வேறுசாயில் செய்து புடம் போடவேண்டும் இப்படி ஐஞ்சு புடம் போட்டு ஆனபின்பு அந்த நாகத்தை எடுத்து ஒடித்துப் பார்த்தால் கைக்கு ஒடியும்படியான வெட்டையாய்விடும் அப்படியான அந்த வெட்டைநாகத்தை நிறுத்துப்பார்த்து அதுஇருக்கும் எடைக்கு ரசத்தைச்சேர்த்து உருக்குமுகத்தில் தொங்கித்துக் கட்டியபின்பு பெரிய அடுப்புக்கரி ஒன்றைத்தொளைத்து அதில் மேலே தொங்கித்திருக்கின்ற நாக ரசத்தை வைத்து உருக்கிப்பார்த்தால் இரசம்போகாமல் அப்படியே அந்தநாகத்தோடு உறவாய்நிற்கும், அப்படி இருக்கின்ற அந்தநாகத்தின் எடைக்கு ஒருபலம் நெல்லிக் காய்க் கந்தகமும் இரண்டுபலம் ரஸ்தாளி வாழைப்பழத் தோலும் ஒன்றாகச் சேர்த்து உரலிற்போட்டு நன்றாக மெழுகுபதமாயிடித்து ஒரு புதுக்கலசத்தில் வைக்கவேண்டும், எ-று. (14)

இட்டுமே பாதாளத் தைலமிறக்கி
  வித்தயிலங் காசெடை ரசமெட்டுக்கு
பட்டமிடு மத்திக்க வெண்ணைபோலாம்
  பாணுவிலே காயவிட்டு இனிமேற்கேளு
தொட்டகெந்தி சுத்திசெய்து ஒருபங்குக்கு
  மாட்டியிந்த தைலம்விட் டரைத்துகெந்தி
மட்டம் பதினெட்டுபங்கு வைத்துச்சேர்த்து
  மற்றுமொரு பங்கதனை குளிகைக்குபூசி,

(பொ-ரை.) அப்படி கலசத்திலிட்ட மேற்படி மருந்தை பூத்தயிலமாகவாங்கி அந்தத் தயிலத்தில் ஒரு காசெடை எடுத்து ரசம்விட்டுக் காசெடையில்கொடுத்து மத்தித்தால் அந்தரசம் வெண்ணெயாகும். அந்த வெண்ணெயை வெய்யிலில் காயவைத்து, சுத்திசெய்த ஒருபங்கு செல்விக்காய்த் கந்தகத்தை மேற்படி தயிலம் பதினெட்டுபங்கு விட்டரைத்து முன்சொன்ன இரசவெண்ணெயோடு சே[illegible] டும் நன்றாயரைக்கவேண்டும், (எ-று.)

பூசியே புடம்போடு பதினெட்டு[illegible]
 புடம்போடு செந்தூரம் நாகமா[illegible]
ஏசியே நாகரச செந்தூரத்தை
 யெடுத்தெடுத்து ஆணிக்கு ஏ[illegible]ரு
தூசியே ஆணியப்பா வாதமெல்ல[illegible]
 தொடுமுன்னே பொன்னாகும் கு[illegible]
ராசியே ரசவாதஞ் செய்வோரெல்லாம்
 ரசகுளிகை யில்லாம லாகாதப்பா.

(பொ-ரை.) அப்படி அந்த தயிலத்தால் அரைக்கப்பட்ட மருந்தையெடுத்து முன்கட்டிய நாகரசக்குளிகைக்குப் பூசவேண்டும் அப்படி நன்றாய்ப் பூசினபிறகு புடத்துக்குப் பத்துவரட்டியாக பதினெட்டு புடம் போடவேண்டும். அப்படி பதினெட்டு புடமும் போட்டுத் தீர்ந்த பிறகு எடுத்துப்பார்த்தால் அந்தநாகமானது செந்தூரமாய் இருக்கும். அந்தச்செந்தூரத்தை எடுத்துவைத்துக் கொண்டு இரும்பு ஆணிகொண்டுவந்து அந்த ஆணியில் இந்தச்செந்தூரத்தில் கொஞ்சம்கொடுத்தால் அது பொன்னாய்விடும். நான்சொன்னது மெய்யென்று நம்பிக்கையாயிருக்கவேண்டாம், நீ செய்துபார்த்து நம்பிக்கை வைப்பாயாக. ஆனாலும் இப்படி செய்யப்பட்ட இரசகுளிகை யில்

லாமல் எப்படிப்பட்ட வாதிகளுக்கும் இரசவாதம் சித்தி யாது, (எ-று) (16)

வேறு

அயச்செய்பு.

ஆகாதோ புளிநடலைக்கிழங்கு பலம்பத்தப்பா
வயப்பொடி பலமொன்று வெங்காரம் வராகன்
ஏகாத கிழங்குடனே வெங்காரத்தை
யெடுத்தரைத்து ஏழுபங்கு லொருபங்குக்கு
மாகான வயப்பொடியில் பிசரியேதான்
மைந்தனே பங்கேழு விசையுருக்க
யேகாத செம்பாகு மிந்தச்செம்பை
யெழுதுய்யான் ஏழுக்கொன் றீயமாற்றும்.

(பொ-ரை.) இனி அயச்செம்பால் செய்யப்படும் வேதை கூறுமாறு: எப்படியென்றால், பத்துபலம் புளிநடலைக் கிழங்கும், ஒருபலம் அயப்பொடியும், ஒருவராகனெடை வெங்காரமும் நிறுத்தெடுத்து அயப்பொடியை வேறேவைத்து விட்டு அந்தக் கிழங்கையும், வெங்காரத்தையும் ஒன்றாகச் சேர்த்து நன்றாயரைத்து ஏழுபங்காக்கி, ஒவ்வொரு பங்கி லும் ஒவ்வொருதரம் மேற்படி அயப்பொடியைப் பிசறி மூசையில் போட்டுருக்கினால் அந்த அயமானது தடவைக் குத் தடவைக்குக் கொஞ்சம் கொஞ்சம் செம்பாகும். அப் படி அயத்திலிருந்தும் எடுக்கப்பட்ட இந்தச்செம்பை ஏழு மாற்றுப்பொன் ஏழெடைக்கு ஒருஎடை கொடுத்தால் பத் தரைமாற்றுப் பொன்னாகும், (எ-று.) (17)

கெந்திசெம்பு-உப்புசெந்தூரம்.

மாற்றென்ன கெந்திதான் மேனிச்சாறு
வார்த்தரைத் தாமத்தையிலையிற் பொதிந்துவப்பி

பார்த்தென்ன வைத்தவுடன் செம்புமாச்சு
பரிவாக இன்னமொன்று பகரக்கேளு
சாத்தென்ன வுவருப்புக் குமரிச்சாறும்
தான்விட்டு ஜாமமரைத்து கல்லுப்புக்கு
பூத்தென்ன கவசமிட்டு சீலைசெய்து
புதுசட்டிக் குள்வைத்து வெற்றிலைத்தாளே.

(பொ-ரை.) இனி கந்தகத்திலிருந் தெடுத்துச் செய்யப் படும் செம்பின் வேதையும், கறியுப்புச்செந்தூரமும் சொல்லப்படும்; அவை எப்படியென்றால், தேவையான நெல்லிக் காய்க்கந்தகம் கொண்டுவந்து அதை குப்பைமேனிச்சாறு வார்த்து நன்றாய் மெழுகுபதமாக வரைத்து வழித்து உண்டையாக்கி ஊமத்தையிலையை யரைத்து அதற்குள் வைத்து வெயிலில் வைத்துக்கொண்டுவந்தால் அந்தக்கந் தகமானது செம்பாயிருக்கும். இதையெடுத்து முன் அயத் தைச்செய்து வேதித்ததுபோல் வேதித்துக்கொள்ளலாம். இனி உப்பின் மார்க்கம் வருமாறு: நாம் சாப்பாட்டுக்காக வைத்திருக்கின்ற கறியுப்புத் தேவையானமட்டுக்கும் கொண்டுவந்து அதைக் கற்றாழஞ்சாறுவிட்டு ஒரு சாம மரைத்துப் பிறகு வழித்து ஒருபலம் கல்லுப்பு வாங்கி வந்து அதற்கு முன்னரைத்த மருந்தைக் கவசஞ்செய்து நாளொன்றுக்கு ஒருசீலையாக ஏழுமண் கவசஞ்செய்து இரண்டு புது சட்டிகள் கொண்டுவந்து நன்றாய் வாய் பொருந்தத் தேய்த்து வெற்றிலையை உலர்த்தி யிடித்ததூள் அந்தச் சட்டிகளில் ஒன்றுக்குள்போட்டு மேற்படி உப்பை அந்தத்தூளின்மேல் வைத்து மேலும் வெற்றிலைத்தூள் போட்டு வைக்கவேண்டியது, (எ-று) (18)

தூளுலர்த்தி சட்டிக்குள் போட்டுமூடி
தூயபுகைபோகாமல் மறுசட்டிமூடி
நாளுலர்த்தி சீலைசெய்து எரிஜாமந்தான்
நலமான அடுப்பிறக்கி ஜாமமாற்றி

வேளுரைத்த செந்தூரமாகுமப்பா
விதமாகவதையுமிநீர் விட்டரைத்து
பாளுரைத்து பில்லைதட்டி பீங்கானில்வைத்து
பக்குவமாய் ரவியினில்வை ஜெயநீராமே.

(பொ-ரை.) வேறொருசட்டியைச் சட்டிவாய்க்குச் சந்து தெரியாதபடி சீலைமண்செய்து ஒருநாளெல்லாம் மூடினபடியே உலர்த்திப் பிறகு அடுப்பில்வைத்து ஒரு ஜாமம் வரைக்கும் சிறுதீயாக எரிக்கவேண்டும், அப்படி ஒரு ஜாமம் செய்பாகம் தவறாதபடி எரித்தானபிறகு அடுப்பிலிருந்து இறக்கிக் கீழேவைக்கவேண்டும் பின்னர் ஒரு சாமம்வரைக்கும் ஆறவைக்கவேண்டும். அந்தச்சாமம் போனபின் பிரித்துப்பார்க்கவேண்டும். அப்படி பிரித்துப் பார்க்கும்போது அந்த உப்பானது செந்தூரமாய் நிற்கும் அப்படி செந்தூரமாயிருந்த அந்த உப்பை எடுத்துக் கல்வத்தில் போட்டுக்கொண்டு வாய்நீரால் நன்றாயரைத்துப் பில்லைதட்டிப் பீங்கானில் அப்பி வெய்யிலில் வைக்க அது செயநீராகும் அந்தச் செயநீரைக்கொண்டு அநேக ரசவாதங்கள் முடித்துக்கொள்ளலாம், (எ-று.) (19)

அனுபோக ஜாதக ரகசியம்.

முதல்பக்கம் கிரகசார சக்கரத்துடன் இந்த ஜாதக ரகசியத்தை ஜோஸியர்களும் சாதாரணமானவர்களும் சுலபமாக தெரிந்துகொள்ளுதற்காக, ஜாதகம் கணிக்கவும், ராசிக்கணிக்கவும், அஷ்டவர்க்கு கணிக்கவும், கோசாரம், பன்னிரு பாவபலன்களும், திசாபுத்தி அந்தர பலன்களும் கண்ணாடிபோல விளக்கி எழுதப்பட்டிருக்கிறது. இந்த ஒரு புத்தகமே ஜோதிடத்திற்குப் போதுமானது விலை ரூபா—1

பி. எஸ். டி. எம். அண்டு, சன்

வேப்பேரி போஸ்டு, மதராஸ்

மச்சமுனியார் திருவாய்மலர்ந்த
வேதைகள்.

காப்பு.

ஆதிவேதாந்த மனோன்மணியே காப்பு
அருளான மூப்பாழாம் வெளியே காப்பு
சோதியிலே முளைத்தெழுந்த சுடரே காப்பு
சுத்தவெளிக் கப்புரத்தில் சுடராய் நின்ற
வாதியென்று பேர்படைத்த மாந்தர்க்கெல்லாம்
வகையாகச் சுருக்கமொரு பதினொன்றுக்குள்
நீதியுடன் சொல்லுகிறே னறிவுள்ளோர்க்கு
நிலையாக நாதவிந்து கருதிப்பூணே.

(பொ-ரை.) உலகத்திலிடத்தில்: நாங்களே இரசவாதிக ளாவோம் என்று பேர்வைத்துத் திரிகின்றவர்களுக்கே (மச்சமுனி என்னும் பேர்பெற்றிருக்கின்ற நான்) நாதவிந் துகளின் மார்க்கத்தைச் சுருக்கமாகத் திரட்டி பதினொரு பாடல்களாக ஒரு நூல் சொல்லுகின்றேன். அந்த நூலா னது இனிது முடியும்பொருட்டு ஆதியான வேதாந்த மார்க்கத்தா லறியப்படும் மனோன்மணியும் மூப்பாழான சிதாகாசமும், தேஜோமயத்திலுண்டான சுடரும் காக்க வேண்டியது, (எ-று)

நூல்.

பூவைப்பா ஓங்கார முடல்தானுச்ச
புகழான நாதமது வுயிர்தானுச்ச

காணப்பா அகாரமது தீபமாச்சு
கனமான நாதமது பொருந்தப்பாரு
தோணப்பா விப்படியே வாதவித்தை
சொல்லிவிட்டேன் சூட்சத்தை யாருஞ்சொல்லார்
கோணப்பா ஜெகத்திலே பிளைப்புமானால்
கோடிதரம் வைத்தாலுங் கூடாதோடும்.

(பொ-ரை.) நான் சொல்லவந்த இந்த முப்புவின் பூர்க்கத்திற்கு உடலானது பிரணவமாகவும் உயிரானது அந்தப் பிரணவத்தின் நாதமாகவும் தீபமானது அதிலடங்கிய அகாரமாகவும் இருக்கும் ஆகையால் அந்த இலட்சணத்தோடு கூடிய யாதொரு பூநீற்றையெடுத்து அதில் நாதமாகிய உயிரைக்கொடுத்து இரசவாதத்தொழிலே முடித்துக்கொள்ளவேண்டும் இப்படிப்பட்ட சூட்சத்தை வேறேயாரும் சொல்லவில்லை. ஆனால் அது செய்யவிரும்பினோர் உலகவாசையை விட்டிருக்கவேண்டும் அதை விடாமற்போனால் இவ்விடத்தில் சொல்லியது முடியாதென்பது சத்தியம், (எ-று.) (1)

ஓடுமது கொச்சிவெள்ளைப் பலமோரொன்று
உறவான தங்கமது வராகனொன்று
நாடியதோர் நவாச்சாரம் பலமேபோடு
நலமான கெந்தியுந்தான் பலமேபோடு
தேடியதோர் சவ்வீரம் பலமேபோடு
திடமான வெங்காரம் பலமேபோடு
ஆடியதோர் ஐந்துசுண்ணம் செயநீராலே
அரகரா ஒருசாமம் ஆட்டுவாயே.

(பொ-ரை.) கொச்சிதேசத்து வெள்ளைப் பாஷாணம் ஒருபலமும், தங்கம் வராகனெடை ஒன்றும், நவாச்சாரம் ஒருபலமும், கெல்லிக்காய்க் கந்தகம் ஒருபலமும், வீரம்

ஒருபலமும், வெங்காரம் ஒருபலமும் ஆக ஐந்து பலமும் ஒருவராகனையும் கல்வத்திற்போட்டு, இதற்கு முன்னதாக வெவ்வேறு உண்மை நூல்களிற் சொல்லியபடியே முடித்துவைத்திருக்கின்ற பஞ்சகன்ன செயநீரை நான்கு சாமம் அரைக்கவேண்டும், (எ-று.) (2)

ஆட்டியே வில்லைசெய்து ரவியில்போட்டு
ஆணுப்பு பெண்ணுப்பு கீழ்மேலிட்டு
காட்டாவின் முட்டைஐந்தில் புடமூந்திரு
கத்தெனப் பினப்பெடுத்து செயநீராட்டு
பூட்டாக வெருசாமம் ஆட்டிப்பின்பு
பசமாக வில்லைசெய்து ரவியில்போடு
தெட்டான செங்கதிர்போல் செந்தூரந்தான்
திறமான வெள்ளியிலே பத்துக்கொன்றே.

(பொ-ரை.) அந்தமாதிரியாக நான்குசாமம் ஆனபின்பு பில்லைதட்டி, வெயிலில்வைத்து, இரண்டு அகல்கள் கொண்டுவந்து வாய்பொருந்தும்படி தேய்த்து ஒரு அகலில் பூநீற்றில் ஒரு வகையானதாகிய ஆணுப்பைக் கொண்டுவந்து கீழேயிட்டு மேலே பில்லையைவைத்து அதின்மேல் பெண்ணுப்பைவைத்து மேலும் அகல்மூடிச் சீலைமண் செய்து ஐந்து காட்டு வறட்டியில் புடம்போட்டு ஆறவிட்டெடுத்துக் கல்வத்திலிட்டு மறுபடியும் அந்தச் செயநீரைக் கொண்டே ஒருசாமம் அரைத்துப் பில்லைசெய்து வெயிலில் போட்டு (5) நாள் சென்றபிறகு வெயிலில்போட்டு அது செந்தூரமாயிருக்கும், அந்தச் செந்தூரத்தை எடுத்து வைத்துக்கொண்டு பத்துப்பங்கு வெள்ளியையுருக்கி இந்த மருந்து ஒருபங்கு கொடுத்தால் (பத்து மாற்றான பொன்னாகும்,) (எ-று.) (3)

கந்தகசெம்பு.

ஒன்றான கெந்திசெம்பு செப்பக்கேளு
ஓதுகிறேன் கெந்தியின்காண் பலமேயொன்று
நன்றான வரிநெல்லிச் சாற்றாலாட்டி
நலமாக வில்லைசெய்து செயநீராட்டி
பாண்டாக வைத்துக்கன்னைச் செயநீராலே
பதாரமற் கொச்சிவெள்ளைக் கவசங்கட்டி
தண்டான பச்சைவெள்ளை மேலேயப்பித்
தயவாக கெந்தியென்று வெள்ளையெட்டே.

(போ-ரை.) இனிக் கந்தகச்செம்பின் வேதையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக. எப்படியென்றால் ஒருபலம் நெல்லிக்காய்க் கந்தகத்தை அரிநெல்லிக்காய்ச் சாற்றினால் நன்றாயரைத்துப் பில்லைசெய்து வெயிலிலுலர்த்திப் பின்பு மூன்செயநீராலரைத்துப் பின்பு, எட்டுப்பல கொச்சிதேசத்திவெள்ளைப்பாஷாணத்தை மேற்படி செயநீராலரைத்து அதன் மேலும் கீழும் கவசஞ்செய்யவேண்டும், (எ-று) (௪)

எட்டிலே யிருக்கின்ற சோதியாலே
யெருப்பியிந்த வுலைதனிலே வைத்து ஊது
மட்டிலா தில்லாது சாமமென்று
வகையோடே யெடுத்ததனை யரைத்துக்கொண்டு
கெட்டியாய் யஞ்சிலொன்று செம்புதானுங்
கெட்டியாக தங்கத்திற் பாய்ச்சு பாய்ச்ச
சட்டமாய் பத்துக்கு ஒன்றேபாய்ச்ச
சாதகமாய் பின்பெடுத்துப் புடத்திற்போடே.

(பொ-ரை.) பின்பு அப்படி கவசஞ்செய்த மருந்தை கொல்லனது உலையில்வைத்து நன்றாயூதி ஒருசாமம்வரைக்கும் சென்றபின்பு அதையெடுத்துப் பொடியாக்கி வைத்

துக்கொண்டு இந்த செம்பு ஐந்தில் ஒருபங்கும், தங்கத்தில் ஒருபங்கும், சேர்த்துப் புடம்போடவேண்டும், (எ-று.)

போடதிலே வணுவளவு தப்பிற்றானால்
போய்விடும் போட்டசாக் கெல்லாந்தானும்
போடதிலே தியளவு மிஞ்சிற்றானால்
புகழான வேதையென்ற சரக்குப்போகும்
போடதிலே திட்சையெழுத் தில்லாவிட்டால்
பொருளான வாதமெல்லாம் வீணாய்ப்போகும்
போடதிலே போச்சென்று விட்டுவிட்டால்
புண்ணியமாந் தவமெல்லாங் கூடாவாறே.

(பொ-ரை.) அப்படி போடும் அளவில் கொஞ்சம் தவறினாலும் இதுவரைக்கும் கஷ்டப்பட்டுப் போட்டு செய்த சரக்குகளெல்லாம் வீணாய்ப்போகும். தித்திட்டம் கொஞ்சம் அதிகமாய்விட்டால் இரசவாதச்சரக்கு கெட்டுப்போகும். தீட்சையெழுத்தைவிட்டுச் செய்தாலோ இரசவாதம் பலிஷ்டப்படாது. இப்படி போய்விட்டதென்று செய்யாமல் விட்டுவிட்டாலோ தவஞ்செய்ய இடமில்லாமற்போகும், (எ-று.) (6)

வாரான கோபத்தைத் தீராவிட்டால்
வாதமென்ற பேச்சமொரு காதம்போகுந்
தீராத பிராணாய மில்லாப்பாவி
திரிலோகஞ் சென்றாலும் வாதங்காணான்
கூறுன குருவோடே யெதிர்த்தகோபி
கோடிதவம் செய்தாலும் ஞானங்காணான்
தேரான சரக்கதிலு மட்டியானால்
திரணமுந்தான் பரியாது திண்ணந்தானே.

(பொ-ரை.) யாரொருவருக்குக் கோபமொழியவில்லையோ அவர்களுக்கும், பிராணாயாமம் பலிக்கப்பெறாதவர்களுக்

கும், ஆசிரியரிடத்தில் எதிர்த்துச் சண்டைசெய்யும் கோபி களுக்கும் இரசவாதமானது அணுவளவுகூட சித்திக்கா தென்பது சத்தியம், (எ-று.) (7)

திண்ணமுள்ள யேமவித்தை யிடக்கண்பாரு
திறமாக வெள்ளிதனை வலக்கண்பாரு
வண்ணமுள்ள வாலையது மகாரம்போடு
வாமத்தின் பக்கமது வகாரமாச்சு
எண்ணமுள்ள மேல்வீட்டிற் சிங்கென்றூது
ஏகாந்தந் தோன்றுமடா எட்டிப்பாரு
கண்ணிமையுங் கொட்டாமல் பார்த்தையானால்
காணுமடா வைந்தெழுத் தீபம்பாரே.

(பொ-ரை.) இப்படிப்பட்ட சத்தியத்தையுடைய பொன் செய்யும்வழியானது வலக்கண்ணால் பார்க்கத்தக்கதாகும். வெள்ளிசெய்யும் வழியானது வலக்கண்ணால் பார்க்கத் தக்கதாகும். ஆகையால், மகாரத்தையும் வகாரத்தையும் பக்கங்களில் பாவித்து மேல்வீடாகிய சுழிமுனை யென்னு மிடத்தில் சிம் என்று ஊதினால் ஏகாந்தமாகிய ஞானம் வெளிப்படும். அப்பொழுது அதை நீ பார்த்தாயானால் பஞ்சாட்சர சொரூபமானது உனக்கு அங்கே வெளியாக் கும், (எ-று.) (8)

பாரிலே வங்காளம் பச்சையப்பா
பரிவாக சமமாகப் பலமுந்தூக்கி
நேரிலே மனோசிலையும் பலமுந்தூக்கி
நெடிதான விணங்கன்தான் பலமுந்தூக்கி
சீரிலே உவக்கரந்தான் பலமுந்தூக்கி
சிறப்பான சொச்சிவெள்ளை பலமுந்தூக்கி
காரிலே காளகண்டத் தப்பிப்போகும்
கனமான வைந்துசுண்ணச் செயநீராலே.

(போ-ரை.) உலகத்தினிடத்தில் வங்காளப்பச்சை ஒருபலமும், மனோசிலை ஒருபலமும், கறியுப்பு ஒருபலமும், சவர்க்காரம் ஒருபலமும், கொச்சி வெள்ளைப்பாஷாணம் ஒருபலமும் நிறுத்தெடுத்து மூன் அஞ்சுசுண்ணச் செயநீரால் அரைக்கவேண்டும், (எ-அ.) (9)

ஆலமென்ற சாக்கதுதா னருணனுகு
மழகாக வைத்தெருவிற் புடமுந்திரு
கோலமென்ற வழுரியுப்பு நாதத்தாலே
கொள்ளையப்பா வாதமதற் குயிரதாகுஞ்
சீலமென்ற நாதத்தை யறியாதார்க்கு
செகமெலாந் திரிந்தாலும் வாதங்காணு
கோலமுடன் செந்தூரந் தன்னைத்தாக்கி
யுத்தமனே வெள்ளியிலே பத்துக்கொன்றே.

(போ-ரை.) அப்படியரைத்து பில்லைசெய்து வெயிலில் வைத்தால் ஒருவலைகயான செவப்பாகும். அப்படியான பில்லையை ஐந்தெருவில் புடம்போடவேண்டும். அப்படிப் பட்ட புடத்தை பிரித்து பார்த்தால் செந்தூரமாயிருக்கும் அந்தச்செந்தூரத்தை வெள்ளி பத்துபங்குக்கு ஒருபங்கு கொடுத்தால் பத்துமாற்று பொன்னுகும் ஆனல் இதுவெல்லாம் அழுரியுப்பினுலும் நாதநீரினுலும் உண்டான உயிராகும் இதையறியாதவருக்கு இந்தவாதம் கைகூடாது. எ-று

ஒன்றுக மனந்தன்னை நிறுத்தவேண்டு
மொருமனதாய் குருபதத்தைக் காக்கவேண்டும்
பன்றுக பிராணயஞ் செய்யவேண்டும்
பரிவாக தெரிசனையே பார்க்கவேண்டும்
நன்றுக விப்படியே பதினென்றுந்தான்
நலமாக செப்பினதோ ரருளைப்போற்றி

நன்றாகப் பார்த்துணர்ந்து வருவீர்மக்காள்
நாரியரைச் சேராதீர் நாசமாவீர்.

(பொ-ரை.) இரவாதஞ் செய்வதில் ஒருவன் எவ்வளவு கைபாகஞ் செய்பாகங்களில் சாமர்த்தியமுடையவனாயிருந்தாலும் அவன் மனத்தை ஒருநிலையில் நிறுத்தவேண்டும். குருவின் திருவடிகளைக் காக்கவேண்டும். பிராணாயாம சித்தியைப் பெறவேண்டும். சிவதெரிசனஞ் செய்யவேண்டும். இந்தப் பதினொன்று பாடல்களைக்கொண்ட நூலை நன்றாய்ப் பார்க்கவேண்டும். மேற்சொன்னபடி செய்யாவிட்டாலோ அவனுக்கு அந்த இரசவாதம் ஒருக்காலும் சித்திக்கமாட்டாது. இது பெரியோர்கள் வாக்காகும் ஆகையால் இதை இரசவாதிகளெல்லாம் நன்றாய்க் கவனிக்க வேண்டும். (எ-று.) (11)

இந்து பாரம் கோபியா என்னும்

அநுபவவைத்திய தேவரகசியம்.

இதில் கருவுதரிப்பதுமுதல் ஆயுள்பரியந்தம் நமக்குண்டாகும் 4448-வியாதிகளுக்கும், தேவ-ராக்ஷச மானிட மூன்று சிகிச்சைகளால் நாடிமுதலிய அஷ்டவித பரீட்சைகளும், மூலிகை கடைசரக்கு, பாஷாணம், லோகங்களினால் சிகிச்சைசெய்யும் கிரமமும் சுத்தி, மூலிவ, அளவு காலம், என்னைப்பட்டவைகளை சுருதி யுத்தி அனுபவம் கைபாகம் செய்பாகம் தீட்சை பாகங்களுடன், ஞானம் இயாழும் பர்ப்பம் இருதம் லேகியம் எண்ணெய் தைலம் சுன்னம் இன்னும் பலவித பாகங்களையும் சுலபமாக செய்துக்கொள்ளும் பொக்கிஷமாய் 1600 பக்கங்கொண்ட புத்தகமாக அச்சிட்டு இருக்கிறது இதை ஒருமுறை வாங்கி பரீக்ஷித்தவர்களே தங்கள் புத்ர மித்திரர்களுக்கும் சிபாரிசு செய்வார்கள் இக்கு கடிதம் கலிகோ பயின்டு செய்திருக்கிறது.

விலை ரூபா—6 0 0

பி. எஸ். டி எம் அண்டு, சன்
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

அகஸ்தியர் திருவாய்மலர்ந்த

வேதைகள்.

காப்பு வெண்பா

வானும்புவியு மதியுங்கதிரொளியும்
தேனுக்கெளிந்த சிவகுருவே—தானுந்தன்
நான்கலையுமாராய்ந்த நந்நூலை யைம்பதையும்
தானருளுங் குஞ்சரத்தின் தாள்.

(பொ-ரை.) ஆகாசமும், பூமியும், சூரிய சந்திரர்களும் அவர்களின் ஒளியும் ஆகிய இவைகளெல்லாம் தானேயாய் விளங்காநின்ற சிவமென்னும் குருமூர்த்தமா யெழுந்தருளி வந்தவர், தாமும், தம்மால் அளிருச்செய்யப்பட்டனவாகிய நான்கு வேதங்களையும் நன்றாக வாராய்ந்து ஐம்பது பாட்டுகள் அடங்கிய இந்த நூலை நான் சொல்லும் பொருட்டு ஞானமுகத்தையுடைய விநாயகக் கடவுளின் இரண்டு திருவடிகளும் என்முன்னின்று இந்தநூல் இனிது முடியும்படி திருவருள்செய்யும், (எ-று.)

நூல்.

மயமான முப்பூவின் மார்க்கந்தன்னை
வைத்தியத்திலாக்கியே விரித்துச் சொல்வேன்
ஜெயமான கணபதியுங் கந்தன்றானும்
சிவனோடே யுமையாள்பார் வதியுங்கூட
கயமாக வெப்போது முன்னேநின்று
நாடிகே முப்பூவை நயந்துகேட்க

வயமாகச் சொல்லுகிறேன் ஐம்பதுக்குள்
வைத்தியரே யிப்பொருளை வணங்கிக்கேளீர்.

(போ-ரை.) வேதைகளுக்கும், வைத்தியங்களுக்கும் ஓர் அருள் மயமாக வழங்கிவராநின்ற முப்புவைச்செய்யும் கை பாகம் செய்பாகங்களை, விநாயகக்கடவுளும், முருகக் கடவுளும், சிவபெருமானும், உமாதேவியும் கேட்கும்படி அவர்கள் முன்னிலையில் நின்று மேற்படி மார்க்கத்தை ஐம்பது பாட்டுகளால் சொல்லுகின்றேன். ஆனால் நல்ல உண்மை சாஸ்திரங்களை முறையாகக் கற்று அவைகளின் முறைப்படியே நடந்துவாராநின்ற ஆயுள்வேத பண்டிதர்களே நீங்கள் நான் சொல்லும் இந்த நூலை நன்றாய்க் கேட்பீராக. (எ-று.) (1)

வணக்கம்.

வணங்குவது மாரையென்றாற் குருவின்பாதம்
வாலையொடு சிவன்பாதம் நிர்வாணிபாதம்
வணங்குவது யாரையென்றாற் கணபதியுங்கந்தன்
வாகாகப் பூசிக்க வரிசையாகும்
வணங்குவது மைம்பதுக்குள் முப்பூவப்பா
வாதத்துக் காகுமது வைத்தியத்துக்காகும்
வணங்குவதைம்பதையும் வணங்கவேண்டும்
வைத்தியத்துக் கிஃதுயிர்காண் வாதிகேளே.

(போ-ரை.) (வயித்தியர்களே! நீங்கள் இந்த முப்புவின் மார்க்கத்தைத் தெரிந்துகொள்ள விரும்பினால்) உங்களுடைய ஆசிரியர்களுடைய திருவடிகளையும், சத்தியின் திருவடிகளையும், சிவத்தின் திருவடிகளையும், நிர்வாணியின் திருவடிகளையும் முறைப்படி பூசைசெய்து, பிறகு மேற்படி மார்க்கத்தைச் சொல்லாநின்ற இந்த ஐம்பது பாட்டுகளையும் நமஸ்காரம் செய்யவேண்டும். இது வாதமார்க்கத்

துக்கே பெரும்பாலும் சொல்லப்பட்டது. வயித்தியத்திற்கும் ஆகும். ஆனால் இதுவயித்தியத்திற்குரிய மருந்துகளுக்கு உயிர்போன்றதாகும். ஆகையால் வாதிகளே இந்தமுறையை நீங்கள் நன்றாய்க் கேளுங்கள். (2)

புத்தி கூறல்

வாதியென்று லிந்தமுறை யறியவேண்டும்
  வாதந்தானே துசெய்ய வைத்தியமேதப்பா
ஆதியென்ற வைத்தியந்தான் பிரமவித்தை
  ஆத்துமாவை ரட்சித்தானவனோ சித்தன்
நீதியென்ற தர்மமது நினைக்கவேண்டும்
  நீணிலத்தி லுயிர்களுக்கு மிரங்கவேண்டும்
ஓதியதோர் கன்மம்விட்டுத் தர்மமாறி
  உத்தமனே வைத்தியத்துக் குறுதிகாணே.

(பொ-ரை.) உலகத்தில் வாதியென்கிற பேரையுடையவர்களாயிருந்தால் இந்தமுறைப்புவின் மார்க்கத்தை அவசியம் உணர்ந்திருக்கவேண்டும். அப்படி உலகத்தில் செய்யப்படுகின்ற இரசவாதமும், வயித்தியமும் எதற்காகச் சொல்லப்பட்டன. வயித்தியமானது உலகத்தில் உயிர்களைக் காப்பாற்றுவதாகையால் அதுபிரம வித்தையாகும். வாதமென்றாலோ சித்தாடுவதற்குத் தகுந்த வித்தையாகும். எவனொருவன் மேற்படி வித்தைகளில் யாதேனுமொன்றைச் சாஸ்திரப்படி கற்றுக்கொண்டு உயிர்களைக் காப்பாற்றுகின்றானோ அவனேசித்தப் புருஷனாவான். ஆனால் அப்படிச்செய்கின்றவன் தர்மவானாகவிருக்கவேண்டும். உயிர்களிடத்தில் காருண்ணியமிருக்கவேண்டும், கருமத்தையொழித்தவனாயிருக்கவேண்டும் அப்படியிருப்பது வயித்தியத்திற்குப் பலமுடையதாகும், (எ-று)

காரண முறைத்தல்

உறுதியாம் ஒருநூற்றினைம் பதுக்குள்
உரைத்ததொருலோக மாரணத்தைக்கேளு
உறுதியென்ற முப்பூவின் சுண்ணம்வேண்டும்
உதவாட்டா லொன்றுமில்லை யுடைந்துநீராம்
உறுதியென்ற ஐம்பதையும் விட்டபேர்க்கு
உலகத்தில் வைத்தியந்தா னுண்டோவில்லை
உறுதியென்ற முப்பூவை நீற்றிக்கொண்டு
ஓகோகோ லோகமெல்லா மொக்கநீற்றே.

(பொ-ரை.) ஒவாதிகளே! இந்த உலகத்தினிடத்தில் என்னால் சொல்லப்பட்டிருக்கின்ற நூற்றைம்பது பாடல்களைக்கொண்ட ஒருநூல் உண்டு. அந்த நூலில் லோகங்களையெல்லாம் மாரணவித்தையாகிய மந்திரோச்சாடனத்தினால் நீற்றும்படியான வகையைச் சொல்லியிருக்கின்றேன். (ஆனால் அந்த முறைப்படி செய்வோனுக்கு அந்தலோகங்கள் நீறிப்போகுமே யொழிய இரசவாதத்திலாயினும் ரோகத்தின்மேலாயினும் ஒருக்காலும் போய் வேலைசெய்ய ஆகையால் அந்த நீற்றினங்களுக்கும் முப்புச்சுண்ணம் வேண்டியது அவசியம். அப்படிப்பட்ட முப்புச்சுண்ணமானது கைகூடா விட்டால் லோகங்களெல்லாம் பிரயோசனமில்லாமற்போகும் ஆகையினாலேயே நான் மீண்டும் இந்த ஐம்பதுபாடல்கள் கொண்ட நூலில் முப்புமார்க்கத்தை நன்றாகச் சொல்லியிருக்கிறேன். அப்படியிருப்பதால் இதைசெய்யாமல்விட்ட வயித்தியர்களுக்குத் தாங்கள் செய்யும் வயித்தியம் ஒருபயனையும் கொடுக்கமாட்டாது. ஆகையால் நீங்கள் முதலில் இந்த நூலின் பிரகாரம் முப்புச்சுண்ணத்தை முடித்துக்கொ

ண்டு பின்னர் மற்றைய லோகங்களையெல்லாம் நீற்ற வேண்டும், (எ-று) (4)

முன்னர் அறியவேண்டியவை இவையெனல்.

நீற்றுவகை யறிந்தவனே வைத்தியனாகும்
நிலைத்ததொரு வாதியென்றால் நீற்றுவான்பார்
சாற்றுகின்ற முப்பூவை யறியவேண்டும்
சாதகமாய்க் கைமுறைகள் தப்பாவண்ணம்
பார்த்துரைத்த சுத்திமுறை காணவேண்டும்
பருவமாய்க் குருமுடிக்கும் பாகம்வேண்டும்
சாஸ்திரத்தின் முறையறிந்து குருவைச்செய்தால்
தவறாது பொருளென்றுஞ் சார்ந்துபாரே.

(பொ-ரை.) மேலே சொன்னபடி லோகங்களையெல்லாம் நீற்றுஞ்சக்தியுடையவனே வயித்தியனாவான். இரசவாதியானவன் லோகங்களை நீற்றுவான். ஆனால் இரசவாதியா யிருந்தாலும் இல்லாமற் போனாலும், வயித்தியனாயிருந்தாலும் இல்லாமற்போனாலும், எவனொருவன் கைமுறை செய்முறை தவறாதபடி முப்புவைச்செய்து முடிக்கின்றானோ அவனே இரசவாதியும் வயித்தியனுமென்று சொல்லப்படுவான். இப்படியாகச் சொல்லப்பட்டுவராநின்ற குருமருந்தை முடிப்பதற்குச் செய்பாகங் கைபாகங்களும், சுத்திக்கிரமமும் சாஸ்திரப்படி செய்வார்களானால் மேற்படி மருந்தானது நன்றாக முடிவு பெறும், (எ-று) (5)

இது இன்னாருக்குச் சொன்னதெனல்.

பாரடாமுன்னுரைத்த முப்புவெல்லாம்
பரிவான சித்தருக்குஞ் சிவயோகிக்கும்
சேரடா வைம்பதுக்குள் சொன்னேன்முப்பு
செகத்திலுள்ள மானிடர்க்குச் செய்யவேண்டி
ஊரடா வேறுகொண்ட வுளத்தருக்கு
உறுதியாய்த்தேகமது பெலத்துப்போச்சு
ஆரடாவென்னைப்போற் சொல்லப்போறார்
ஆச்சரியமுப்புவி னருமைபாரே.

(பொ-ரை.) மாணாக்கனாகிய பேர்பூண்டவனே! நான் இதுவரைக்கும் சொல்லின நூல்களிலுள்ள முப்புக்களெல்லாம், சித்துப்புருஷர்களுக்கும், சிவயோகிகளுக்குமே யாகும். ஆனால் இந்த நூலில் சொல்லியிருக்கின்ற முப்புவோவென்றால் இந்த உலகத்திலுள்ளவர்கள் தங்கள் தேகத்தைச் சித்தியாக்கிக்கொள்ளும் நிமித்தமே சொல்லப்பட்டதாகும், ஆகையால் என்னைப்போல் வேறெந்தச் சித்தர்களும், முனிவர்களும் சொல்லவில்லை, ஆகையால் இந்தமுப்புவின் அருமையைநீ நன்றாய் ஆராய்ந்து பார்ப்பாயாக, (எ-று) (6)

முதல் உப்பின்மார்க்கம்.

பாரென்ன வுவருப்பைக் கொண்டுவந்து
பரிவாகச் சுத்தஜலந் தன்னிலிட்டுச்
சீருடனே கலக்கியே தெளியவைத்துத்
தெளிவாகக் காய்ச்சிநன்றாய் வற்றினக்கால்
நீரிலே மறுபடியும் விட்டுக்கிண்டி
நிலையாகத் தெளியவைத்து மிறுத்துக்கொண்டு
வாரமுடன் காய்ச்சியே வற்றவைத்து
வாகாகவிப்படியே காய்ச்சுகாய்ச்சே.

(பொ-ரை) இனி அந்தமுப்புச்செய்யும் மார்க்கத்தைச் சொல்லுகின்றார். எப்படியென்றால், போதுமான சவட்டுப்பைநல்லதாகப் பார்த்துக்கொண்டுவந்து சுத்தஜலம் என்றுசொல்லுகின்ற (பனிச்சலத்தில்) போட்டுக்கலக்கிப் பின்பு தெளியவைத்து அந்தத்தெளிவையிறுத்து காய்ச்சிக் கொள்ளவேண்டியது பிறகு நின்றிருக்கும் அந்த உப்பில் மறுபடியும் சுத்தஜலம் விட்டுக் கலக்கித் தெளிவிறுத்துக் காய்ச்சவேண்டியது. இப்படி காய்ச்சிக் கலக்கிக் காய்ச்சி அடியில் ஒன்றுமில்லாம லாய்விட்டபிறகு முன் தெளிவிறுத்துக் காய்ச்சியதையெல்லாம் ஒன்றாகச்சேர்த்து மறுபடியும் சலம்விட்டுக்கலக்கிக் காய்ச்சவேண்டியது. இப்படியே பத்துமுறை காய்ச்சவேண்டியது. (7)

இரண்டாவது உப்புவின்மார்க்கம்

காய்ச்சுகின்ற முறைக்கெல்லாஞ் சுத்தஜலம்விட்டுக்
கலக்கியே தெளியவைத்துக் காய்ச்சுகாய்ச்சு
ஆச்சிந்தபூவதுதான் வெளுத்துப்போகும்
அப்புறத்தேவைத்த தினியரையக்கேளு
வாய்ச்சதொரு கறியுப்பை வாரிக்கொண்டு
மானிடர்கள் கூட்டுமுப்பின் மார்க்கங்கேளு
பாய்ச்சிந்த படிசுத்தஜலத்தை விட்டுப்
பரிவாகத் தெளிவிறுத்துப் பத்துமுறைகாய்ச்சே.

(பொ-ரை.) ஒவ்வொரு முறை காய்ச்சும்போதும் சுத்தசலம் விட்டுக் கலக்கியே காய்ச்சவேண்டும். அப்படி காய்ச்சினால் அந்த உப்பானது தன்னிடத்திலுள்ள எண்ணெய்நீங்கி வெளுத்துப்போகும். பிறகு அந்த உப்பை வேறேவைத்துக் கொள்ளவேண்டும். இதுவரைக்கும் ஒருஉப்பின் செய்பாகம் முடிந்தது. இனி இரண்டாவது உப்பின்பாகம் சொல்லுகிறேன் எப்படி என்றால்,

உலகத்தில் மனிதர்கள் சோற்றுக்காக உபயோகப்படுத்தும் கறியுப்பைத் தேவையான அளவுக்குக்கொண்டு வந்து முன்னேசவட்டுப்புக்குச் சொன்னபடியே சுத்த ஜலத்தை விட்டுக் கலக்கிக்கலக்கித் தெளிவிருத்து இருத்து முன்போலவே பத்துமுறை காய்ச்சி வேறே வைத்துக் கொள்ளவேண்டும், (எ-று) (8)

மூன்றாவது உப்பின் மார்க்கம்.

முறையாக நிலவுப்பைச் சொல்லக்கேளு
  மூதண்டபிரமாவின் விந்தும்பின்னை
அறையான பூமியதி னாதமாச்சு
  ஆதியுப்பு சிவமென்று மிதற்கேபேரு
மறைவாக வொளித்துவைத்தார் நூல்களெல்லாம்
  மார்க்கமெல்லாஞ் சொல்லுகிறேன் வரிசையாக
நிறையாக்கல்லுப்பால் வளர்ந்ததப்பா
  தீற்றியேதின்பவர்க்குச் சுண்ணாம்பாச்சே.

(பொ-ரை.) இனிமேல் நிலத்திலுண்டாகும் ஒருவகையான உப்பின்மார்க்கத்தைச் சொல்லுகின்றார், எப்படியென்றால், அது பிரமாவின் விந்துவென்றும், பூமிநாதமென்றும் ஆதியுப்பென்றும் சிவமென்றும், பேர்களைப் பெறும், ஆனால் இந்தப்பேர்களையும் இதின்மார்க்கங்களையும் சித்தர்களெல்லாம் தாங்கள்சொல்லிய நூல்களில் மறைத்துவிட்டார்கள். ஆனால் நானே அதின்மார்க்கங்களையெல்லாம் வரிசையாகச் சொல்லுகிறேன். ஆனால் அந்த உப்பானது கல்லுப்பின் காரணத்தால் வளர்ந்ததாகும். இதை தீற்றித்தின்னும் கற்பசாதனையுள்ளவர்க்கு இது சுண்ணாம்பாகும், (எ-று) (9)

சுண்ணமென்று லோகத்தோர் சுட்டுநீற்றிச்
  சுகமாகதாம்பூலம் தின்பார்களே.

சுண்ணாம்புக்கல்லென்று மிதற்கேபேரு
சுத்தாவும் விபூதியும் மிதற்கேபேரு
என்னமுள்ள சுண்ணமப்பா காரச்சுண்ணம்
இயல்பான கல்லுப்பு சுண்ணமாச்சு
தண்ணியிலே போட்டவுடன் நீற்றிப்போச்சு
சவர்க்கார குழியாச்சு சார்ந்துபாரே.

(பொ-ரை) இந்த உலகத்தார்கள் இதை சுண்ணாம்பாகக்கொண்டு நீற்றித்தாம்பூலத்தில் தடவித் தரித்துக் கொள்வார்கள் இதனால் இதற்குச் சுண்ணாம்புக்கல்லென்றும், வெண்மை நிறத்தோடு கூடியிருப்பதால் சுத்தவிபூதியென்றும் இதற்கு அநேகபேர்கள் இருக்கின்றன. இந்தச் சுண்ணாம்பே காரத்தையுடைய சுண்ணமாகும். இதற்கே கல்லுப்புச் சுண்ணமென்று பேராகும். இந்தக்கல்லானது சலத்தில் போட்டவுடன் நீறிப்போகும் இந்த உப்பு இருந்து எடுக்கப்படும் இடமே சவர்க்காரகுழியாகும் இதையெல்லாம் நீ நன்றாய்க்கவனித்துப்பார்ப்பாயாக. ()

சார்வாகவிதைமறைந்தார் சித்தரெல்லாம்
சமுசயங்களில்லையப்பா வெளியாய்ச்சொன்னேன்
சீரானகல்லுதான் துய்யவெள்ளை
செகத்திலிந்தகல்லுதான் மெத்தவுண்டு
நீருனகல்லொன்று மாகாதப்பா
நிர்மலமாய் வெள்ளைக்கல் பிரமகற்பம்
ஆர்வாக வந்தெடுத்தக்ஃ தமுரிக்குள்ளே
அப்பனேயுவர்மண்ணைக் கரைத்துக்கொள்ளே.

(பொ-ரை.) சகல சாஸ்திரங்களையும் உலகத்தார்களுக்காகச் சொல்லியருளிய சித்தர்களெல்லாம் தங்களால் சொல்லப்பட்ட நூல்களில் இந்த உப்பை மறைத்துப் பலவகையாகச் சொல்லிவிட்டார்கள். நானே சந்தேக

விபரீதங்களொன்றுமில்லாமல் வெளியாகச் சொல்லிவிட்டேன். இந்தக்கல்லானது ரொம்பவும் வெள்ளையாயிருக்கும் உலகத்தில் இதுரொம்பவும் கிடைக்கத்தக்கதாகும். வேறுவகை நிறமுடைய கல்லுகள் உதவாவாகும். நல்ல வெள்ளையான கல்லுப்பே முன்சொன்ன பேர்களையும் பிரமகற்பம் என்னும் பேரையும் உடையதாகும். ஆகையால் அப்படிப்பட்ட கல்லை எடுத்துக்கொண்டுவந்து வைத்துக்கொண்டு அந்தக் கல்லுள்ள நிலத்திலிருக்கும் ஒரு வகையான உப்புமண்ணைச் சுத்தஜலம்விட்டுக் கரைத்துக்கொள்ள வேண்டும், (எ-று) (11)

கொள்ளவே யதிலிந்தக் கல்லைப்போட்டுக்
குமுறவே காய்ச்சிவிடு கட்டிப்போகும்
வெள்ளையாய்ச் சுண்ணக்கல் கட்டிப்போச்சு
வேதாந்த மூர்த்தியென்று மிதற்கேபேரு
கல்லென்ற கல்லதனை யண்டநீரால்
கருவாக வரைத்ததனை வில்லையாக்கி
உள்ளபடி சொல்லுகிறேன் உலையிலூத
உத்தமனே சுண்ணம்பா முறைத்துமூதே.

(பொ-ரை) அப்படி கரைத்த அந்தச்சலத்தில் மேலே முன்னர் கொண்டுவந்து வைத்திருக்கும் கல்லைப்போட்டு நன்றாய்க் கலக்கி அடுப்பிலேற்றிக் காய்ச்சினால் அந்தக் கல்லானது கட்டிப்போகும். அப்படிகட்டுவதும் வெள்ளையாய்க்கட்டும், ஆகையால் அப்பொழுது வேதாந்த மூர்த்தியென்று இந்தக்கல்லுக்குப் பேராகும். அப்படி கட்டப்பட்டிருக்கின்ற உப்பை அண்டநீர் வார்த்தரைத்துப் பில்லையாகத்தட்டி மூசையில் வைத்து கொல்லனுடைய உலையில் வைத்து ஊதினால் நல்லவெண்மையான சுண்ணமாகும், (எ-று) (12)

ஊதிடவே சுண்ணமுமாஞ் சலத்தைவாரு
ஓகோகோ நீர்வற்றும் நீறிப்போகும்
வாதிடவே பீங்கானில் வைத்துநீற்று
வளமான ஜலம்போலே நிறையவிட்டு
ஆதியாமண்டலமே வைத்தாயானால்
அதின்மேலே உப்புவந்துபடரும்பாரு
சோதியாமுப்பதனை வழித்துவாங்கிச்
சுகமாகப்பலமொன்று தூக்கிக்கொள்ளே

(போ-ரை.) அப்படியான சுண்ணத்தில் சுத்தஜலம் விட்டால் அந்தநீரை அது இழுத்துக்கொண்டு நீற்றுப் போகும் பின்பு அதைப் பீங்கானில் எடுத்துவைத்து மேற்படி ஜலத்தை நிறையவிட்டு மண்டலம் வரைக்கும் வெயிலில் வைத்து வருவாயேயானால் அதின்மேல் ஒரு வகையான உப்புப் படர்ந்து கொண்டேவரும், அப்படிப் படர்ந்துவந்த உப்பினை வழித்து ஒருபலம் நிறுத்துக் கொள்ளவேண்டும், (எ-று) (13)

தூக்கியே வகையொன்று பலமொன்றாக
சுகமாகச் சூடனொரு பலமுங்கூட்டி
நோக்கியே அண்டநீர் விட்டேயாட்டு
நுணுக்கமாய் வில்லைசெய்தஃதுலரவைத்து
தாக்கியே யுலர்ந்தபின்பு ஓடுமூடி
சாதகமாய்ச் சீலைமண்ணுஞ் சாத்திக்கொண்டு
பாக்கியே முழப்புடத்தில் நீறிப்போகும்
பண்பாக விதையெடுத்துப் பகரக்கேளே.

(போ-ரை) இதில் நிறுத்தெடுத்ததுபோலவே முன்பு முடித்து வைத்திருக்கும் இரண்டு உப்பையும் தனித்தனி ஒவ்வொருபலமாக எடுத்துக்கூடிய மூன்றுபலமும், இத் துடன் ஆலத்தி கர்ப்பூரம் ஒருபலமும் ஆகநான்குபல

மும் ஒன்றாகக் கூட்டி சிற்றண்டம் வெண்கருவால் நான்கு ஜாமம் வரைக்கும் நன்றாயரைத்துப் பின்பு பில்லைசெய்ய வேண்டிய அளவின்படி பில்லைசெய்து நன்றாய் வெயிலில் வைத்து உலர்த்தி உலர்ந்தபின்பு அகலில் வைத்து மேலு மொரு அகல்மூடி நாளுக்கொரு மண்சீலையாக ஏழுநாளை க்கு ஏழு மண்சீலைசெய்து முழப்புடம் போடவேண்டும். அப்படிப்போட்டான விட்டெடுத்துப்பார்த்தால் அது நீற்றிருக்கும். அந்த நீற்றை எடுத்து வைத்துக்கொண்டு வேறேநான் சொல்வதைக்கேட்பாயாக, (எ-று) (14)

கேளப்பா வீரமொரு கழஞ்சுகட்டிக்
கிருமையுள்ள புழுகதிலே கழஞ்சுகட்டி
நாளப்பா பூரமொரு கழஞ்சுகட்டி
நாட்டிலுள்ள சம்பழச்சாறிட்டு ஆட்டி
தாளப்பா வில்லைசெய்து ரவியிற்போடு
சாதகமாய் முழப்புடத்திற் போட்டுவாங்கு
வேளப்பா சுண்ணமது கடுங்காரமாச்சு
வெகுசுருக்குப்பூநீறு குருவிதன்றே.

(பொ-ரை) மேல் மருந்துடன் ஒன்றேகால் வராகனெ டை வீரமும், ஒன்றேகால் வராகனெடை புழுகும், ஒன் றேகால் வராகனெடை பூரமும் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றினால் நான்கு சாமமரைத்துப் பில்லைதட்டி வெயிலில் வைத்து உலர்த்திப்பின்பு அந்தப் பில்லையை ஒரு அகலில்வைத்து மேலே அகல்மூடிச் சீலமண் செய்து முழப்புடம் போட்டாறவிட்டெடுத்துப் பார்த்தால் அதி மிகவும் காரத்தோடுகூடிய சுண்ணமாகும். இதுவே பூ நீற்றால் செய்யப்படும் குருமருந்தாகும், எ-று. (15)

இன்னருக்கு நூல் உதவாதெனல்.

குருவேதோ முறையேதோ வென்பார் மாண்பர்
   கூறியதோர் நூல்காணர் குருட்டுவாதி
தருவான மூப்பூவைப் பாரார்மாண்பர்
   தாரணியில் மனிதர்களை மயக்குவார்பார்
உருவான கல்லுப்பூப பறியமாட்டார்
   உலுத்தருக்கு வாதமஃ துண்டோவில்லை
தெருவோடே அலைகிறதோர் நாயைப்போல
   சென்மித்த கசடருக்கு வாதமேதோ.

(பொ-ரை.) உலகத்தில் மனிதர்கள் குருவேதோ வென்றும், அதின்முறை எங்கிருக்கிறதோ வென்றும், சொல்லுவார்களே யொழிய அந்தக்குருவைச் சொல்லுகின்ற சாஸ்திரத்தை அறியார் அவர்களெல்லாம் குருட்டுவாதிக ளென்றே சொல்லப்படுவார்கள் ஆனல் அந்தமுப்புவாகிய குருமருந்தின்வழி தெரியாதவராயிருந்தாலும் உலகத்தில் மனிதர்களை வஞ்சகம் செய்வதில் திறமுடையவர்களாக மாத்திரம் இருப்பார்கள். இவர்களெல்லாம் தெருவில் திரிந்துகொண்டேயிருக்கும் நாயைப்போன்றவரா வார்கள், (எ-று) (16)

ஏதென்றுபோகாமற் சொல்லக்கேளு
   எடுத்ததொரு துறைக்கெல்லா மெளிதேயாகும்
வாதமென்ற பேர்களெல்லா மயங்கிப்போக
   வயித்தியத்தின் திறவுகோல் மார்மேலாணி
தாதென்ற செந்தூரம் வைப்புக்கெல்லாம்
   தூடியான பூநீறு சொல்லிப்போட்டேன்
காவென்ற வுபதேசம் குருத்தான்சொல்வார்
   கைகண்ட குருவாச்சு கருதிப்பாரே.

(பொ-ரை.) இனி இரசவாதத்துக்காக எடுத்துக்கொண்ட மார்க்கங்களுக்கெல்லாம் இம்மருந்தொன்று முடித்

துக்கொண்டால் அந்தவாதமானது மிகவும் இலகுவாக முடிவுபெறும் ஆனல் இதை யறியாதவாதிகளெல்லாம் இதுவயித்தியத்திற்கே யாகுமென்றுசொல்லி மயங்குவார்கள். நானே செந்தூரம் சரக்குவைப்பு இவைகளுக்கும் இரசவாதத்திற்குமேல் இந்தப் பூநீற்று வேலையை ரொம்பவும் கருணையாகச் சொல்லிவிட்டேன் இது குருவினால் தெரிந்துகொள்வதாக விருந்தால் (நான் சொல்லுவது டன் பிரயாசமும் அதிகமாகும்.) ஆகையால் இந்தச் சாஸ்திரமே குருவாக வினைத்துப் பார்த்துக் கொள்வாயாக. ()

இந்நூல்விட்டால் ஒன்றுமாகாதெனல்

பாரப்பா விதிலேயோர் கழஞ்சுவாங்கி
பாய்ச்சியே லோசத்தை நீற்றிப்போடு
வாரப்பா ஒருநூற்றின் ஐம்பதுக்குள்
வைத்ததொரு மர்மந்தான் முப்பூவாலே
சீரப்பா குருவைவிட்டுச் செந்தூரத்தால்
சிவக்காது எடையில்லை ஜெயமாகாதே
ஊரப்பாவிக்கருவை யொளிக்கவில்லை
ஒருகோடி நூலுக்குள் ஒளித்தார்சித்தர்.

(பொ-ரை.) மேலே முடித்துள்ள முப்புவில் ஒன்றேகால் வராகனெடை எடுத்து எப்படிப்பட்ட லோகத்தையும் நீற்றிவிடலாகும். முன்னே நூற்றைம்பது பாடல்களுக்குள்ளே சொல்லிய நீற்றினமும் இந்தமுப்புவினாலே ஆகக்கூடியதாகும். இந்த மருந்தை விட்டு விட்டு செந்தூரஞ் செய்தால் அது சிவப்புமாகாது. எடையும் சரியாகவிருக்கமாட்டாது. சரியானமருந்தாக முடியவுமாட்டாது. ஆகையால் சித்தர்களெல்லாம் தாங்கள்

சொல்லிய நூல்களில் இதைமறைத்துச் சொல்லியிருக்கின்றனர். நானோ அப்படி மறைக்கவில்லை, (எ-று.) (18)

சித்தாக வேண்டுமென்றால் இந்நூல்பாரு
ஜெயமாகுங் குருவறிய விந்நூல்பாரு
முத்தான முப்பூவுக் கிந்நூல்பாரு
மூதண்ட வைத்தியத்துக் கிந்நூல்பாரு
பற்றாத வாதத்துக் கிந்நூல்பாரு
பாரிலுள்ளோர்க் கிந்நூலைப் பகரவேண்டாம்
ஒத்தாடும் சிஷனுக்கு ஒளிக்கவேண்டாம்
உலகத்து மானிடருக் குரைக்கலாகா

(பொ-ரை.) ஓமாணாக்கனென்றும் நல்ல உறுதித்திறமை பூண்டவனே! நான் சொல்வதைக்கேட்பாயாக. என்னவென்றால், நீசித்தனாக இஷ்டப்பட்டாலும், குருமருந்தைத் தெரிந்து கொள்ள நினைத்தாலும், முப்புமார்க்கத்தில் பழக விரும்பினாலும், வயித்தியஞ்செய்ய நினைத்தாலும், வாதஞ்செய்ய நினைத்தாலும், இந்தநூலை நன்றாய்ப் படித்தாராய்ந்தறிந்து இதின்படி செய்வாயாக. அல்லாமலும் இந்த உலகத்தி லுள்ளவர்க்கு இந்தநூலைக் காட்டவேண்டாம். நல்லசிஷ்ய பரம்பரை தவறாத உன்னைப்போன்ற மாணாக்கனுக்குக் காட்டாமல் ஒளிக்கவேண்டாம், (எ-று.) (19)

ஆகாத வழியினைத்தான் அடுக்கலாகா
ஆருக்கு மிந்நூலைக் கொடுக்கவேண்டாம்
பாகான முப்பூவை விடுக்கலாகா
பாவிகட்குஞ் செந்தூரம் பகரலாகா
போகாத கன்மத்தை நிவர்த்திசெய்து
பூதலத்தி வைத்தியஞ்செய் புண்ணியமாகும்

வாகாகச் செய்தாலே சித்தியாகும்
வல்லமையாய்ப் பொய்ச்சித்துச் செய்யலாமோ.

(பொ-ரை.) வேறுமுடியாத மருந்துகளை யெல்லாம் முடிப்பதற்குத் தலையிட்டுக் கொள்ளவேண்டாம். எப்பொழுதும் என்னமருந்து செய்தாலும் அதில் இந்த முப்பைச் சேர்க்காமல் விட்டுவிடவேண்டாம். மோசஞ் செய்து மருந்தை அடித்துக்கொண்டு போகும் தன்மையுள்ள பாவிகளுக்குச் செந்தூரம் செய்யும்விதத்தைச் சொல்ல வேண்டாம். ஆகையால் நீயே உன்னுடைய கர்மத்தையெல்லாம் நீக்கிக்கொண்டு வயித்தியஞ் செய்வாயானால் புண்ணியசாலியாவாய் அதைவிட்டு வீண்மார்க்கத்தில் சென்று அதில்அலைந்து திரியாமல் மிகவும் பராக்கிரமத்தோடு செய்தாயானால் சகல சித்திகளுமுண்டாகும்.

உருக்கினத்தை மறைத்தமை.

ஆமிந்த வகையெல்லாந் தெரியச்சொன்னோம்
அப்பனே உருக்கினத்தைச் சொல்லவில்லை
நாமிந்த வகையெல்லாஞ் சொன்னோமப்பா
நரசென்ம மானதெல்லா மதிகசென்மம்
ஓமிந்த ஜீவஜெந்தைச் சிவனார்கீற்றி
உலகத்தி லுண்டாக்கித் திருஷ்டிச் செய்தார்
வாமிந்தச் செந்துகள் நடக்கையாலே
வந்ததடா நோய்களென்ற வறுமைதானே.

(பொ-ரை.) இப்படிப்பட்ட விதங்களெல்லாம் நாம் தெரியும்படி சொல்லிவிட்டோம். ஆனால் இதுவரைக்கும் உருக்கினத்தை மாத்திரம் சொன்னதில்லை. ஆகையால் இந்த முதற்சாரண மருந்தைக்கொண்டே சிவபெருமானும் உலகத்தினிடத்தில் உயர்ந்த மானிடப்பிறப்பை

உண்டாக்கினார். அப்படி யுண்டாக்கியதொழில் நடக்கையினாலே நோய்களெல்லாம் அந்த மனுஷர்களுக்கு வந்து மூண்டுக்கொண்டன, (எ-று.) (21)

பிணிவரலாறு.

தானென்ற நோய்களினாற் செத்துப்போனால்
தாரணியில் மனிதருண்டோ தாயேசொல்வார்
வானென்ற சிவனைக்கேள் மைந்தாவென்று
வாயிசொல்ல மாதாவே நீயேசொல்லு
தேனென்ற மனோன்மணியாள் சிவனைக்கேட்டு
செகத்திலே மனிதரைநீ சிருட்டிசெய்தால்
நோயென்று வியாதிகளை யுடனேவிட்டு
நனுக்கமற்று மரணத்தா லுய்வதேதோ.

(பொ-ரை) அப்படி நோய்கள்வந்து மூண்டுக்கொள்வதினால் பிறகு உலகத்தில் மனிதர்கள் இருக்கமாட்டார்களே தாயே! என்று சத்தியைக் கேட்கச் சத்தியானவள் சிவபெருமானைக் கேளென்றுசொல்ல அதற்குநீயே அச்சிவபெருமானைக் கேட்டுச் சொல்ல வேண்டுமென்று மறுத்தும் கேட்டுக்கொண்டதற்கு, அவள் சிவபெருமானை நோக்கி உலகத்தில் மனிதர்களைச் சிருட்டித்து உடனே நோய்களையும் விட்டுக்கொல்வது எற்றுக்கோ? (எ-று.)

உய்வதினால் வெகுபாவ மென்றுபோற்றி
உமையவள்தா னவர்பாதம் பணிந்துகேட்க
செய்வதென்ன அவரவர்கள் கன்மத்தாலே
தீவினைக ளாலெடுத்த சடலத்தோர்கள்
நைவினையா லுய்யாம லடியேனுக்கு
நல்லவாக்கு தந்தருளி நல்கவேணு

மைவிழிசே ருமையாளே உலகத்தோர்க்கு
வைத்தியமே மருந்தொன்று வகைசொல்வோமே.

(பொ-ரை.) அப்படிகொன்று அதினால் இறந்து மீண்டும் ஜெனிப்பது ரொம்பவும் பாவமல்லவா என்று சொல்லிச் சிவபெருமானுடைய திருவடிகளுக்கு நமஸ்காரஞ் செய்து கேட்டாள். அதற்கு அவர் அதுவெல்லாம் நம்மால் ஆகத்தக்கவையல்ல. அவைகளை நாமும் அப்படி செய்யவில்லை. ஆனால் எப்படி நடக்கிறதென்று கேட்பாயானல் சொல்லுகிறேன்கேள். அவரவர்கள் கர்மத்தால் அப்படியெல்லாம் நடக்கின்றனவென்று சொல்லியருளினார். அதற்கு உமாதேவியார் உலகத்தினிடத்தில் அந்த் நோய்களையெல்லாம் நிவர்த்தி செய்யும்பொருட்டு சில மருந்துகளை எனக்கு உபதேசித்தாள், (எ-று) (23)

வகையான மூலிகையுங் காரசாரம்
வளமான உபரசமும் பாஷாணங்கள்
தகையான நவரத்தினம் அஷ்டலோகம்
தனிச்சீவ செந்துமுதல் தரணியோர்கள்
வகையான நோய்கட்கு மருந்தீதென்று
மகத்தான மேகமெல்லா மாண்டுபோக
தகையாமற் றுயெனக்கு உபதேசித்தாள்
சாற்றினேன் வயித்திய மிரண்டுலக்ஷத்காணே.

(பொ-ரை.) அந்தமருந்துகளாவன: மூலிகையும், காரசாரமும், உபரசமும், பாஷாணங்களும், நவரத்தினமும், அஷ்ட லோகமும் ஆகும், இப்படி இவைகளையெல்லாம் உபதேசித்து இந்தமருந்துகள் சீவஜெந்துமுதல் மனிதர் வரைக்கும் வருகின்ற நோய்களுக்கெல்லாம் இவையே மருந்தாகும். ஆகையால் இவைகளைக்கொண்டு அவரவர்களுக்கு வரும் ரோகங்களை யெல்லாம் ஒழிப்பாயாக

வென்று என்க்குச் சத்தியானவள் கட்டளையிட்டருள அந்தக் கட்டளையைத் தலைமேற்கொண்டு வயித்தியத்தில் இரண்டு லக்ஷம் செய்யுங்கள் அடங்கிய சாஸ்திரங்களை வெளியிட்டருளினேன் (எ-று.) 24

நூலின்தொகை.

ஞானப்பா பத்துஆயிரமுஞ் சொன்னேன்
கனமான ஆயிரத்து ஐந்நூறுந்தான்
பூணப்பா அறுநூறு யிருநூறுடு
புகழாக மூன்றுபத்து மைந்துமாகத்
தோணப்பா கன்மசூஸ்திர முன்னூறு
துறையான வைம்பதுக்குள் சுருக்கிப்போட்டேன்
வீணப்பா மற்றதெல்லா மிந்நூல்விட்டால்
வேறான முப்பூவின் வீதிதானே.

(பொ-ரை.) அதின்பிறகு பத்தாயிரத்தில் ஒன்றும், ஆயிரத்தைந்நூற்றில் ஒன்றும், அறுநூற்றில் ஒன்றும், இருநூற்றில் ஒன்றும், மூன்றில் ஒன்றும், பத்தில் ஒன்றும், ஐந்தில் ஒன்றும், கர்மசூஸ்திரமாக முந்நூற்றில் ஒன்றும், ஆகச்சொல்லிக் கடைசியில் அவைகளையெல்லாம் நன்றாய்ச்சுருக்கி இந்த நூலான ஐம்பதாகச்சொல்லி விட்டேன். இந்தநூலைவிட்டு மற்றநூல்களெல்லாம் வீணாய்ப்போகும் இது உப்புவின் வழியைப்போதிப்பதில் சிறந்ததாகும் (எ-று.) (25)

காந்தவருக்கனம்.

வீதியாய்ச் சொல்லுகிறே னருக்கினத்தை
வெட்டவெளி யாவுந்தன் விபரமாக

ஆதியாம் முப்பூவிற் காரங்கூட்டி
அழகான காந்தத்தை யெடைக்கெடையேகூட்டி
பூதியாய் முலைப்பாலால் விட்டுஆட்டி
புகழான குகைக்குள்ளே வைத்துமூடி
ஊதிநா னக்குகையி லுருக்குநீற்று
ஒகோகோ ஒருமணியா யுருகிப்போமே.

(போ-ரை.) இனிமேல் இந்த முப்புவைக் கொண்டு முடித்துக்கொள்ளக்கூடிய உருக்கினத்தை வெளிப்படையாகச்,சொல்லுகிறேன் எப்படியென்றால் மேலேசொல்லி முடித்த முப்புவில் எடைக்கெடை வெங்காரம் சேர்த்து அதின் எடைக்கெடை காந்தத்தைச் சேர்த்து நன்றாய் முலைப்பால் கொண்டரைத்து உலர்த்தி மூசைக்குள் வைத்து கொல்லனுலையில் வைத்து உருக்கினால் அந்தக் காந்தமானது உருகி ஒரேமணியாகக் கட்டிப்போகும். ()

இரும்பு அப்பிரகம்.

போமென்ற விரும்பினது பொடியைவாங்கி
புகழாக அந்தெடைக்குக் குருவைப்போட்டு
தாமப்பா முலைப்பாலால் சாமமாட்டி
சாதகமாய்க் குகைக்குள்ளே வைத்துமூடி
நாமென்ற வக்குகையி லுருக்கியாட்டி
நலமான ஒருமணியாய் நிற்கும்பாரு
வாமென்ற அப்பிரக நவநீதத்தை
மாட்டியே யெடைக்கெடை முன்மருந்துகூட்டே.

(போ-ரை.) இனி அதைவிட்டு அரப்பொடிவேண்டுமான அளவு வாங்கிக்கொண்டுவந்து அதின் எடைக்கு முன் குருமருந்தைப்போட்டு முலைப்பாலால் அரைத்து

மூசைக்குள் வைத்துமேல்மூடி, கொல்லனுடைய உலைக் களத்தில் வைத்து உருக்கினால் ஒரே மணியாய் உருகிநிற்கும், அதைவிட்டு அப்பிரகத்தை வெண்ணெ யாகச் செய்து அதின் எடைக்குக் குருமருந்தைச் கூட்டவேண்டும் (எ-று.) 27

கருடப்பச்சைக்கல்.

கூட்டியே மூலைப்பாலால் சாமமாட்டி
குகைக்குள்ளே வாரியிட்டு மூடிக்கொண்டு
நாட்டியதோர் குகையில்விட் டுருக்கித்திரு
நலமாக ஒருமணியாம் நாட்டிப்பாரு
மூட்டோடே வாங்கிவைத்துப் பின்புகேளு
மூளையான கருடபச்சைக் கல்லுவாங்கி
ஆட்டியே குழிக்கல்லிற் பொடித்துக்கொண்டு
அழகாக வந்தெடைக்கு மருந்துகூட்டே.

(போ-ரை.) அப்படி அந்த மருந்தைச்சேர்த்து ஒருசாமம் வரைக்கும் மூலைப்பால் கொண்டரைத்து மூசைக்குள் விட்டு மூடி உலையில் வைத்து உருக்கிப்பார்த்தால் அந்த அப்பிரகமானது நன்றாயுருகி ஒரேமணியாய் நிற்கும் அதை அந்த மூசையிலேயே வைத்துவிட்டுப்பிறகுகருடப் பச்சைக் கல்வத்திலிட்டுப் பொடித்து வைத்து அதின் எடைக்கு முன்மருந்து சேர்க்கவேண்டும் (எ-று.) (28)

கல் நார்.

மருந்தென்ன குருவதனைக் கூட்டிக்கொண்டு
வளமான மூலைப்பாலி லாட்டியாட்டு
குருந்தென்ன குகையிலிட்டு சில்லுபோட்டு
கூறுக லூதிடவே மணியுமாகும்

விருந்தென்ன கல்நாரை வாங்கியேதான்
விருதான குருக்கூட்டி விரைந்தாட்டி
அருந்துகின்ற பாலாலே யாட்டித்திரு
அப்பனே யுலையில்வைத்து மூட்டியூதே.

(போ-ரை.) அந்தக் குருமருந்தைச் சேர்த்துக் கல்வத்திலிட்டு முலைப்பாலாலரைத்து மூசையிலிட்டு மேலே மூடிசெய்து உலையில்வைத்து ஊதினால் அந்தக்கல்லானது உருகி மணியாய் நிற்கும் இதைவிட்டு, எதாயினும் ஒருவகைக் கல்நாரை வாங்கிக்கொண்டு வந்து அந்த எடைக்குக் குருமருந்தைக்கூட்டி முலைப்பாலால் நன்றாயரைத்து மூசையிலிட்டுப்பின் மேல்மூடி உலையில் வைத்து ஊத வேண்டும் (எ-று) (29)

சாஸ்திரவேதி உப்பு.

மூட்டியே யுருக்கிடவே மணியுமாகும்
மூதண்ட சகஸ்திரமாம் வேதிகேளு
நாட்டியே யெடைக்கெடைதான் குருவைச்சேர்த்து
சாதகமாய் முலைப்பாலா லாட்டித்திரு
ஆட்டியே குகையில்வைத்து மாட்டியூது
அப்பனே ஒருமணியாய் நிற்கும்பாரு
தேட்டியே டங்கணத்தைச் சேர்த்துக்கொண்டு
திடமாக வெடைக்கெடைதான் குருவைக்கூட்டே.

(போ-ரை.) அப்படி யூதினால் அந்தக் கல்நாரானது நன்றாயுருகி ஒரேமணியாய் நிற்கும். பின்பு அதைவிட்டு சாத்திரவேதி யென்னுஞ் சாரக்கைக்கொண்டுவந்து அந்த எடைக்குக் குருமருந்தைச் சேர்த்துமுலைப்பாலால் அரைத்து மூசையிலிட்டு மேல்மூடி உலையில் ஊதினால் அது உருகி ஒரேமணியாயிருக்கும். இனிஇதை வேறே எடுத்து

வைத்துக்கொண்டு, உப்பைக்கொண்டுவந்து அந்த எடைக்குக் குருமருந்தைச் சேர்க்கவேண்டும் (எ-று) (30)

குருவதினைக் கூட்டியென்ன பொடித்துக்கொண்டு
 கூசாமல் முலைப்பாலையிட்டு ஆட்டு
திருவானக் குகையில்வைத்து மூடிக்கொண்டு
 திறமாக வூதிவிட்டுத் திரளுமட்டும்
பருவமுடன் வகைபார்த்துக் குகைக்குளிட்டுப்
 பாங்காக மூன்றுமுறை குலிக்கியூது
மருவாகமணியாக வாங்கிக்கொண்டு
 வளமான அண்டத்தோல் வாங்கிடாயே.

(பொ-ரை.) அந்தக் குருமருந்தைச் சேர்த்துப் பொடிசெய்து முலைப்பால் விட்டரைத்து மூசையிலிட்டுமேல் மூடிச் சீலைசெய்து உலைக்களத்தில் வைத்து அதுநன்றாய் உருகித்திரண்டு வரும்வரைக்கும் ஊதவேண்டும். இப்படி மூன்றுதரம் பார்த்துப் பார்த்து ஊதவேண்டும். அப்படி யூதினால் அது உருகி மணியாய் நிற்கும். பின்பு அதை வேறே வைத்துக்கொண்டு பின்பு கோழிமுட்டைத்தோல் வாங்கிக்கொண்டு வரவேண்டும். (எ-று) (31)

அண்டத்தோல்.

வாங்கியே சவ்வுதனைத் தள்ளிப்போட்டு (கூட்டி
 மருந்தென்னகுருவுதன்னை யெடைக்கெடையே
வாங்கியே முலைப்பாலை விட்டுஆட்டி
 வளமாகக் குகையில்வைத்து வாங்கியூது
எங்கியே மணியாக விறங்கிப்போகும்
 இன்னமொரு சேதியுண்டஃ தியம்பக்கேளு
தூங்கியே திரியாதே சொல்லக்கேளு
 துடியான சங்கதனைப் பொடியாய்த்தூக்கே.

(போ-ரை.) அந்தத் தோலைக்கொண்டுவந்து உள்ளிருக்கும் சவ்வுத்தோலை நீக்கிப்போட்டுப் பின்பு நிறுத்துப் பார்த்து அந்த எடைக்குக் குருமருந்தைச் சேர்த்து கல்வத்திலிட்டு முலைப்பாலால் நன்றாயரைத்து மூசையிலிட்டு மேல்மூடிக் கொல்லனுடைய உலைக்களத்தில் வைத்து நன்றாய் வாங்கி வாங்கி யூதினால் அந்தத் தோலானது உருகி ஒரேமணியாய் நிற்கும். பிறகு அதை ஆறவைத்து எடுத்துக்கொண்டு சங்கு கொண்டுவந்து பொடியாய்ச் செய்து நிறுக்கவேண்டும் (எ-று.) (32)

கர்ப்பூர சிலாசத்து.

தூக்கியே யெடைக்கெடைதான் குருவைக்கூட்டி
துலக்கவே முலைப்பாலை விட்டுஆட்டி
ஆக்கியே குகையில்வைத்து உருக்கியாட்டு
அப்பனே யொருமணியா யாகும்பாரு
நோக்கியே கிலாசத்து சொல்லக்கேளு
நுணுக்கியே யெடைக்கெடைதான் குருவைப்போ
தாக்கியே முலைப்பாலை விட்டுஆட்டி (ட்டு
சாதகமாய்க் குகையில்வைத்து சார்வாயூதே.

(போ-ரை.) அப்படி நிறுத்த அந்த எடையின் பிரகாரமே முன்முடித்து வைத்திருக்கும் குருமருந்தைச் சேர்த்துக் கல்வத்திலிட்டுப்பொடித்து முலைப்பாலால் நன்றாயரைத்து மூசையிலிட்டு மேல்மூடிக் கொல்லனது உலையில் வைத்து ஊதினால் அது ஒரேமணியாய் உருகிநிற்கும், அதையெடுத்து வைத்துக்கொண்டு நல்ல கர்ப்பூரசிலாசத்து போதமானவளவு வாங்கிக்கொண்டுவந்து அந்த எடைக்குக் குருகூட்டி முலைப்பாலா லரைத்து மூசையிலிட்டு உலையில் வைத்து நன்றாய் ஊதவேண்டும் (எ-று)

நவரத்தினம். அஸ்தி.

சார்வாக வூதவொரு மணியாய்நிற்கும்
தருவானநவரத்தினஞ் சொல்லக்கேளு
ஆருன வொன்பதையும் வெவ்வேருக
அந்தந்த வெடைக்கிடைதான் குருவைக்கூட்டி
போராகவரைத்ததனை குகையில்வைத்து
பெருமைபடவூதிடவே மணியுமாகும்
கார்வாகமனிதருட அஸ்திதன்னைக் (ணே
கலந்ததனைப் பொடியாக்கி குருவெடைதான்கா

(பொ-ரை.) அப்படி யூதினல் அது உருகி ஒரேமணியாய் நிற்கும். அதைவிட்டு நவரத்தினங்களையும் கொண்டுவந்து ஒவ்வொன்றையும் வெவ்வேருக நிறுத்தெடுத்து அந்த ஒன்பதுக்குஞ் சேர்ந்த மொத்த எடைக்குக் குரு மருந்தைச் சேர்த்து முலைப்பாலால் அரைத்து மூசையில் வைத்து மேல்மூடி உலையில்வைத்து ஊதினல் அதுஉருகி மணியாய்நிற்கும். அதைவிட்டு மனிதருடைய எலும்பு பச்சையாகக் கொண்டுவந்து பொடியாக்கி அந்த எடைக்குக் குருமருந்தைச் சேர்க்கவேண்டும் எ-று) (34)

மான்கொம்பு.

காணந்த வெடைக் கெடைதான் முலைப்பால்விட்டு
கலந்தரைத்துக் குகையில்வைத்து காடாயூது
பூணந்தத் தாய்க்குகையி லுருக்கித்திரு
புகழாக வொருமணியாய் நிற்கும்பாரு
தோணந்தக் கலையினது கொம்பைவாங்கி
சுகமாகசீவியதை தூக்கிக்கொண்டு
ஊணந்த வெடைக்கிடைதான் குருவைவிட்டு
உறைப்பாக முலைப்பாலா லாட்டிவாங்கே.

(பொ-ரை.) பின்னர் அப்படிச் சேர்க்கப்பட்ட அந்த மருந்தை மூலைப்பாலாலரைத்து மூசையிலிட்டு மேல்மூடி நன்றாய் வாங்கி வாங்கி யூதினால் அது உருகி ஒரேமணியாய் நிற்கும். அதையெடுத்து வேறே வைத்துக்கொண்டு, மான்கொம்பு போதுமான அளவுக்கு வாங்கிக்கொண்டு வந்து அதைச் சீவித்தூளாக்கி அந்த எடைக்குக் குரு மருந்தைக்கூட்டிக் கல்வத்திலிட்டு மூலைப்பாலா லரைக்க வேண்டும் (எ-று) (35)

ஆமையோடு.

வாங்கியே குகையில்வைத்து உருக்கித்திரு
வளமாக குகையினுள்ளே கண்விட்டாடும்
பாங்கியே ஆமையுடல் தன்னைவாங்கிப்
பாங்காக விடித்ததனை நொருக்கிக்கொண்டு
தாங்கியே குருவதனைச் சமனாய்சேர்த்து
சார்வாக மூலைப்பாலா லதனையாட்டி
நீங்கியே குகையிலிட்டு உருக்கியூது
நேராக வுருக்கினத்தின் நீதிகேளே.

(பொ-ரை) அரைத்து வழித்துமூசையிலிட்டு மேலோடு மூடிச் சீலைமண்செய்து கொல்லன் உலையில்வைத் துருக்கினால் கண்விட்டாடும் சமயம்பார்த்து எடுத்து ஆற வைத்து மூசையை உடைத்து எடுத்து வைத்துக்கொள்ளவும், பின் ஆமை யோட்டைக் கொண்டுவந்து இடித்துப் பொடியாக்கி நிறுத்து, இதற்குச்சரியாகக் குருமருந்தைக் கூட்டிக் கல்வத்திலிட்டு மூலைப்பாலா லரைத்து வழித்து மூசையிலிட்டு மேலோடுமூடிச் சீலைமண்செய்து உலையில் வைத்து நன்றாய் வாங்கிவாங்கி யூதி நன்றாய் உருகி மணியானபின் இறக்கி எடுத்துவைத்துக்கொள்ளவேண்டியது.

உருக்கின செந்தூரம்.

நீதியாயுருக் கினத்தின் மணியையெல்லாம்
நிசமாகவெடைக் கெடைதான்கெந்திகூட்டி
சேதியா யுடைத்ததனைப் பொடியாய்ப்பண்ணி
திட்டமா யரைத்திடுவாய் நாலுஜாமம்
ஆதியாய் வில்லைசெய்து வைத்துக்கொள்ளு
அழகான பழச்சாற்று லாட்டித்திரு
வாதியாய் வந்தவனை வெளியில்வைத்து
வரிசையாய் மூன்று நாளாட்டிப்போடே.

(போ-ரை.) மேற்படி இரசவாதத்திற்குக் காரணமாயுள்ள இதுவரைக்கும் உருக்கித்திர்த்தமணிகளையெல்லாம் தனித்தனி உடைத்துப் பொடியாக்கி நிறுத்துப் பார்த்து ஒவ்வொன்று இருக்கும் எடைக்குச் சரியாக நெல்லிக்காய்க் கந்தகத்தை நிறுத்துச்சேர்த்து நல்ல எலுமிச்சம் பழச்சாற்றால் நாளொன்றுக்கு நாலுசாமமாக மூன்று நாள் விடாமற்படி நல்ல பலசாலியானவன் அரைக்கவேண்டும். அப்படியரைக்கும்போது யாரொரு இரசவாதியையும் சேர்க்கவேண்டாம், (எ-று.) (37)

போட்டதொரு வில்லதனை யோட்டில்வைத்து
புகழாக மேலோடு கொண்டுமூடி
நாட்டமாய் சீலைசெய்து கெஜபுடத்தில்
நன்றாகச்செந்தூர முருக்கம்பூப்போல்
பூட்டவே செப்புதனில் பதனஞ்செய்து
புதுமையாய் தீரும்நோய் புகலக்கேளு
நீட்டவே யெந்தெந்தநோய்கள் குஷ்டம்
நினைவான அநுபானமறிந்து செய்யே.

(போ-ரை.) அரைப்புத் தீர்ந்தவுடன் நான்காநாள் காலையில் பில்லைதட்டி வெயிலில்வைத்துநன்றாயுலர்த்தி, உலர்

ந்தபின் அந்தப்பில்லையை அகலில்வைத்து மேலும் அகல் மூடிச் சீலைமண் வலிவாகச் செய்து நூறுவரட்டியில் புடம்போட வேண்டியது. அப்படிப்போட்ட புடமான அ தானாகவே நன்றாகயெரிந்து குளிர்ந்தவுடன் புடத்தைப் பிரித்துப்பார்த்தால் அந்த மருந்தானது முருக்கம்பூவைப் போல சிவந்து செந்தூரமாயிருக்கும். அதையெடுத்துப் பத்திரப்படுத்திக்கொண்டு, பின்பு மனுஷர்கள் தேகத்தி லுண்டாகிவரும் குஷ்டம் முதலாகச் சொல்லப்பட்ட எந்த நோய்க்கும் கொடுக்கவேண்டிய அநுபானத்தை யறிந்து நல்லமாணாக்கத் தன்மைபூண்ட நீகொடுத்து வரக்கடவாய் (எ-று) (38)

அனுபான விபரங்கள்.

செய்யவே யிரும்பதனைத் தேனிற்கொள்ள
    செகத்திலுள்ள பாண்டுவகை யெல்லாந்தீரும்
மையவே காந்தத்தை தேனிற்கொள்ள
    மகத்தான வாயுவோடு பாண்டுபோகும்
உய்யவே யிப்பாகஞ் சஞ்சீவிதன்னில்
    உகந்தக்கால் நீரிழிவு மோடிப்போகும்
நையவே கருடனைத்தான் தேனிற்கொள்ள
    நாடாது கண்ரோகம் நாடிப்பாரே.

(பொ-ரை) இரும்பு உருக்கிச் செந்தூரத்தைத் தேனி லனுபானஞ் செய்துதின்றால் விஷபாண்டுமுதலிய சகல பாண்டுகளுந் தீர்ந்துவிடும். காந்த செந்தூரத்தைத் தேனி லனுபானஞ் செய்து தின்றால், வாயுக்களும், பாண்டுவை களும்போகும் இந்தச் செந்தூரத்தை அமிர்த சர்க்கரையி லநுபானஞ் செய்து தின்றால் நீரிழிவு போகும். கருடப் பச்சைக்கல் செந்தூரத்தைத் தேனிலநுபானித்துத் தின்

ரால் கன்களில் உண்டாகும் காசங்களெல்லாம் நிற்காமல் போய்விடும் (எ-று) (39)

பாருநீ கன்றுரைத் தேனிற்கொள்ள
பாரிலுள்ள ரோகமது சேத்துமர்திரும்
தேடீவே சாஸ்திரவேதி பாலிற்கொள்ள
தேகத்திலுள்ளநோய் சிதறிப்போகும்
வாருநீடங்கணத்தை யிஞ்சிச்சாற்றில்
மருகிடவே வாதசுரஞ் சன்னிப்போகும்
சீரானஅண்டத்தை தூதுவேளையிற்கொள்ள
க்ஷயமோடுகாச மிளைப்புதீருமீளே.

(பொ-ரை) கல்நாரால் செய்யப்பட்ட செந்தூரத்தைத் தேனிலனுபானஞ் செய்து தின்றுவந்தால் சேத்துமத்தி லுண்டாகும் நோய்களெல்லாம் தீர்ந்துபோகும், சாஸ்திர வேதியால் செய்யப்பட்ட செந்தூரத்தை மூலைப்பாலிலனு பானஞ்செய்து தின்றுவந்தால் வாதசுரமும், சந்நிகளும் தீரும். முட்டைத் தோல் செந்தூரத்தை தூதுவேளைச் சாற்றி லனுபானஞ் செய்து தின்றுவந்தால் க்ஷயம், காசம், ஈளைமுதலியவைகள் தீரும். (எ-று) (40)

ஈளைபோஞ் சங்குசுண்ணம் பனைவெல்லத்தில்
இட்டாக்கால் வாயுவெல்லா மிறந்துபோகும்
வாளாகும் பித்தமெல்லா மாண்டுபோகும்
மைந்தனே யநுபான மறிந்துசெய்தால்
காளையாய் சலாசத்துச் செந்தூரத்தைக்
கடுக்காயிற் றின்றிடவே மகோதரங்கள்
பேளையாம் பெருவயிறு நீராம்பல்போம்
பெரிதான ரத்தினத்தின் பெருமைகேளே.

(பொ-ரை.) சங்கினால் செய்யப்பட்ட செந்தூரத்தைப் பனை வெல்லத்தில் அனுபானஞ்செய்து தின்றுவந்தால்

வாயுக்களும், பித்தங்களும், பாண்டுரோகமும் நிற்காமல் போய்விடும், ஆனால் என்னுடைய மாணாக்கனே நீ நல்ல அனுபானங்களை அறிந்து வைத்தியஞ்செய்யவேண்டியது உன்னுடைய கடமையாகும். ஆனால் இலாசத்துச் செந்தூரத்தைக் கடுக்காய்த் தூளில் அனுபானஞ்செய்து தின்றுவந்தால் மகோதரங்கள், பெருவயிறு, நீராம்பல், ஆகிய கொடிய ரோகங்கள் தீர்ந்துபோகும். இனி ரத்தினத்திற்கு அனுபானஞ் சொல்லுகிறேன் (எ-று.) (41)

பெருமையுள்ள மாணிக்கஞ் சாதிக்காயிற்கொள்
  பெரும்பாடு மெலும்புருக்கி பிரிந்துபோகும்
அருமையென்ற பச்சைதனை கற்கண்டிற்கொள்ள
  அஸ்திசுரம் வெட்டைமுத லைகன்றுபோகும்
கருமையென்ற வயிரத்தை சீனியிற் கொள்ள
  சலக்கழிச்சல் நீரிழிவு சாரசதோடம்
ஒருண்மையென்ற வைடூரியம் பாலிற்கொள்ள
  உள்வறட்சிகள் ரோக மோடிப்போமே.

(பொ-ரை) மாணிக்கத்தாற் செய்யப்பட்ட செந்தூரத்தைச் சாதிக்காய்த்தூளில் அனுபானஞ்செய்து தின்றுவந்தால் பெரும்பாடும், எலும்புருக்கியுந்தீர்ந்து போகும் பச்சைக்கல் செந்தூரத்தைக் கற்கண்டில் அனுபானஞ் செய்து தின்றுவந்தால் அஸ்திசுரம் சூடு, முதலானவைகள் நீங்கிப்போகும், வயிரத்தால் செய்யப்பட்ட செந்தூரத்தை சீனிசர்க்கரையில் அனுபானஞ் செய்து தின்றுவந்தால், சலக்கழிச்சலும், நீரிழிவும் நீங்கிப்போகும். வைடூரியத்தால் செய்யப்பட்ட செந்தூரத்தை முலைப்பாலில் அனுபானஞ் செய்து தின்றுவந்தால் வறட்சிமுதலிய ரோகங்கள் நீங்கிப்போகும். (எ-று) (42)

போகுமே கோமேதகம் நெய்யிற்கொள்ள
புகழான விளையொடு க்ஷயரோகம்போம்
வாகுசேர் கலைக்கொம்பைத் தேனிற்கொள்ள
மைந்தனே கண்துலங்கு மயக்கந்தீரும்
ஆகுமிந்த நீலத்தை திரிகடுகிற்கொள்ள
ஆச்சரியங் குஷ்டமெல்லா மகன்றுபோகும்
மோகமா முத்தநினைத் தின்பாயானல்
மூர்க்கமாம் பவளத்தின் முறையைக்கேளே.

(போ-ரை.) கோமேதகத்தினல் செய்யப்பட்டிருக்கும் செந்தூரத்தை நெய்யில் அநுபானஞ்செய்து தின்றுவந்தால் ஈளை க்ஷயம் முதலிய ரோகங்கள் நீங்கிப்போகும். மான்கொம்பினல் செய்யப்பட்ட செந்தூரத்தை தேனில் அநுபானஞ்செய்து தின்றுவந்தால் கண்ணனது நன்ருய் விளங்கும். மயக்கம்முதலிய பிரமைகள் நீங்கிப்போகும். நீலக்கல்லால் செய்யப்பட்ட செந்தூரத்தை திரிகடுகு சூரணத்தில் அநுபானஞ்செய்து தின்றுவந்தால் குஷ்ட ரோகங்களெல்லாம் நீங்கிப்போகும். முத்தினற் செய்யப் பட்ட செந்தூரத்தை நெய்யில் அநுபானஞ் செய்து தின்றுவந்தால் மேகரோகங்களெல்லாம் நீங்கிப்போகும். இனிப் பவழபற்பம் தின்கின்ற முறையைச் சொல்லுகி றேன் கேட்பாயாக (எ-று) (43)

முறையான பவளத்தை முலைப்பாலிற்கொள்ள
முக்கியமாந் தேகமது வலுத்துப்போகும்
மறையான பித்தமெல்லா மாய்ந்துபோகும்
மகத்தான மேகமெல்லா மாண்டுபோகும்
துரையான வப்பிரகஞ் சீனியிற்கொள்ள
துன்பஞ்செய்ய திரோகந் தொலைந்துபோகும்

அறையான கஸ்தூரி தின்பாயானால்
சாஞ்சன்னி மகன்றுபோகுஞ் சகமிதாமே.

(பொ-ரை.) அப்படியே செய்யப்பட்ட அநுபானஞ்செய்து பவளச்செந்தூரத்தை முலைப்பாலில் தின்றவர்கள் தேக மானது மிகவும் பலப்பட்டுப்போகும். பித்தங்களெல்லாம் ஓடிப்போகும் மேகங்களெல்லாம் நீங்கிப் போகும். அப்பிரகத்தால் செய்யப்பட்ட செந்தூரத்தை சீனிசர்க்கரையில் அநுபானஞ் செய்து தின்றவர்கள் வருத்தத்தைக் கொடுக்கின்ற அநேக நோய்கள் தீர்ந்து போகும். கஸ்தூரியைத் தின்றவர்கள் சுரம், ஜன்னி, இவைகள் நீங்கிப்போகும் (எ-று) (44)

சுகமான ஆமைசத்து தின்பாயானால்
சோர்வில்லா சன்னியொடு சூலைதீரும்
மகத்தான வகைக்கெல்லா மனுபானங்கள்
அறிந்துநீ கொண்டாக்கா லகலுநோய்கள்
சுவமான செந்தூர மிவைகள்தோறும்
தான் குருக்காற் கழஞ்சிதனைத் தாக்கிக்கொண்டு
முகமான குழிக்கல்லி லொக்கவிட்டு
முலைப்பாலா லாட்டிவிடு சாமமொன்றே.

(பொ-ரை.) ஆமையோட்டால் செய்யப்பட்ட செந்தூரத்தை தின்றுகொண்டுவந்தால் சந்நியும், சூலையும், தீர்ந்துவிடும். ஒவ்வொன்றையும் நல்ல அநுபானங்களறிந்து சாப்பிட்டுக் கொண்டு வந்தால் நோய்களெல்லாம் நிற்காமற்போய் விடும். ஆனால் ஒவ்வொரு செந்தூரத்திற்கும் கால் கழஞ்சு குருமருந்தைக் கூட்டிக் கல்வத்திலிட்டு முலைப்பாலால் ஒருசாமம் அரைக்கவேண்டும் (45)

ஒன்றான சாமமது அரைத்துவாங்கி
உருட்டிவிடு குன்றியெடை உலர்த்திக்கொண்டு

நன்றாகவேயரைத்து இஞ்சிச்சாற்றில்
　　நலமாகக் கொண்டிடவே சன்னிதீரும்
பண்டான வலியைந்தும் பயந்துபோகும்
　　படுபாவியான சுரங் கண்ணிற் காணா
உண்டான சேதியெல்லாஞ் சொல்லிப்போட்டேன்
　　ஒழிக்கறியோ மொளிக்கவில்லை யுலகத்தோர்க்கே.

(போ-ரை. அப்படி ஒருசாமம் அரைத்து வழித்துருட்டி ஒரு குன்றிமணியளவு மாத்திரைதிரட்டி யுலர்த்திக் கொண்டு இஞ்சிச்சாற்றி லநுபானஞ் செய்து ஒரு மாத்திரை சாப்பிட்டால் சன்னிதீரும். ஐந்துவகையான வலிகள் நீங்கும். சுரங்களெல்லாம் கண்ணிலகப்படாமல் ஓடிப்போகும். இப்படி யெல்லாம் நடப்பது குருமருந்தின் செய்கையேயாகும். இப்படி இருப்பதை யெல்லாம் நான் ஒருவனே உலகத்தார்களுக்கு வெளிப்படையாகச் சொன்னேனே யொழிய வேறொருவரும் இப்படிச்சொல்லவில்லை (எ-று) (46)

உலகத்தோர் பிழைக்கவென்று கருவைச்சொன்னே
　　உறப்பாக வயித்தியத்தை யூணிச்சொன்னேன்(ன்
நிலைகெட்ட மாக்கருக்கே சொன்னேனில்லை
　　நிலைதவறா மனிதர்கட்கு நிகழ்த்தினேன்யான்
வலைகட்டி மீன்பிடிக்குந் தன்மைபோல
　　வையகத்தில் நோய்களுக்கு வலையிதாகும்
சிலையுமொத்த தேகமடா மனிதர்தேகம்
　　செய்கையறி யாமலிவர் செத்தார்பாரே.

(போ-ரை.) இந்த உலகத்திலுள்ள நல்ல அறிவுடையோர்களுக்கே இதின் கருவையும் வயித்தியத்தின் முறைமையையும் சொன்னேனே யொழிய வேறேபுத்திசாலித்தனமில்லாதவர்களுக்குச் சொல்லவில்லை. மீன்களெல்லாம்

வலையி லகப்பட்டுக் கொள்வது போல நோய்களெல்லாம் இந்த நூலில் சொல்லப்பட்ட மருந்துகளானவலைகளி லகப்பட்டுக்கொள்ளும். இதற்கு யாதொரு சந்தேகமுமில்லை ஆனால் இந்த மார்க்கத்தை தெரிந்து கொள்ளாமலே உலகத்திலுள்ள ஜனங்களில் அநேகர் இறந்துபட்டார்கள்.

பாருநீ பலநூல்கள் நன்றாய்ப்பார்த்து
  பகர்ந்ததொரு நாடியெல்லாம் பகருவாயே
சேருநீகுணங்குறிகள் நன்றாய்ப்பார்த்து
  செயமான மருந்தினது குணபாகங்கள்
சேருநீசாதகமுஞ் சாத்திரமுங்கண்டு
  செயமானநோயினுட குணமுஞ்செய்கை
வாருநீகன்மத்தை நிவர்த்திசெய்து
  வளமான முப்பூவின் மார்க்கஞ்செய்யே.

(பொ-ரை.) மாணாக்கனாகிய நீபல சாஸ்திரங்களையும் நன்றாய் ஆராய்ந்து நாடிகளையும், குணத்தையும், குறியையும், மருந்தின் குணங்களையும் நன்றாய்த்தெரிந்துகொண்டு உன்னுடைய கர்மத்தை நிவர்த்திசெய்து அதன்பிறகு முப்புவைச் செய்யவேண்டும் (எ-று) (48)

செய்யவே குருவதனை முடிக்கவேண்டும்
  செந்தூரமான தெல்லாஞ் செய்யவேண்டும்
வையவே பிணியெல்லாந் தீர்க்கவேண்டும்
  நாட்டிலுள்ள பேர்களெல்லாம் வணங்கவேண்டும்
துய்யவே தியானங்க ளுரைக்கவேண்டும்
  துறையான பூசைமுறை யறியவேண்டும்
பையவே கோபத்தை நீக்கவேண்டும்
  பண்டிதரே யிந்தமுறை பகருங்காலே.

(பொ-ரை.) நான் சொன்னபடியே குருமருந்தை முடித்தபின்பு அதைக்கொண்டு செந்தூரங்களை முடித்துப்

பின்பு அவைகளைக் கொண்டு நோய்களை யெல்லாம் தீர்த்துப் பின்பு உலகத்திலுள்ளவர்களெல்லாம் உன்னை வணங்கும்படி செய்துகொண்டு, பூசை, செபம், தபம், தியானம் முதலியவைகளை முடித்துக் கோபத்தை நீக்கியிந்தமுறையை நன்றாகக் கவனிக்கவேண்டும் (எ-று) (49).

காலான வயித்தியத்தை யுறுதியாகக்
கைமுறைகள் தப்பாமற் கருவைச்செய்தால்
பாலான திறமுடைய பிரமனாவான்
பண்டிதரில் தன்வந்திரி பகவானாவான்
சேலான மச்சமுனி யெண்ணூறும் பார்த்தால்
சிந்தையிலே களங்கமறச் சித்தனாவான்
கலமான மணிபெற்று பிரமன்சொன்ன
நலமுடைய முனிமொழிந்த முப்பூமுற்றே.

(பொ-ரை.) அதன்பின்னர் வயித்தியத்தொழிலை நல்ல கடைப் பிடியாகப் பிடித்துத் தவறாமல் செய்து வருவாயானால் இவனே பிரமதேவனாவானென்று மற்றோர்கள் சொல்லும்படி யாவாய்—அன்றியும், சிலபேரால் இவன் வயித்தியத்தில் தன்வந்திரி பகவானென்று சொல்லவும் யறிவாய். இதுவல்லாமல் எவனொருவன் மச்சமுனிவரால் சொல்லப்பட்டிருக்கின்ற எண்ணூறு பாடல்களைக்கொண்ட சாஸ்திரத்தைப் பார்க்கின்றானோ, அவன் உலகத்தில் சித்துப் புருஷனாவான் இது ஆதியில் பிரமன்சொல்ல பின்னர் அகஸ்தியனாகிய நான்சொன்னேன் இதுவோ முப்புவைச் சொல்லும் நூலாகும். இது முடிவுபெற்றது.

இதில் இரசவாதமென்று முடிவுபெறும விருப்பதா வைத்தியமேயென்று சிலர் சொல்லுகின்றனர்; நல்ல இரசவாதிகளோ வென்றால் இதின்பிரகாரம் முப்புமுடித்து வேதை மார்க்கப்படி வேதிக்கின்றார்கள். என்று சற்குரு பரம்பரையாகக் கேட்டிருப்பதால் இதனை இங்கே எழுதலாயிற்று. ஆகையால் இரசவாதிகள் இந்தக் குரு மருந்தை முடித்து வேதை மார்க்கப்படி செய்துகொள்வார்கள்.

முற்றிற்று.

பபூன்ஸ் ஆட்க் என்னும்

அகட விகட மகா நாடகம்.

இடைவிடாமல் சிரிக்க ஆசையுள்ளவர்கள் இந்த புத்தகத்தை ஒருமுறை வாங்கி வாசியுங்கள்; இதில் பிள்ளையார்சுழிமுதல் முடிவு வரையில் அகஸ்யமாகவே யிருக்கும். இதில் 100-விகடங்கள் நாடகமாகவும் வசனமாகவும் எழுதியிருக்கிறது.

விலை அணா— 8

மோஷாக்சுந்தரி.

அகட விகட அதியற்புத

இந்த கதையைப் படிக்கப்படிக்க சிரிப்பும் சமாஷாரவுமே யிருக்கும். இதில் விபசார விபரீதமும், கற்பலக்கணமும், வாழ்விலே யற்புதமும் உலகபாப புண்ணியமும், துன்மார்க்க ஸ்திரீகளை யணைந்த புருஷன் அடையும் துயரம், இகபரபோக சுகானந்தமும் நிறைவாயிருக்கும். எல்லாம் எதிரில் கண்ட காக்ஷியைப்போலவே எழுதியிருக்கும் படிப்போரும் ஆனந்த முண்டாக்கும்.

விலை அணா— 8

பி. எஸ். டி. எம். அண்டு, சன்

வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

514

அகஸ்திய முனிவர்

வேறுமிசிரவெண்பா.

ஆதியென்ற பூரணமாங் கண்டத்துள்ளே
    ஆத்தாளைத் தொழுதுநின்று ஐங்கரனைப்போற்றிச்
சோதியென்ற அறுநூறு பெருநூல்தன்னைச்
    சூத்திரத்தா னறுபதுக்குட் சுருக்கிவைத்தேன்
சோதியென்ற கருக்குருவும் வெளியாகத்
    திறந்திட்டேன் கைபாக மருந்தின்பாகம்
வீதியென்ற கெவுனத்தி னேட்டம்போல
    விளங்குமணி யின்னூல்தான் சொல்லக்கேளே.

(பொ-ரை.) முதற் பொருளாகின்ற சர்வ வியாபக பரிபூரணன் எழுந்தருளி யிருக்கின்ற கண்ட ஸ்தானமாகிய விசுத்தியில், யாவரையும் பெற்றெடுத்தவளான பராசத்தியை நமஸ்காரஞ் செய்து பிறகு ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக் கடவுளைத் துதிசெய்து, நான் அறுநூறு பாடல்களாகப் பாடிய பெரிய அரியநூலைச்சுருக்கி அறுபது பாடல்கள் கொண்ட சுருக்கமாய்ப் பாடினேன். ஆனால், இந்நூலில் சொல்லப்பட்ட விஷயங்கள் எவையென்றால்: கருவைக்கொண்டு செய்யுந் தொழில்களும் இரசவாதத்தின் கைபாகங்களும், மருந்தின் அளவையும் ககனமார்க்கத்தின் விசேஷமுமேயாம். ஆயின் அவைகளும், யாதொரு இரத்தினத்தைக் கண்டவர்களை அந்த இரத்தினமானது தன்வயப்படுத்திக் கொள்வதுபோல, இந்நூலு தன்னைப் படித்தவர்களைத் தன்வயப்படுத்திக் கொள்ளும் (எ-று.) (1)

கேளப்பா குருசெயநீர் வகையைக்கேளு
கேசரம்போல் மறைத்துவைத்தார் சித்தரெல்லாம்
வாளப்பா மறைப்பென்ன வென்றுகேட்டால்
மகத்தான சவுக்கார மென்றேசொன்னார்
வேளப்பா வெளித்தசிவன் பாதந்தன்னை
வெளியாகக் கருமறைப்பைச் சொல்லவேண்டாம்
நாளப்பா நொடிக்குள்ளே செய்யும் வித்தை
நன்றாக ஊசிநீர் படிதான்வாங்கே.

(பொ-ரை) எந்த மருந்துகளையும் முடித்து நீற்றுகுரு ஜெயநீரைச் சொல்லுகின்றேன். அதை மாணாக்கனென்னும் உறுதித் திறம்பூண்டவனே! நீகேட்பாயாக அதின் விவரம் எப்படியென்றால் ஆனால், இந்த ஜெயநீரை முக்காலத்துச் சித்தர்களெல்லாம் வேறு மறைபெயர்கொடுத்து வெளிவிடாமல் மறைத்து வைத்தார்கள். அதாவது எந்தப் பெயரால் மறைத்தார்கள் என்றாலோ! சவர்க்காரம் என்கிற பெயரால் மறைத்துவைத்தார்கள். ஆனால் மாணாக்கனாகிய நீயும் சிவனுடைய திருவடிகளில் சத்தியப்படி அந்த மறைப்பை வெளிவிடவேண்டாம் நான் இதை உனக்குக் கெட்டியாகச் சொன்னேன். இனி செய்பாகம் வருமாறு: ஊசிநீர் என்னும் மறைப்புப் பெயர் பெற்றிருக்கின்ற பனிச்சலத்தை ஒருபடி கொண்டுவந்து வைத்துக் கொள்ளவேண்டும் (எ-று.) (2)

வாங்கப்பா இவருக்குக் கல்லுச்சுண்ணாம்
வாகான வெடியுப்பு படிகாரஞ்சேரு
காங்கப்பா ரோகநீர் படிதானொன்று
சவ்வீரம் நவாச்சாரஞ் சீனந்தானும்
பாங்கப்பா முக்கலத்தே யொன்றாய்ச்சேர்த்து
பதறாமல் கலக்கியல்லோ தெளியவைத்து

வாங்கப்பா தெளிவினுள்ளே மூலப்புளிதானிட்டு
வரிசையுடன் தெளிவிருத்துக் காய்ச்சு காய்ச்சே.

(போ-ரை.) மேலேசொன்ன ஒருபடி பனிஜலத்தில் சுண்ணக்கல் கால்படியும், ஐஞ்சாங்காய்ச்சல் வெடியுப்பு கால்படியும்போட்டு மூன்றுநாள் ஊறவைத்து நான்காவதுநாள் காலையில், அயத்தைச் சம்பந்தப்படுத்திய திராவகத்தை ஒருபடி அளவுக்கு ஷ பனிஜலத்திற்கலந்து மறுபடியும் மூன்றுநாள் ஊறவைத்து ஆக ஏழுநாள் சென்றபின்பு எட்டாவது நாள் காலையில் வீரம்மூன்றே முக்கால் வராகனெடையும், கவாச்சாரம், மூன்றேமுக்கால் வராகனெடையும், படிகாரம் மூன்றே முக்கால் வராகனெடையும் ஷ ஜலத்தில்போட்டு மறுபடியும் மூன்றுநாள் ஊறவைத்து பன்னிரண்டாவது நாள்காலையில் எடுத்து நன்றாய்க்கலக்கி சற்றுதெளியவைத்து பிறகு தெளிந்த ஜலத்தை வேறொரு பாத்திரத்தில் இறுத்துக்கொண்டு அப்படி இறுக்கப்பட்ட ஜலத்தில் நல்லகாலத்தில் முறைப்படி யெடுத்த பூநீர் அரைப்படி போட்டு மூன்றுநாள் ஊறவைத்து பிறகு தெளிவிறுத்துக் கொள்ளவேண்டும்.

(3)

காய்ச்சியதோர் குழம்பினுள்ளே கிறுநீர்விட்டு
கைமுறையாய் மூன்றுதிங்கள் காய்ச்சிக்கொண்டு
காய்ச்சியதோர் துறைகளெல்லா மி[illegible]சிட்டால்
படுமுன்னே சரக்கெல்லா [illegible]ம்
காய்ச்சியதோர் குருசெயநீர் மேருவில்விட்டுக்
களங்கமறப் பூசைசெய்து சாப[illegible]ப்
பாய்ச்சியதோர் குருசெயநீ ராட்டங்[illegible]
பரப்பிலே விடுகாதே சொல்வேன்கே[illegible]

(போ-ரை.) மேலேதெளிவிறுத்து வைத்துக்கொண்ட ஜலத்தை மண்பாத்திரத்தில்விட்டு அடுப்பேற்றி கமலாக்

17/292

இனியாக எட்டுச் சாமம்வரைக்கும் எரித்து அந்த உப்பு நீர் குழம்பாகிற தருணத்தில் ஒருபடி வாதமுறைக்கு தகுந்த பருவத்தையுடைய பிள்ளைகளின் சிறுநீர் ஒருபடி விட்டு பிறகு ஒருநாளைக்கு ஒருநாழிகை அளவாக மூன்று மாதம் வரைக்கும் லகுவாக எரித்து வைத்துக் கொள்ள வேண்டும். இப்படி எரித்த நீருக்குசுத்தகங்கையென்றும், சவர்க்காரமென்றும், குருஜெயநீர் என்றும், புளித்த ஜலமென்றும், பிண்டநீரென்றும், பழச்சாறென்றும், பரிபாஷைப்பெயர்களால் அநேக பெரியோர்களும் ரசவாதத் தொழிலில் தேர்ந்தவர்களும், நூல்முறையாகவும், வசன றையாகவும், சொல்லியிருக்கின்றனர் ஆனாலும் மேலே சொன்ன சுத்தகங்கையானது, எந்தச் சரக்குகளில் படுகின்றதோ அந்தச் சரக்குகள் அந்தக்ஷணமே மாளும் (அதாவது நீறிப்போகும்) அப்படிப்பட்ட சுத்தகங்கையை ஒரு பாத்திரத்தில் விட்டு பதனம்பண்ணி வாதமுறைப்படி பூசித்து சாபம் நிவர்த்திசெய்து வைத்துக்கொள்ள வேண்டும். இதை வெளிப்படுத்தல் கூடாது. ஆனால் இதையாடும் விவரத்தை இனிமேல் சொல்லுகின்றேன். ()

கரியுப்புவேதை.

கேளடா மணிமணியா யுப்பைவாங்கிக்
கெடியான குருச்செயநீர் விட்டு ஆட்டி
நாளடா காய்ந்ததென்று லோட்டில்வைத்து
நன்றாகக் குக்குடந்தான் போடுபோடு
தேளடா சொட்டுதல்போ லுப்புச்சுண்ணந்
ஜெயமாச்சு சரக்கையெல்லாங் கொல்லுமப்பா
மாளடா ஜெயநீர் தன்னை வைத்தாயானால்
மகத்தான வித்தைபதி னெட்டுமே.

(போ-ரை) மாணாக்கனென்னும் உறுதித் திறம்பூண்ட ரசவாதியே! இனி, கரியுப்புச்சுண்ணத்தால் செய்து முடிக்கின்ற வேதையைச் சொல்லுகிறேன். நீகேட்பாயாக! அது எப்படியென்றால் கட்டிக்கட்டியான கரியுப்பை வேண்டிய அளவுக்கு வாங்கி அதைத் மேலே மூடித்து வைத்திருக்கின்ற சுத்தகெங்கை குருஜெயநீர் விட்டு நான்குஜாமம் அரைத்து பில்லைதட்டி ஒரு நாளெல்லாம் உலரும்படி செய்து மறுநாள் நாலுக்கு நாலங்குலமுள்ள அகலில்மேல் பில்லையைவைத்து மேலே அகல் மூடி நாளுக்கொரு சிலையாக எழு நாளைக்கு எழுசீலைமண்செய்து நன்றாய் உலர்த்தி பத்துவராட்டியில் அக்கினித்திட்டம் தவருதபடி புடம் போட்டு ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் காலையில் அடி புடத்தைப் பிரித்து சீலையை அவிழ்த்துப்பார்த்தால் உள்ளிருக்கும் பில்லையானது சுண்ணமா யிருக்கும். இந்தச் சுண்ணமானது சரக்குகளைக் கொல்லும் திறமையில் மிகவும் சிறந்தது. ஆனாலும் முன்ஜெயநீருடைய சகாயமில்லாவிட்டால் ஒருசரக்கையும் கொல்லுந்திறமை இதற்கு இராது. எப்படிப்பட்ட வித்தையையும் இதிலேயே ஆடலாம். (எ-று) (5)

அளவு.

ஒருபலம் உப்புவுக்கு ஆறுபலம் ஜெயநீர் பில்லை இரண்டங்குலத்திற் கிரண்டங்குலம் வட்டமும் ஒருநூல் கனமுமுள்ளது. இங்கேகரியுப்பு என்றது சோற்றுப்பு அல்ல. கறுப்பு உப்பு ஆகும் (எ-று) (5)

பாரப்பா கரியுப்புச் சுண்ணம்நானு
பரிவான வீரமொன்று லிங்கமொன்று
சேரப்பா கந்தியொன்று சூதமேழு
திறமான குருஜெயநீர் விட்டு ஆட்டி

வாரப்பா வெயில்முகத்திற் காய்ந்தபின்பு
    வறுத்திடுவாய் மூன்றுநாழிகை தான்மட்டும்
கூறப்பா வென்றாலே சொல்லப்போமோ
    கோடிவித்தை நாழிகைக்குள் கூடுந்தானே

(பொ-ரை) மேலே முடித்துத்தீர்த்து வைத்திருக்கின்ற சரியுப்புச்சுண்ணம் நான்குவராகனெடையும், வீரம் ஒருவராகனெடையும், லிங்கம் ஒருவராகனெடையும், நெல்லிக்காய் கந்தகம் ஒரு வராகனெடையும், இரசம் ஏழுவராகனெடையும் நிறுத்து எல்லாவற்றையும் ஒன்றாய்ச்சேர்த்து மேலே முடித்து வைத்திருக்கின்ற சத்தகங்கை குருஜெயநீரைவிட்டு நான்குஜாம மரைத்து அப்படியே வெயிலில் உலர்த்தி தூளாக்கி காய்ந்தபிறகு அந்தத் தூளை ஒரு மண் பாத்திரத்திலிட்டு அடுப்பேற்றி மூன்றுநாழிகை வரைக்கும் வறுத்து வேறு பாத்திரத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். ஆனால் இது செய்கின்ற அரியவித்தையை என்னால் சொல்லமுடியாது. ஆயினும் அப்படிப்பட்ட வித்தைகளை ஒருநாழிகைக்குள் செய்து முடிக்கும் என்பது நிச்சயம் (எ-று) (6)

கந்தகக் களங்குவேதை.

தானென்ற கந்தகத்தின் களங்குகேளு
    தாய்சொன்னேன் கந்தகத்தை வாங்கிக்கொண்டு
வானென்ற அயக்கரண்டி தனிலுருக்கி
    மைந்தனே மிளகு தக்காளிச்சாற்றில்
மானென்ற சூட்சந்தான் சாய்த்தாயானால்
    மகத்தான களங்கமப்பா கோடிவித்தை
கோனென்ற களங்கொன்று ரெட்டிப்புருகக்
    கூட்டுவது சீரமொன்று சாரமொன்றே.

(பொ-ரை.) இனி கந்தகத்தால் செய்யப்படுங் களங்கி விருத்து செய்கின்ற வேலையைச் சொல்லுகின்றேன் நீ கேட்பாயாக! அந்த வேலைதனை எனக்குப் பார்வதி தேவியானவள் உபதேசித்தாள் அது எப்படியென்றால்வேண்டுமான அளவுநெல்லிக்காய் கந்தகத்தைவாங்கி, இரும்புக் கரண்டியில்போட்டு நன்று யுருக்கி, பிறகு தக்காளிச் செடி சமூலம் கொண்டுவந்து அதை யிடித்துப்பிழிந்து அந்தச்சாற்றில் மேலேயுருக்கின கந்தகத்தைச் சாய்த்தால் அந்தக் கந்தகமானது களங்காகும் அந்தக்களங்கால் அநேக வித்தை செய்யக்கூடும். அப்படி முடித்தகளங்கு ஒரு எடையும், இரசம் இரண்டு எடையும், வீரம் ஒரு எடையும், நவாச்சாரம் ஒரு எடையும் சேர்க்கவேண்டும்.

செம்புசுத்திவேதை.

ஒன்றாகக் குருஜெயநீர் விட்டு ஆட்டி
யுலர்த்தபின்பு வறுத்திடு நாழிகைதானாலு
நன்றாகக் கந்தகந்தானோடு மட்டும்
நாவுண்டோ சொல்வதற்கு என்னாற்கூடா
குன்றாத செம்புசுத்தி தன்னைக்கேளு
கூறறிந்து அவுரியிலை கொடித்தக்காளி
மன்றாகப் பொரிகாரம் வீரத்தோடு
மடையனுந்தான் சேர்த்தரைத்துப் பூசுபூசே.

(பொ-ரை.) இவைகளையெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து முன்னே முடித்துவைத்திருக்கின்ற சத்தகங்கை குரு ஜெயநீரைக்கொண்டு நான்கு நாழிகை வரைக்கும் அரைத்துப்பில்லை தட்டிவெயிலில் வைத்து லகுபுடம் கவுறுதபடி போட்டு வேறேவைத்துக்கொள்ளவும். ஆனால் இதின் பெருமையை யென்றாற் சொல்லமுடியாது இனிசெம்பு

சுத்திசெய்யும் விதம் வருமாறு! நீலியிலையையும் கொடித் தக்காளி யிலையையும், படிகாரம், வீரம், துத்தம், இவை களைச் சேர்த்து அரைத்து அந்தச் செம்புக்குப்பூச வேண்டும் (எ-று) (8)

பூசிமண் சட்டிவைத்துக் குக்குடந்தான்போடு
பொன்னுரும் செம்பூறல் பறந்துபோச்சு
ஆகியே காரமோடு வீரந்துத்தம்
அழகான நாயுருவி நெரிஞ்சில்கூட்டிப்
பூசியே குக்குடத்தில் செம்பி னூறற்போச்சு
புனிதமாம் பரியென்ற வஸ்துவாச்சு
சாஸ்வதமாஞ் ஜெயநீரை பதனம்பண்ணு
தளரவே வேதைக்கும் புகழுண்டாமே.

(போ--ரை.) அப்படிபூசிய செம்பை ஒரு மண்சட்டியில் வைத்து மேல்சட்டிமூடிச் சீலமண்மூன்றுசெய்து பத்து வராட்டியில் புடம்போடவும். போட்டபின்பு ஒருநாள் ஆறவிட்டு எடுத்துப் பார்த்தால் செம்புசுத்தியான விதத் தைப் பார்த்தால் ஒருவகையான பொன்போன்ற நிறத் தை யடைந்திருக்கும். இனி வேறுவித செம்பு சுத்தி சொல்லுகின்றேன் கேட்பாயாக! அது என்னவென்றால் வெங்காரம், வீரம், துத்தம், நாயுருவி, சிறுநெருஞ்சில், ஆகிய இவைகளைக் கூட்டி முன்சுத்தகங்கை குருஜெயநீரா லரைத்துச் செம்பில்பூசி அகலில்வைத்து மேலும் அகல் மூடிச் சீலமண்செய்து பத்துவராட்டியில் புடம்போட்டு ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் எடுத்துப்பார்த்தால் செம் பினது ஊறல்போய்ச் சுத்தியாகும் அப்பொழுது பொன் என்கிற பேரையுடையதாகும். ஆகையால் இந்தச்செய நீரின் தன்மையையுணர்ந்து அதைப் பதனம்செய்து வைத்துக்கொள்ள வேண்டும். (எ-று) (9)

லிங்கவேதை.

ஆமப்பா லிங்கவித்தை சொல்லக்கேளு
ஆச்சரிய மதாவாகும் காரீயஞ்சூதம்
தாமப்பா வெங்காரமொன்றாய்க்கூட்டி
சாதகமாய்க் குருஜெயநீர் விட்டுஆட்டி
ஓமப்பாகவசித்து மண்ணுஞ்செய்து
உப்பில்வைத்துச் சாமமொன்று எரித்தாயானால்
வாமப்பா லிங்கமது கட்டிப்போச்சு
வாங்கப்பா நாலுலிங்கஞ் சூதங்கேளே.

(போ-ரை.) இனி இலிங்கத்தால் செய்யப்படும் வேதையைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக! அது எப்படியென்றால் காரீயம், இரசம், வெங்காரம் இவைகளைச்சம எடையாக வெடுத்து *முன்னே முடித்து வைத்திருக்கின்ற சுத்தகங்கை குருஜெயநீரால் நான்கு சாமமரைத்துப் பில்லைதட்டி வெயிலில் ஒரு நாளெல்லாம் காயவைத்து மறுநாள் மேற்படி பில்லையை ஒரு அகலில்வைத்து, மேலும் ஒரு அகல்மூடிச் சீலைமண்செய்து வெயிலிலுலர்த்தி, ஒரு வாயகன்ற சட்டிக்குள் நிறைய உப்பைப்போட்டு நடுவே அந்த அகலைவைத்து மேல்மூடாமல் ஒருசாமம் வரைக்கும் சிறுக எரித்தால் அந்த லிங்கமானது கட்டிப்போகும். அப்படி கட்டிய இலிங்கம் நான்கு எடையும், இரசம் இரண்டு எடையும் (எ-று) (10)

கேளப்பா பாதிரசங் கந்தியொன்று
கெடியான வீரமொன்று காரமொன்று
கேளப்பா செயநீர்தான் விட்டுஆட்டி
வெயில்முகத்திற் காய்ந்தபின் லிங்கத்தாட்டு
நீளப்பா சத்தசாகரம் போல்வித்தை
நிலைக்குமுன்னே செய்விக்கும் வேதைப்போக்கு

நாளப்பா சொல்லாதே கருக்குவழி சூட்சம்
என்றான மருந்தெல்லாம் வாய்ப்புத்தாமே.

(பொ-ரை) இரசம் அரை எடையும் கந்தகம் ஒரு எடையும், எடுத்து ஒன்றாய்ச்சேர்த்து முன்முடித்து வைத்திருக்கின்ற சுத்தகங்கை ஒரு ஜெயநீராலரைத்துப் பில்லைதட்டி வெயிலில் காயவைத்து ஒருநாள் காய்ந்த பின்பு அதை லகுபுடம்போட்டுவாங்கி (செம்பு நான்கு, வெள்ளி இரண்டும்) கூட்டி உருக்கி அது உருகிநிற்குஞ் சமயத்தில் இந்த மருந்தில் ஒன்றுகொடுக்க எட்டரைமாற்றுள் கொடுக்கும்படியான பொன்னாகும் இது மகா சூட்சமான வித்தையென்று அறிந்து கொள்ளக்கடவாய்.

துத்தநாகவேதை.

தானென நாகவித்தை சொல்லக்கேளு
தனிநாக மொன்றுடனே சூதம்ரெட்டி
மானென அரிதாரந் துருசுவெள்ளை
மைந்தனே வெங்காரம் வீரங்கூட்டிக்
கோனென செயநீரை விட்டுஆட்டி
கொடியாளி முகத்தில்வைத்து உருக்கும்போது
பானென நாகவித்தை பாடுமாறும்
பண்பாகப் புலத்தியனே கண்டுகொள்ளே.

(பொ-ரை) இனிச் சிறுகண் துத்தநாகத்தால் செய்யப் படும் வேதை வருமாறு எப்படியென்றால்! சிறுகண் துத்தநாகம் ஒரு எடையும், இரசம் இரண்டு எடையும், அரிதாரம் ஒரு எடையும், மயில்துத்தம் ஒரு எடையும், வெள்ளைபஷாணம் ஒரு எடையும், வெங்காரம் ஒரு எடையும், வீரம் ஒரு எடையும், சேர்த்து நான்கு நாழிகை வரைக்கும் முன்னே முடித்து வைத்திருக்கின்ற ஜெய நீராலரைத்து ஒரு மூசைக்குள் போட்டுக் கொல்லனது

உலைக் களத்தில் வைத்து நன்றாயூதினால் இது நாகக்களங் காகும். இதை யெடுத்து வேதை செய்யவேண்டிய முறைப் படி செய்து கொள்ளலாம் ஆகையால் நல்ல அறிவுபூண் டுள்ளவனான புலத்தியனே நீதெரிந்து கொள்ளக் கடவாய் (எ-று) (12)

கருவங்கவேதை.

கண்டுசொல்ல ஆர்வல்லர் சித்தரன்றிக்
காசினியி லுள்ளவர்க ளார்தான்காண்பார்
விண்டுசொல்லக் காரீயத் தாட்டைக்கேளு
வெடியுப்பு அரிதாரம் வீரஞ்சூதம்
பண்டுசொல்லப் பொரிகாரஞ் சேரக்கூட்டி
பாங்கான குருஜெயநீர் விட்டுஆட்டித்
துண்டுசொல்லா ரவியில்வைத்து வறுத்துப்போடு
துறைகோடி சூட்சமெல்லாம் வெளிவிட்டேனே.

(பொ-ரை) மேலே சொன்ன நாகவித்தையைச் சொல் லுதற்குஞ், செய்வதற்குஞ் சித்தர்களுக்குத் தெரியுமே யல்லாமல் உலகத்தாருக்குத் தெரியமாட்டாது. இனிக் கருவங்கத்தாற் செய்யப்படும் வேதையைச் சொல்லுகின் றேன் கேட்பாயாக! எப்படி யென்றால்: சுத்திசெய்த காரீ யம் இரண்டெடை வாங்கி நன்றாய்ச் சிறுகக் கத்தரித்து, அத்துடன் வெடியுப்பு ஒரு எடையும், அரிதாரம ஒரு எடையும், வீரம் ஒரு எடையும், இரசம் ஒரு எடையும், படிகாரம் ஒருஎடையும், கூடச்சேர்த்துமுன் ஜெயநீரால் நான்கு நாழிகை யரைத்து வெயிலில் காயவைத்துத் தாள்படுத்தி ஒருசட்டியிலிட்டு வறுத்துப் புட்டியில் பத னம்பண்ணி வைத்துக்கொண்டு வெள்ளி நான்கு செம்பு இரண்டு சேர்த்து உருக்கிநன்றாய் கண்விட்டாடுஞ் சமயத்

தில் இந்த மருந்தில் ஒரு எடை கொடுத்தால் ஆறரை மாற்றுப் பொன்னாகும். (எ-று) (13)

விட்டகுறை புண்டானல் நூல்வந்தெய்தும்
வெளியாகக் கருவெல்லாம் தோணும்பாரு
தொட்டகுறை யிதுதானே விதிமதியுங்காணும்
சூஸ்திரந்தா னறுபதிநூல் காட்டார்க்கில்லை
மூட்டகுறை யேதென்றால் சூட்சமொன்று
முனிவர்சித்தர் இந்நூலை யொளித்தாரையா
வட்டகுறை பூரணத்தா னுதித்தாற்போல
வளருமடா அறுநூறு முந்நூறுந்தானே.

பொ-ரை.) இந்தநூலானது விட்டகுறை தொட்ட குறையுள்ளவர்க்கே கிடைக்கும். இந்தநூல் கிடைத்த போது இரசவாதத்தின் மூட்சமெல்லாம் வெளிப்படையாய்த் தெரியவரும். ஆனல் இது உலகத்தார்க்குச் சித்தியாகாது இந்நூலை முனிவர்களும் சித்தர்களும் வெளிவிடாமல் மறைத்து வைத்தார்கள் நானேவெளிப் படையாய்ச் சொல்லிவிட்டேன். ஆகையால் இதில் சொன்ன வண்ணம் செய்து அநுபவித்த இரசவாதிகளுக்கு காயசித்தியுண்டாகும். (எ-று) (14)

தானென்ற திருநடனம் செய்தவீசன்
தான்சொன்ன முறைசரக்கின் மைந்தாகேளு
தேனென்ற மொழியுடையாள் பாதத்தாளை
தேசத்தோர் தங்களுக்குக் கொடுக்கவேண்டாம்
மானென்ற சிவகாமி யென்தாய்பூசை
அர்ச்சித்து இந்நூலை வணங்கிப்பாரு
கோனென்ற வருள்வெளியாஞ் ஞானவாசக்குஞ்
குடியிருந்தாள் மனோன்மணித்தாய் கூறினளே.

(பொ-ரை) உலகத்தோர் உஜ்ஜீவிக்கும் பொருட்டு ஆநந்தத் தாண்டவம் செய்தருளிய சிவபெருமா னனவன் தனது திருவாய் மலர்ந்து பிரசாதித்தருளிய சரக்குவேதைகளே இந்நூலில் சொல்லப்பட்டிருக்கின்றன. இதை சிவசத்தியின் திருவடிகளில் சத்தியமாக உலகத்தாருக்குக் கொடுக்க வேண்டாம் ஆனால் மாணாக்கனாகிய நீயும் மேற்படி சத்திக்கு அர்ச்சனை, வந்தனை, வழிபாடுகள் செய்து நமஸ்கரித்துப் பார்க்கவேண்டும். ஏனென்றால் எல்லாருக்குந் தலைவியாகிய மனோன்மணித் தாயானவள் என்னுடைய வாக்கின்கண் குடியிருந்ததினால் சொல்லப்பட்டதாகையால் (எ-று.) (15)

துருசி வேதை

கூறினதோர் துருசினுட ஆட்டைக்கேளு
குன்றுபோற் றுருசுவொரு குன்றிவாங்கி
மாறியதோர் சிமிள் புடைக்கா லரைத்துப்பூசி
மைந்தனே சிறுபுடத்திற் றுவளாநீறும்
ஆறியதோர் வெண்க ண்டர் கொப்புமுண்டோ
ஆச்சரியங் கோடான கோடிவித்தை
தேரியதோர் வெண்கண்டர் களஞ்சிநாலு
சேர்த்திடுவாய் ருதிம்ரெண்டு விரமொன்றே.

(பொ-ரை.) இனி மயில்துத்தத்தால் செய்யப்படும் வேதை வருமாறு! மயில்துத்தம் பெரியகட்டியாக ஒன்று வாங்கிச் சிமிள் என்றும் ஒருவகை மிருகத்தின் காற்குளம்பச் சீவியதூளை அரைத்துப்பூசி லகுபுடம் போட்டால் அந்த மயில்துத்தமானது வெண்மை நிறமாய்ப் பூத்துப் போகும், இங்ஙனம் ஆகின பின் நீற்றவெண் கண்டராகிய துருசுபற்பத்தைக் கொண்டு செய்கின்ற வேதைகள் அநேகமுண்டு. அவற்றில் ஒன்றுமாறு! மேற்படி துருசு

பற்பம் 4. கழஞ்சும் இரசம் 2-வராகனெடையும் வீரம் 1-வராகனெடையும் சேர்க்கவேண்டும். (16)

ஒன்றாகுங் கந்தியுடன் பாதிகாரம்
    ஒக்கவே குருஜெயநீர் தன்னாலாட்டி
நன்றாகக் காய்ந்தபின்பு வறுத்துப்போடு
    நான்சொல்லக்கூடாது வேதைப்போக்கு
மன்றாகும் வெண்கண்ட ரெடைக்குரெட்டி
    பாய்ச்சுவா யிரதமது வீரமொன்று
மன்றாகுங் காரீய பற்பமொன்று
    வார்த்தரைப்பாய் செயநீரால் வைத்துக்கொள்ளே.

(போ-ரை) நெல்லிக்காய்க்கந்தகம் ஒருவராகனெடையும் வெங்காரம் அரை வராகனெடையுஞ்சேர்த்து முன் சொன்ன சத்தகங்கைக் குருஜெயநீரால் நாலுஜாமம் அரைத்து நன்றாய்க் காய்ந்தபின்பு அடுப்பின்மேல் சட்டி வைத்து நன்றாய் வறுத்துப்போட வேண்டும் பிறகு அதைக்கொண்டு வேதை மார்க்கப்படியே செய்துக்கொள்ளவும் பிறகு முன்சொன்ன தாருசு பற்பம் ஒரு எடைக்கு இரண்டெடை இரசமும் வீரம் ஒருஎடையும் காரீயபற்பம் ஒருஎடையும் எடுத்து முன்செயநீரை விட்டு நாலுநாழிகை பரியந்தம் நன்றாயரைக்க வேண்டும் (எ-று) (17)

கொள்ளவே ஜெயநீரால் மாட்டுமாட்டு
    கோடான கோடிதொரந்தம் விள்ளொணாது
மெள்ளவே நாகத்தின் கட்டுக்கேளு
    வெண்கண்டர் மால்தேவி காரச்சாரம்
அள்ளவே குருஜெயநீர் விட்டுக்கொண்டு
    ஆட்டியே நாகத்திற் பூசிவைத்துக்
குள்ளவே பக்கெருவிற் புடந்தானஞ்சில்
    ஓடாமற் புகையடங்கி மாண்டுபோமே.

(போ-ரை.) மேற்படி அரைத்த மருந்தை வழித்து வெள்ளி நாளுக்கு மருந்து ஒருஎடை கொடுத்தால் ஏழு மாற்றுப் பொன்னாகும் அதைவிட்டு இனி சிறுகண் நாத்த நாகக் கட்டியைக் கேட்பாயாக! எப்படியென்றால் துருசு சுண்ணம் அரிதாரம் வெங்காரம் நவாச்சாரம் ஆகிய இவைகளை ஒரேசமபாகமாக எடுத்து முன்ஜெயநீரால் அரைத்து நாகத்திற்குப் பூசிப் பத்தெருவிற் புடம்போட்டால் அந்த நாகம் மடிந்து போகும். இப்படியே ஐந்துபுடம் போட்டு எடுத்துக் கொள்ளவேண்டும். இதினால் நாகத்தின் புகை படங்கிப்போகும். இதைக் குருமருந்தாகக் கொண்டு வேதைகளை முடித்துக்கொள்ளலாம் (எ-று)

அரிதாரவேதை.

போமென்ற அரிதாரச் சிவப்புக்கேளு
புகழ்ந்ததொரு விஷ்ணுவின் சூலிமாட்டித்
தானென்ற மால்தேவிக் கங்கிபூட்டிச்
சார்வாகச் சிறுகாடைப் புடந்தான்போடு
ஆமென்ற தாரமது சிவப்புமெத்த
ஆச்சரியம் வேதைமுக மணந்தங்கோடி
ஓமென்ற கண்டருட சிவப்புச்சொல்வேன்
உவருப்பு வெண்காரங் கூடக்கூட்டே.

(போ-ரை.) இனி அரிதாரச் செந்தூரத்தால் செய்யப் படும் வேதை வருமாறு! கருந்துளசியைப் போதுமான அளவு அரைத்து அரிதாரத்திற்குக் கவசஞ்செய்து சிறிய காடைப் புடம்போட்டால் அந்த அரிதாரஞ் செவந்து போகும். அப்படியான செந்தூரத்தால் அநேக வேதைகள் செய்து கொள்ளலாம். அது நிற்க, இனி மயில் துத்

தச் செந்தூரத்தால் செய்யப்படும் வேதை வருமாறு! அதாவது முன்முடித்து வைத்திருக்கும் மயில்துத்த பற்பமும் சவர்க்காரமும் வெங்காரமுமாகச் சேர்க்கவேண்டும்.

கூட்டியெல்லாஞ் செயநீரா லரைத்துக்கொண்டு
குறியான கைபாகத் துடன்வறுக்க
மாட்டியெல்லா மெடுத்துப்பார் சிவப்புமெத்த
மைந்தனே கோடிவித்தை யாடும்போ
பேட்டியல்ல குருவென்ற ஜெயநீராலே
பிரபல்லிய குருக்குவழி வித்தைமார்க்கம்
பூட்டியெல்லாம் வெளியாகச் சொன்னேன்பாரு
புகழ்பெரிய வெடியுப்பின் சுண்ணங்கேளே.

(பொ-ரை.) முன் சொன்னவைகளை யெல்லாஞ் சேர்த்து முன் முடித்துவைத்துள்ள ஜெயநீராலரைத்துச்சட்டி விட்டுக் கைபாகத்தவருதபடி வறுத்துச்சற்று ஆறவிட்டு எடுத்துப் பார்த்தால் முருக்கம்பூப்போல் செம்மைநிறத்தோடு கூடிய செந்தூரமாகும். அப்படி செய்துமுடிந்த செந்தூரத்தால் அநேககோடி இரசவாதங்கள் செய்து கொள்ளக்கூடும். இவைகளுக்கெல்லாம் தாயைப் போலிருப்பது முன்முடித்து வைத்திருக்கின்ற ஜெயநீரேயாகும். அந்தச் செயநீரைவிட்டால் ஒன்றும் ஆகாது ஆகையால் இரசவாதிகளே நீங்களெல்லோரும் அந்தச் செயநீரை அவமதித்து விட்டுவிட வேண்டாம் இதுநிற்க இனிவெடியுப்புச் சுண்ணத்தால் செய்யப்படும் வேதையைச் சொல்லுகின்றேன் நீகேட்பாயாக (எ-று) (20)

தேனப்பா வெடியுப்பு சினம் நேராய்
கெடியான குருஜெயநீர் விட்டூட்டி
நாளப்பா காயவிட்டு வறுத்தாயானல்
நன்றான வெடியுப்பு சுண்ணமாச்சு

வாளப்பா சாரமிட்டுச் செயநீர்வைத்தால்
மக்களே கோட்டான கோடிவித்தை
தேளப்பா கொடுக்கு பாஷாணமார்க்கம் (ஞா
திரஞ்சொல்வேன் திரஞ்சொல்வே னன்றாய்த்தா

(போ-ரை.) வெடியுப்பு ஒரு பலமும், படிகாரம் ஒரு பலமும், நிறுத்து முன்ஜெயநீரால் நாலுநாழிகை பரியந்தம் நன்றாயரைத்து வெயிலில்வைத்து நன்றாய்க் காய்ந்த பின்பு சட்டியிலிட்டுச் செய்பாகந்தவறாதபடி வறுப்பாயானால் அந்த வெடியுப்புச் சுண்ணமாகும். அந்தச் சுண்ணம் ஒரு எடையுமாகச்சேர்த்து இந்தச் செயநீராலரைத்துக் குழம்பாக்கி வைத்துக்கொண்டு வெள்ளி-2, தாமிரம் ஒன்று உருக்கிச்சுருக்குக் கொடுத்தால் நல்லபொன்னாகும். இனி இதை விட்டு இனிக் கொக்குப் பாஷாணத்தின் வேதையைச் சொல்லுகின்றேன். (எ-று) (21)

கொக்குப் பாஷாணவேதை.

தானென்ற அப்பிரேகம் வெடியுப்பு சினஞ்
சாரமொடு வெண்காரம் மடையன் காந்தன்
வேனென்ற உவருப்பு ரோமநீரும்
வீரமுட னொன்றாக விரைந்துகூட்டி
வானென்ற ரவிமுகத்திற் காயவைத்து
வரிசையுடன் உப்பிலப்பா யெரித்துவாங்கே.

(போ-ரை.) கிருஷ்ண அப்பிரகம் ஒரு எடையும், வெடியுப்பு ஒரு எடையும் மயில்துத்தம் ஒரு எடையும் எழு ஊசி பிடிக்குங் காந்தம் ஒரு எடையும் சவட்டுப்பு ஒரு எடையும் பூநீறு ஒரு எடையும் வீரம் ஒரு எடையுஞ் சேர்த்து முன்ஜெயநீராலரைத்து வெயிலில் காயவைத்து

ஒரு சட்டியில் உப்பு கொட்டி அந்த உப்புவுக்கு நடுவே இந்தத் தூளைவைத்து மேல்சட்டி மூடிச் சீலை மண்செய்து எரிக்கவேண்டும் (எ-று) (22)

வாங்கவே தீபமொரு சாமமட்டும்
மறுநாள்தான் கமலவன்னி சாமமொன்று
தாங்கவே ஆறவைத்துப் பாருநீதான்
சாந்தம்போ லதுகட்டுந் தன்னைச் சொன்னேன்
ஏங்கவே வேண்டாங்காண் வாதியென்றால்
இந்தமுறை செய்தவனே யோகிஞானி
நீங்கவே வறுமையெல்லாந் தவருண்டேபோம்
யொளியான பாதையடா யிந்தநூலே.

(பொ-ரை.) மேலேசொன்ன சட்டியை அடுப்பிலேற்றி ஒரு சாமம் வரைக்கும் தீபாக்கினியாகவும் மறுநாள் ஒரு சாமம் கமலாக்கினியாகவும் எரித்து சாங்கசீதளமாக ஆறிறவரைக்கும் ஆறவிட்டு மறுநாள் பிரித்துப்பார்த்தால் மேலேவைத்த மருந்துகள் ஒன்றாய் கட்டியிருக்கும். அதை யெடுத்து வைத்துக்கொண்டு இரசவாதக்கிரமாலங் காரப்படி செய்து கொள்ளவேண்டியது. ஆனால் மேலே சொன்ன செய்பாகங் கைபாகங்கள் எரிப்புத்திட்டம் முதலியவற்றை உணர்ந்து செய்வோன், வாதியும், யோகியும், ஞானியுமேயாவான். இதனால் அவனை வருத்திக் கொண்டிருந்த தரித்திர முழுமையும் விலகிற் செல்வ முடையவனாவான் ஆனாலும் நான்சொன்ன இந்தவழி மிகவும் உயர்ந்ததாகும். (எ-று) (23)

இந்தநூல் சூத்திரந்தான் அறுபதப்பா
இயம்பினேன் கருக்குருவும் வெளியதாகும்
முந்திநா லறுநூறுஞ் செப்பினேன்பார்
முனைபெற்ற திருவெல்லாம் பனிபோலாக

விந்தநூல் செய்பாகங் கைபாகமெல்லாம்
 வெளியாச்சே யென்றுசித்தர் மெச்சிக்கொண்டு
அந்தநூல் போலல்ல வென்றுபேசி
 ஐயையோ யிந்நூலை யொளித்தார்காணே.

(பொ-ரை.) நான்சொல்லி வைத்திருக்கின்ற அறுபது பாடல்களைக் கொண்ட இந்தச் சூஸ்திரத்தில் இரசவாதத்தைக் கைகூட்டும்படியான குருஜெயநீரை மற்றவர்கள் போல் ஒளிக்காமல் வெளிப்படையாய்ச் சொல்லிவிட்டேன் இதற்கு முன்னே அறுநூறுபாடல்களைக்கொண்ட ஒருநூலுஞ் சொல்லியிருக்கிறேன் ஆனாலும் அந்த நூலைப் பார்க்கிலும் இந்தச் சூஸ்திரம் மிகவும் வெளிப்படையாகப் பேசப் பட்டிருக்கின்றதென்று சித்தர்களெல்லாம் ஒன்றாய்ச்சேர்த்து மெச்சி இந்தச் சூஸ்திரத்தை ஒளித்து விட்டார்கள். (எ-று) (24)

காணப்பா கோடிவித்தை செய்யும்நூலைக்
 கருவென்று லோகத்தோர் விட்டார்சொன்னேன்
பூணப்பா தினந்தோறும் பூசைசெய்து
 புகழ்ந்துவைத் தெடுத்தடக்கம் பண்ணிவைத்தார்
தோணப்பா யிந்நூலைச் சூத்திரந்தான்கிட்ட
 தொண்டுபண்ணி நடந்தாலும் கொடுக்கமாட்டார்
பேணப்பா நூல்தன்னைக் கொடுத்தாயானால்
 போய்நரகில் விழுவதுண்மை பெருமைபோச்சே.

(பொ-ரை.) இங்ஙனம் அநேகமான வித்தைகளைச் செய்வதற்குத்தக்க சாமர்த்தியத்தைக் கொடுக்கும் இந்த நூலை உலகத்தவர்களெல்லாம், (இதுசொல்வதெல்லாம் கருவாற் செய்யப்படும் வேலையென்றெண்ணி) இதைப்பதனம் பண்ணாமல் விட்டு விட்டார்கள். நல்ல பரிபாகத்தை வாய்ந்த மாணாக்கனாகிய நீயோ அப்படி செய்யாமல் சித்தர்கள்

எப்படி அடக்கம் பண்ணிப் பூசை செய்கின்றார்களோ அப்படியே செய்து வரவேண்டும் ஆனால் சித்தர்கள் இந் நூலை ஒருவருக்குங் கொடுக்கமாட்டார்கள் அப்படியே நீயும் ஒருவருக்கும் இந்தச் சூஸ்திரத்தைக் கொடுக்க வேண்டாம். ஒருக்கால் என் சொல்லைத் தவறிக்கொடு த்து விட்டாயானால் எழுநரகங்களிற் போய்விழுந்து வரு ந்துவாய் (எ-று) (25)

போச்சென்று எண்ணாதே யிந்நூல்தான்கிட்டிற்
புகழ்ந்தரச வாதியென்றும் ஞானியென்றும்
ஆச்சென்று சொல்வதல்லால் வேறொன்றல்ல
ஆச்சரிய மெத்தமெத்த அறிவுண்டாகும்
நீச்சென்ற தீட்சையுண்டா மவுனமுண்டாம்
நிலைந்ததொரு ஜெயநீரும் பலபேர்க்குண்டாம்
ஆச்சென்ற வித்தையும் ஆர்தான்காண்பார்
மகத்தான சூத்திரந்தான் வாய்த்தபேர்க்கே.

(போ-ரை.) இந்தச் சூஸ்திரமானது உனக்குக் கிடை க்குமானால் இதற்கு முன்னர் செய்து செய்து வீணாகப் போய்விட்டதே இந்த நூலின்படி செய்தால் மாத்திரம் ஆகுமோ, என்று சந்தேக எண்ணம் வைக்கவேண்டாம். இதின்பிறகு உன்னை இரசவாதி யென்றும் ஞானியென் றும், சொல்வதல்லாமல் இந்த மஹான்கையினாலேயே இரசவாதம் முடிந்ததென்பார் அதுவுமல்லாமல் இந்த நூலால் இரச வாதத்தைப்பற்றிய அறிவு மென்மேலும் விர்த்தியாகும். இதினால் தசதீட்சைகளும், மவுனஞான மும், ஜெயநீரும் செய்கின்ற அரியமார்க்கங்கள் தானே வந்து கிடைக்கும். ஆனால், இவைகளையெல்லாம் கிடைக் கப்பெறுவோர் மேற்படி சத்தகங்கை குருஜெய நீரைச்

சொல்லியிருக்கின்ற அறுபது பாடல்களைக் கொண்ட சூஸ்திரத்தைக் கிடைக்கப் பெற்றவர்களே (எ-று) (26)

பாஷாண வேதை.

வாய்த்ததொரு பாஷாணப் போக்கைக்கேளு
மகத்தான வித்தையப்பா சொல்லொண்ணாது
எத்ததொரு ஊறலறச் சுண்ணநீரில்
எரித்துவிடலர்காத மிசைந்தோர்ஜாமம்
மேய்த்ததொரு லிங்கமுடன் மடையன்சினம்
மிருதார் சிங்கியொடு அப்பிரகங்கூட்டி
காய்ந்ததொரு ஜெயநீரை விட்டுஆட்டி
கவுசித்த பாஷாணந்தனை யுரித்துப்போடே.

(போ-ரை) இனிமேல் ப்ாஷாணத்தாற் செய்யபடும் வேதை வருமாறு! வெள்ளைப் பாஷாணம் கட்டியாகப் பார்த்து வாங்கிக்கொண்டு வந்து கற்சுண்ணங் கொண்டு வந்து குடைவான சட்டியொன்றிற்போட்டுக் கிளிக்கட்டி மேற்படி பாஷாணத்தை அதிற் கட்டி அடுப்பேற்றித் தாளித்துத் தீமூட்டினால் அது ஒரு சாமத்திற்குள்ளாக அந்தப் பாஷாணத்திலிருக்கும் களங்கமானது அற்று போய் பரிசுத்தமாய்விடும். பிறகு அந்தப் பாஷாணத்தை ஒரு எடையாக எடுத்துக்கொண்டு அதற்குச் சரியாக இலிங்கம் மயில் துத்தம், படிகாரம், மிருதார்சிங்கி, அப்பிரகம், இவைகளைச்சேர்த்து மேற்படி ஜெயநீரைவிட்டு நன்றாயரைத்துச் சட்டியின் மத்தியில் வைக்கவேண்டும் ()

போடப்பா விருசிலை மண்ணுஞ்செய்து
புகழான அடுப்பில்வைத்துச் சட்டிமூடி

சாடப்பா விளிம்புக்குச் சீலைசெய்து
தனலூட்டுச் சாமம்ரெண்டு தீபம்போல
கோடப்பா திரமான பாஷாணங்கட்டும்
கூடுகிறகுருவேதை யென்றுயானால்
நாடப்பா சுற்றியெங்கு மலைந்தாலுந்தான்
நல்லவெள்ளை பாஷாணம் மிதற்கொவ்வாது.

(பொ-ரை.) அந்தச் சட்டிக்கு மேல்சட்டிமூடி 2சீலை மண்செய்து அடுப்பில் வைத்து-2, சாமம் வரைக்கும் தீபாக்கினியா யெரித்து ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் பிரித்துப்பார்த்தால் அந்த பாஷாணமானது கட்டிப்போயிருக்கும் உடனே இதை யெடுத்துப் பதனம் பண்ணி வைத்துக்கொண்டு வெள்ளி நாலுக்கு இந்தப் பாஷாணத்தில் ஒன்றுகொடுத்து உருக்கினால் 5-மாற்றுப் பொன்னாகும். இப்படி யாவதற்குக் குருமருந்து எதுவென்றால் ஜெயநீரேயாகும். ஆனால் இதைப்போன்ற வெள்ளைப் பாஷாணவேதை வேறெந்த நூற்களிலுஞ் சொல்லப்படவில்லை அப்படி சொல்லியிருந்தாலும் இந்தப் பாஷாணத்திற்கு அவையெல்லாம் இணையாகா (எ-று) (28)

(வேறு)

ஒவ்வாது யென்றுசொன்ன வகையேதென்றால்
உத்தமனே பாஷாண மொன்றுவாங்கி
கவ்வாது வெள்ளீய மிரண்டுசேரு
கனமான சூதமது நாலுகூட்டி
மவ்வாது வெண்கார மொன்றே யெல்லா
மாளவே யெருக்கம்பால் விட்டுஆட்டி
தவ்வாது வரைத்தெடுத்துப் பின்னுமாட்டி
பகலமாய் பில்லைதட்டி ரவிமுகத்தில் வையே.

(போ-ரை. நான் ஒப்பாக மாட்டாதென்று சொன்ன தற்கு நியாயத்தைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக! அது என்ன வென்றால் மேற்படி பாஷாணத்தில் ஒரு எடையும் வெள்ளீயம் இரண்டெடையும், இரசம் நான்கு எடையும், வெங்காரம் ஒரு எடையுஞ் சேர்த்து எருக்கம் பால்விட்டு நன்றாயரைத்து அகலமாகப் பில்லை தட்டி வெயிலில் காயவைக்கவேண்டும். (எ-று.) (29)

வையப்பா அப்பிரேக மிருதார்சிங்கி
வகையான சீனமுடன் மூன்றுங்கூட்டி
எய்யப்பா கவசமாய்ப் பொதிந்துசீலை
யியல்பாக செய்துலர்த்திச் சுண்ணமீதில்
கையப்பா சிலையுப்பு விட்டுமூட்டி
கைமுறையாய் உப்பிட்டுச் சுண்ணமிட்டுத்
தையப்பா கிர்தமிட்ட வாலைதனைப்போற்றிச்
சாபமென்ற தீரவன்னி தன்னை மூட்டே.

(போ-ரை.) அதின் பின்னர் சுத்திசெய்த கிருஷ்ண அப்பிரகம் மிருதார்சிங்கி, படிகாரம் ஆகிய மூன்றையும் கூட்டி முன்னே சொன்ன எருக்கம்பாலால் நன்றாயரைத்து முன்பில்லைக்குக் கவசஞ்செய்து நன்றாயுலர்த்திப் பிறகு கற்சுண்ணத்தையும் படிகாரத்தையும் முன் ஜெய நீராலரைத்து மேற்படி பில்லைக்கு மறுபடியுங் கவசஞ் செய்து ஒருகுடைவான சட்டிக்குள் உப்பைக்கொட்டி அந்த உப்பின் நடுவில் மேற்படி பில்லையைவைத்து மேலே கற்சுண்ண மிட்டுமறைத்து மேல்சட்டி மூடி அடுப்பேற்றி மனோன்மணி தாய்க்கு அர்ச்சனை, யாராதனை செய்து சாபநிவர்த்திசெய்து அக்கினியிட்டுச் சிறுதீயா யெரிக்க வேண்டும். (எ-று) (30)

மூட்டியிதை மண்திறந்து பார்க்கும்போது
உயிர்கூட்டிக் களங்கினது சத்திமெத்தச்
சூட்டியிந்தக் களங்கதனைச் சொல்லப்போமோ
சூக்ஷமெத்த கோடான கோடிவித்தை
மூட்டியிந்தப் படியெல்லாம்வெளியாய்ச்சொன்னேன்
புகழ்ந்தரச வாதியென்று லின்னூல்பாரு
காட்டியிந்த சாஸ்திரத்தைக் கொடுக்கவேண்டாம்
கங்கைதரித்தோ னணைக்கடக்கப் போமே.

(போ-ரை.) இப்படியே எட்டுச்சாமம் வரைக்கும் கமலாக்கினியாக எரித்து ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் பிரித்துப் பார்த்தால் மிகுதியும் காரமேறிக்களங்காகயிருக்கும் அப்படிப்பட்ட இந்தக் களங்கின் பெருமையைச்சொல்ல என்றால் ஆகாது. ஏனென்றால் அந்தக் களங்கானது செல்லவையாய் முடிந்துவிடும் பட்சத்தில் இது செய்யப் போகின்ற வேதையை வேறெந்த களங்கும் செய்யமாட்டாது. ஆகையால் அப்படிப்பட்ட களங்கை நான் ஒருவனே வெளியாய்ச் சொன்னேன். மற்றவர்களெல்லாம் ஒளித்துவைத் திருக்கின்றனர். ஆகையால் நல்ல மாணாக்கனென்னும் உறுதித்திறம்பூண்டவனே, நீ இரசவாதியாயிருந்தால் இந்தநூலைப்பார். ஆனால் இந்தச் சாஸ்திரத்தை கங்காதேவியைத் தமது சடாபாரத்தில் சுமந்துகொண்டிருக்கின்ற சிவபெருமானுடைய திருவடிகள்மேல் சத்தியமாக நீ யாவருக்கும் காட்டவும் வேண்டாம். கொடுக்கவும் வேண்டாம். (அப்படி என்சொல் தவறிக்காட்டுவாயானால் இரசவாதமானது உனக்குச் சித்தியாகாது இது உண்மை) (எ-று) (31)

போமென்றேன் தனித்திருந்து இந்நூல்தன்னைப்
புகழ்ச்சிமெச்சி வாசித்துக் கருக்களாய்ந்து

வாமென்றே னிறவிட்டு சய்ந்தாயானால்
வாய்புழுத்து நாவிருக்க மரணமாகிச்
சாவென்றேன் புத்தியுள்ளோன் விவேகமுள்ளோன்
சாகாம லிருக்கவென்றாற் கொடுக்கமாட்டார்
கூவென்றேன் சாபமது போட்டதாலே
கொடுமையாய் சூட்சத்தி லொளித்தார்பாரே.

(பொ-ரை.) நான் இந்தநூலில் சொல்லியிருக்கின்ற மர்மங்களை யெல்லாம் நன்றாயாராய்ந்து பார்த்தோர்க்கு இதினுடைய உண்மை நன்றாய் விளங்கும் ஆகையால் நான் சொல்லும்போது மாத்திரமே கேட்டுக் கொண்டு பிறகு அந்நியர்க்குக் கொடுப்பாயானால், வாய்புழுத்து மரணதசையை யடைந்து சாவக்கடவாய் என்று சபித்தேன் இப்படி நான் சாபங் கொடுத்திருப்பதால், அந்தச்சாபத்தை ஏற்றுக்கொள்ள மனமில்லாத நல்ல புத்தியையுடையவர்களெல்லாம் ஒருவருக்கும் கொடுக்க மாட்டார்கள். ஆகையாலல்லவா சித்தர்களெல்லாம் இதைப் பதனம் பண்ணி ஒளித்து வைத்தார்கள் இதை நீயறியாய்போலும்

பாவென்ற விரும்பினுட செம்புகேளு
பரப்பிலே விடுகாதே அடக்கிப்போடு
தாவென்ற மடையன் அப்பிரகங் காந்தந்
தாங்குவா யெடைசமனாய் சங்குபாதி
வாவென்ற பழச்சாறு விட்டுஆட்டி
மைந்தனே நெடுங்கையுன் சில்லுங்கட்டி
தீவென்ற கெந்திரெண்டு சாரமொன்று
திறமான தூரிசுடனே காரமொன்றே.

(பொ-ரை.) இனி அயச்செம்பினால் செய்யப்படும் வேதை வருமாறு இதை வெளிப்படுத்தாமல் பதனம்பண்ண வேண்டியது. அது என்னவென்றால் மயில்துத்தம், அப்

பிரகம், காந்தம், இவைகளை ஒரு அளவாக எடுத்து இந்த மொத்தத்திற்குப் பாதிசங்கு பாஷாணஞ் சேர்த்து எலுமிச்சம் பழச்சாற்றால் நன்றாயரைத்து உலர்த்திவைத்துக் கொள்ள வேண்டும் பிறகு அதை வேறே வைத்துக்கொண்டு புரையில்லாத மூசை யொன்று கொண்டுவந்து அதில் கெந்தகம் இரண்டெடையும் நவாச்சாரம் ஒரு எடையும் மயில்துத்தம் ஒரு எடையும் வெங்காரம் ஒரு எடையும் சேர்க்கவேண்டும் (எ-று.) (33)

ஒன்றாகப் பொடிசெய்து குகையினுள்ளு
  முற்றசுர பொடிமேலுந் தூவிக்கொண்டு
நன்றாக சில்லிட்டுச் சீலைசெய்து
  நாற்பதெருக்குக்கிடந்தா னுலுவாட்டிச்
சென்றாக ஆற்றியெடு சுற்றியுள்ள
  செம்பாகு மிதினுடைய ஆட்டோமெத்த
பன்றாகக் கோடிவித்தை யென்றாளாத்தாள்
  பதித்திட்டேன் சாஸ்திரத்தில் பதித்திட்டேனே.

(பொ-ரை.) மேல்சொன்ன சரக்குகளையெல்லாம் பொடிசெய்து அந்தப் பொடியில் பாதியெடுத்து மூசைக்குள் போட்டு மத்தியில் அரைத்த சரக்கைவைத்து மேலில் மற்றப்பாதி பொடியைப் போட்டு சில்லிட்டு நாலுக்கொரு சீலையாக ஏழுசீலைமண் செய்து நாற்பது எருவில் புடம் போடவும் பிறகு ஒருநாள்விட்டு மறுநாளில் அந்த புடத்தைப் பிரித்து மூசையை யெடுத்து ஜாக்கிரதையாகப் பார்த்தால் அது செம்பாயிருக்கும். அந்தச் செம்பை எடுத்துப் பார்த்து வேதைசெய்து கொள்ளவும் இவ்வேதை மிகவும் அருமையானது இதில் அநேகவித்தைகள் செய்யக்கூடுமென்று மனோன்மணித்தாய் சொல்லியிருக்கின்றனள். அந்தப்படியே நானும் இந்த சூஸ்திரத்தில் சொல்லியிருக்கின்றேன் (எ-று) (34)

பதித்தவித மின்னமொன்று சொல்லக்கேளு
பாப்பிலே விடுகாதே சூட்சமைந்தா
விதித்தவித முன்கையில் நெரிஞ்சில்ரெண்டும்
விரைந்துள்ளு மிட்டுசிங்கி கெசரமுஞ்சேர்த்து
கதித்தவித முன்போலப் புடந்தான்போடு
கனகமொத்த செம்பப்பா சொல்லொண்ணாது
சதித்தவித மேதனக்குச் செம்பைக்கண்டால்
சதாகோடி சங்கவித்தை வேதையாமே.

(பொ-ரை) நான் இங்ஙனம் ஏற்படுத்திய வித்தை நீ நன்றாய்க் கவனித்துப் பார்த்துக் கொள்ளவேண்டியது, அது நிற்க இன்னொரு வகையான/வேதையைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக அது என்னவென்றால்! அதைச் சொல்ல வெகு சூட்சமானதா யிருக்கும் செப்பு நெருஞ்சில், மஞ்சள் நெருஞ்சில், இரண்டையுஞ் சமஹூலமாகக் கொண்டுவந்து இடித்துச் சாறுவாங்கி, மிருதார் சிங்கியையும் வெள்ளைப் பாஷாணத்தையும் ஒரு எடையாக எடுத்து மேற்படி சாற்றினால் நான்கு நாழிகை பரியந்தம் நன்றாயரைத்து முன்போலவே ஒரு மூசைக்குள் போட்டு மேலே சில்லிட்டு நாளுக்கொரு சீலையாக ஏழு சீலைமண் செய்து உலரவைத்து எட்டாவது நாள் காலையில் நாற்பது வறட்டியில் புடம்போட்டு ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் காலையில் அந்தப்புடத்தைப் பிரித்துப்பார்த்தால் அது நல்ல செம்பாகவிருக்கும் ஆனால் இச்செம்பின் பெருமையை இப்படிப் பட்டதென்று சொல்லுவதற்கு முடியாது ஆனால் மேற்படியாக முடித்த செம்பைக்கண்டால் அநேக வேதைகள் செய்யும்படியான சத்தி கைகூடும் (எ-று.)

ஆதென்ற செம்புக்கு முன்னோர்புடத்தில்
ஆர்சரியங் களங்கெடுத்து ஆளக்கேளு

வேமென்ற களங்கொன்று சூதம்ரெண்டு
வீரமொன்று காரமொன்று ஒன்றாய்க்கூட்டித்
தாமென்ற குருச்செயநீர் விட்டுஆட்டித்
தான்வறுக்க கோடிவித்தை தாண்டியாடும்
வாமென்ற தொழிலெவர்க்குஞ் சொல்லவேண்டாம்
வாய்பேசாதிருந்துவிடு மவுனங்காணே.

(பொ-ரை) இந்தப்படியே செய்து முடித்த செம்பினைப் பிறகு ஒருபுடம்போட்டு எடுத்துக் கொண்டால் ஏதாவது கொஞ்சங் களங்கமிருந் திருந்தால் அதுவுமற்றுப்போகும் பின்னர் அதையெடுத்தாலும் விவரத்தைச் சொல்லுகின்றேன் கேட்பாயாக எப்படி யென்றால், மேற்படி செம்பு ஒருஎடையும், இரசம் இரண்டெடையும் வீரம் ஒரு எடையும் படிகாரம் ஒரு எடையுமாக எடுத்து இவைகளை யெல்லாம் ஒன்றாகச்சேர்த்து முன் முடித்து வைத்திருக்கின்ற சுத்தகங்கைக் குருஜெயநீரால் நான்கு நாழிகை அரைத்து உலர்த்திப் பின்னர் ஆறுவிரற் கடை உயரங்கொண்ட சட்டி ஒன்றை அடுப்பிலிட்டு, அந்தச் சட்டியானது தீப்பிடித்துச் செவந்துவருஞ் சமயத்தில் முன் அரைத்த மருந்தை அந்தச்சட்டியிலிட்டு வறுக்கவேண்டும் அப்படி வறுத்த இந்த மருந்தினால் அநேக வேதைகள் செய்து வருவதுண்டு ஆனால், இதை உலகத்தார்க்குச் சொல்ல வேண்டாம், ஒருக்கால் தவறிச்சொல்லி விடுவாயானால் முன் சாபத்திற்கு உள்ளாகி விடுவாய் இது தவறாது.

காணவே யிம்முறைகள் செய்யும்போது
காட்டாதே ஒருத்தருக்குங் கைபாகந்தான்
கோணவே பண்ணாமற் கைமறைப்புசெய்து
குஸ்திரந்தா னிருக்குதென்றுசொல்லொண்ணாது

போணவே கண்காணு தடக்கஞ்செய்து
பிரபலிய வஸ்துகண்டு மகிழ்ச்சிகூர்ந்து
வேணவே ஆதார மேல்மூலஞ்சென்று
பூரணியே காரணியே தாயேயென்னே.

(போ-ரை) மாணாக்கனாகிய நீ இதினுடைய உண்மையைச் செய்து பார்த்துத் தெரிந்துகொள்ள எண்ணம் வைத்துச் செய்யப் புகுந்தாயானால் இதை ஒருவருக்குங் காட்ட வேண்டாம் வெளிப்படையாக வைத்துக்கொண்டுஞ் செய்யவேண்டாம். இந்த இரசவாதத்தை முடிக்கும்படியான சாஸ்திரம் என்னிடத்தில் இருக்கிறதென்று சொல்லியும் உன்னை நீயே காட்டிக் கொள்ளவேண்டாம், இப்படி யெல்லாஞ் செய்யாமல் மேற்படி சூஸ்திரத்தை யடக்கஞ்செய்து வைத்துக்கொண்டு ஆறுதாரத்திற்குக் கடந்திரா நின்ற மேலாதாரத்தில், மூலாதார ஸ்தானத்தில் வீற்றிராநின்ற உன்மனாதேவியை தரிசித்து சர்வபரி பூரணியே! சர்வஜீவகாரணியே! என்னைப் பெற்றெடுத்ததாயே! என்று பலமுறையுந் துதிசெய்யவேண்டும் (எ-று) (37)

என்னவே சதாநித்தம் மனத்தையூணி
யேறடா அறிவங்கே பரத்தில்நீளும்
வன்னவே காயசித்தி யாகுஞ்சொன்னேன்
மகத்தான வித்தையெல்லாம் வளரும்பாரு
அன்னமே தேகத்துக் கூட்டியாட்ட
அருள்தானே பொருளாகி யாட்டுவிப்பாய்
முன்னமே சொன்னமுறை போக்கெல்லாம்பார்
மூட்டுகின்ற கைபாக முறையைப்பாரே.

(போ-ரை.) இப்படியே தினந்தோறும் உன்னுடைய மனத்தை எம்பெருமாட்டியின் திருவடிகளில் வைத்துத் தியானஞ் செய்வாயானால், உன்னுடைய அறிவானது

பரப்பிரம ஸ்தானத்திற்போய் அவளுடன் கலந்திருந்து மீண்டும் உள்வசமாகும். அல்லாமல் காயசித்தியு முண்டாகும். முன்சொன்ன தேவிபாத நமஸ்காரகாரணத்தால் உனக்கு அநேகமான வித்தைகளெல்லாம் கைகூடும். தேகர் நங்கநிறமாம் ஆகையால் நான் உனக்காக முன்னமே சொல்லிவைத்திருக்கின்ற வழிகளையும், கைபாக செய்பாகங்களையும் நீநன்றாய் கவனித்து பார்த்துக் கொள்ள வேண்டும் (எ-று) (38)

பாருநீ துரிசியொரு கட்டிவாங்கிப்
பண்பாக சிவந்துநின்ற பாலைமூடி
வேருநீ அரைத்துருட்டி பொதித்துக்கொண்டு
மேலாகச் சீலைசெய்து எரித்தபோதில்
சேருநீ புடம்போட்டு யெடுத்துவாங்கச்
சேர்த்திடாய் சூதம்ரெட்டி கெந்தியென்று
வாருநீ பச்சிலைநீர் விட்டுஆட்டி
வருத்துவிடும் ஆயிரத்தெண் மாற்றுமாமே.

(போ-ரை) இனி துருசினால் செய்யப்படும் வேதை வருமாறு:—நல்ல மயில்துத்தம் ஒருபெருங் கட்டியாக வாங்கிக்கொண்டு வந்து செம்பாலைவேரை அரைத்து அந்தத் துத்தத்தை அதற்குள்வைத்து மேலே மூன்று சீலைமண் செய்து ஐந்து வரட்டியில் புடம்போட்டு ஆறினபின் னெடுத்து அதற்கு இரண்டுபங்கு ரசமும், ஒருபங்கு கந்தகமும் சேர்த்து முன்சொன்ன மூலிகைச் சாற்றால் அரைத்து உலர்த்தி, அடுப்பிற் குடைவான சட்டி ஒன்றை வைத்து வறுத்துக்கொண்டால் ஆயிரத்தெட்டுமாற்று ஆகும்படியான வேதையாகும். எ-று.) (39)

மாற்றான குருக்களங்கு தன்னேடொன்று
மடையனேடு சவ்வீரம் காரீயபற்பம்

பாற்றான சாறுவிட்டு அரைத்துக்கூட்டி
பதறாமல் வருத்தரைத்து உலரவைத்துக்
காற்றான தாகாது செங்கலிலேயிட்டுக்
கைமுறையாய் சாமமொன்று யெரித்துஆரக்
கூத்தான வேதையப்பா அதிலேருட்சங்
கோடான கோடிதவர் கூட்டுங்காணே.

(போ-ரை) இனிக் குருக் களங்காமாறு சொல்லப்படுகின்றது அது எப்படியென்றால், மயில்துத்தம், வீரம், கருவங்க பற்பம், இவைகளை ஒரு அளவாகச் சேர்த்து முன்சொன்ன மூலிகைச்சாற்றால் நன்றாய் நாலுநாழிகை பரியந்தம் அரைத்து உலர்த்திச் சட்டியிலிட்டுக் கைபாகந் தவறாதபடி வறுத்து எடுத்துக்கொண்டு மறுபடியும் முன் சாற்றா லரைத்து உலர்த்தி ஒரு சட்டிக்குள் செங்கல்லை மாவுபோல் தூள்செய்து போட்டு அதின்மத்தியில் மூன் அரைத்த மருந்தை வைத்துக்கொள்ளவும். பிறகு வேதை அலங்காரப்படியே அநேகமான வேதைகளைச் செய்து கொள்ளலாம் (எ-று.) (40)

கூடுமென்ற காரியஞ் சூதம்நேராய்க்
கூட்டுப்பொன் னன்பாக மடையன்வீரம்
பாடுமென்ற கெந்தகமு மொன்றாய்க் கூட்டிப்
பதறாதே குருஜெயநீர் விட்டு ஆட்டி
ஓடுமென்ற ரவிபுடத்தில் வறுத்துப்போடு
ஓகோ அயந்தான் செய்தாயானால்
ஆடுமென்ற சரக்கெல்லா மிதனிலாட்டு
ஆத்தாளைக் கோடித்தாற் கோடிதானே.

(போ-ரை.) இனியொரு வேதை வருமாறு:—காரீய பற்பம், இரசம், அரிதாரம், மயில்துத்தம, வீரம், கந்தகம் ஆகிய இவைகளை ஒரு எடையாகச் சேர்த்து முன் மூடி

த்து வைத்திருக்கிற சுத்தகங்கை குருஜெயநீரால் நான்கு ஜாமம் அரைத்து சூரியன் முகத்தில் ஒரு சட்டியை வைத்து அந்தச்சட்டி நன்றாய்க் காய்ந்தபின் அதை அந்தச் சட்டியிலிட்டு நன்றாய்வறுத்துப் பிறகு மூசையிலிட்டு கொல்லனுலையில் வைத்து ஊதினால் அது உருகி அயக் களங்காகும். இதையெடுத்து வைத்துக் கொண்டு மினுன்மணித்தாயைப் பூசிப்பாயானால் எப்படிப்பட்ட வேதையையும் இந்தக்களங்காற் செய்துகொள்ளலாம். அப்படி பூசை செய்யாமல் விட்டுவிடுவாயானால் மேற்சொன்ன இரசவாதஞ் சித்தியாதென்பதற்கு ஆக்ஷேபணையேயில்லை.

கோடியொடு ரசமெழுகு வகையைக்கேளு
குருஜெயநீர் விட்டுக் கறியுப்பைஆட்டி
நாடியே குக்கிடத்திற் சுண்ணமாகும்
நன்றாக சுண்ணத்திற் காரசாரம்
வாடியே திரியாதே களஞ்சியொன்று
மைந்தனே சேரவொன்றாய் நறுக்கிக்கொண்டு
தேடியே பீங்கானிற் செயநீர்விட்டுத்
திரமான துரிசாறு களஞ்சியாட்டே.

(பொ-ரை.) இனிரசமெழுகு வேதைவருமாறு: சோற்றுப்பை வேண்டியமட்டும் எடுத்துக்கொண்டு வந்து கல்வத்திலிட்டு முன் ஜெயநீராகிய சுத்தகெங்கையா லரைத்துப் பில்லைதட்டி உலரவைத்து ஒரு அகலில் வைத்து மேலும் ஒரு அகல்மூடிச் சீலைமண்செய்து பத்துவறட்டியிற் புடம்போட்டால் அந்த உப்புச் சுண்ணமாகும் அந்தச் சுண்ணத்தில் வெங்காரம் ஒரு கழஞ்சும் சேர்த்து ஒரு பீங்கானில் எல்லாவற்றையும் போட்டு ஆறுகழஞ்ச மயில்துத்தத்தையும் பொடித்துக் கூடப்போட்டு முன்னே

முடித்து வைத்திருக்கின்ற சுத்தகங்கை குருஜெய நீரை விட்டு மத்திக்கவேண்டும் (எ-று) (42)

ஆட்டியே பிங்கானில் வைத்துக்காய்ந்து
ஐயனே வறுத்தெடுத்து செயநீர்வாங்கி
ஆட்டியே கந்தகத்தை அரைத்துக்காய்ந்த
அதைவறுத்துச் செயநீர்தா னிறக்கிக்கொண்டு
மாட்டியே இரதத்தில் விட்டுஆட்டி
மைந்தனே வறுத்தெடுத்துப் பின்னுமாட்டி
கூட்டியே வேதைக்குக் கோடாகோடிக்
குடியான ரசமெழுகின் கூத்தைக்காணே.

(பொ-ரை.) இப்படி மர்த்தித்த மருந்தை வெயிலில் வைத்து நன்றுய்க் காய்ந்தபின்பு அடுப்பின்மேல் ஒரு சட்டி வைத்துத் தீயானது அந்தச் சட்டிக்கு ஏறியசமயத்தில் மேற்படி உலர்த்திய மருந்தைக் கைபாகப்படி வறுத்துக்கொண்டு முன்வறுத்த மருந்தையும் இதையும்ஒன்றுய்ச் சேர்த்து இதை ஜெயநீராக இறக்கிக்கொண்டு இந்தச் செயநீரை வேண்டுமான அளவுக்குப் பாதரசங் கொண்டுவந்து அதில் விட்டு அரைத்து மெழுகாக்கி உலர்த்தி முன்போல் வறுத்துக்கொண்டு இரசவாதஞ் செய்முறைப்படியே செய்து அநேகமான வேதைகளை முடித்துக்கொள்ளலாம்.

காணவே பாஷாணக் கட்டுகேளு
கைபாக மார்க்கவழிக் கருவைத்தாலும்
பூணவே மணிமிளை துத்தந்தானும்
பூநீறு அப்பிரகம் வங்கம்சிங்கி
தோணவே கர்ப்பூர சிலாசத்துருடன்
சுறுக்கான நவச்சார மிணங்கள் சீனம்
பேணவே குருஜெயநீர் தன்னிலாட்டிப்
பேசாதே சமபாகம் வெள்ளைதானே.

(பொ-ரை.) இனிப் பாஷாணக் கட்டுதல் செய்யப்படும் வேதை வருமாறு; எப்படியென்றால் குருவின் மார்க்கப் படியே மனோபோலப் பார்த்தொளி கொடுக்கின்ற பொன்னிமிளை, மயில்துத்தம், பூரம், அப்பிரகம், சாரமும், மிருதார்சிங்கி, கற்பூர சிலாசத்து, ஆரைத்தீக் கற்பூரம் நவாச்சாரம், சோற்றுப்பு, படிகாரம், இவைகளெல்லாம் சமபாகமாக எடுத்துக் கல்வத்திலிட்டு மூன்றே முடித்துவைத் திருக்கின்ற கத்தகந்தைக் குருசெயநீரால் நான்கு நாழிகை அரைத்து இதை வேறேவைத்துக் கொண்டு இந்தச் சரக்குகளின் பொருத்த எடைக்கு எட்டு பாஷாணங் கொண்டுவந்து அதை மேற்படி செயநீரால் அரைத்து வைத்துக்கொள்ள வேண்டும் (எ-று) (44)

தானேகேள் கசித்தாக் கிலைசெய்து
சாமத்தான் உப்பிலவைத்து எரித்துப்பின்னே
வாகேகேள் உலர்த்தெடுப்பு போமேயாகும்
உத்தமனே இதின் மருந்து எதுக்குமில்லை
மாகோகேள் இத்தவித்தை ஆச்சரியமாகும்
மதிபூமி மயிலுதாலே மாதியாகன்
மானிலத்தில் மனிதருக்கு வழங்கவேண்டாம்
மகத்தான பாஷாணக் கட்டுதானே.

(பொ-ரை) முன்னர் அரைத்து வைத்திருக்கின்ற மருந்துக்கு இரண்டாவது அரைத்த பாஷாணத்தைக் கவசஞ் செய்து மூன்று சீலைமண் செய்து ஒரு சட்டியில் உப்பைக் கொட்டி அந்த உப்பின் மத்தியில் மேற்படி கவசித்தமருந்தை சாத்திவைத்து ஒரு சாமம் வரைக்கும் தீ நியாய் எரித்துப் பிறகு தீயை யெடுத்துவிட்டு அந்த அடுப்பின் மேலிலிய சூட்டோடெல்லாம் ஆறவிட்டு மறுநாளைக்கு எடுத்துப்பார்த்தால் அந்த மருந்துகள் ஒன்றுபட்

சேர்ந்துருகி ஒரேகட்டியாய் எலும்பைப்போ லிருக்கும் ஆனால் இதற்கு வேகமோ ரொம்பவும் உண்டு இதின் வேகத்தைப்போன்ற வேகம் வேறெந்த மருந்துக்கும் கிடையா தென்பதிற் சந்தேகமில்லை. ஆனாலும் நல்ல மதி யுள்ளவனா யிருந்தாலே வாதியாவான். ஆனாலும் உலகத் திலுள்ள மனிதர்களுக்கு இந்த முறையைக் காட்ட வேண் டாம். இதுவே பாஷாணக் கட்டாகும் (எ-று) (45)

கட்டான பொரிகாரங் கந்தகஞ்சாரங்
கலந்து நீசமனாகக் கல்வத்திட்டு
மட்டான கோரக்கர் மூலிச்சாற்றில்
மெழுகதுபோ லரைத்துக் கவசஞ்செய்து
திட்டான மண்செய்து காயவைத்துத்
திறமான தோரெருவிற் புடந்தான்போடு
பட்டா திறந்துரிசு நேராச்சூதம்
பாங்கான வீரமுடன் கெந்திகூட்டே.

(பொ--ரை.) வெங்காரம், கந்தகம், இந்த இரண்டை யும் சமபாகமாக எடுத்து கோரைக்கிழங்கின் சாற்றால் மெழுகுபோல் நன்றாயரைத்து துருசுகட்டிக்குக் கவசஞ் செய்து அதற்கு மேல் மண்சீலைசெய்து காயவைத்து ஒரு எருவிற் புடம்போட்டெடுத்துப் பிறகு அதற்குநேராக இரசம், வீரம், கந்தகம், இவைகளைச் சேர்க்கவேண்டும்.

கூட்டியே வெண்கார மொன்றாய்ச்சேர்த்து
குருஜெயநீர் விட்டரைத்து வறுத்துப்போடு
ஆட்டியே யிப்படித்தான் குருஜெயநீர்விட்டு
அப்பனே ஐந்துதரம் வறுத்தாயாகில்
நாட்டியே துறைநன்றாங் கோடிவித்தை
நன்றாக வேதையிலே கோடாகோடி

ஊட்டியே தரித்திட்ட ஞட்டைக்காரர்
ஏமேரிகே பார்த்திருக்குங் காணலாமே.

(பொ-ரை) அனைவரோடும் அந்த ஏடையில் பிரணவமே மென்கிற ஓங்காரத்தையுங் கூடச்சேர்த்து மூன்றுமுடித்து வைத்திருக்கின்ற மந்திரங்களைக் குருவிடமிருந்து உரைத்துக் கைபார்ப்பது வருத்தவேண்டும். இப்படியே ஆந்தமுறை குருவெயினோ விட்டரைப்பதும், வருப்பதுமான கைமுறையைச் செய்து வைத்துக்கொண்டால், இதைப்போல் வேறெதுவும் வேலைகளை முடித்துக் காட்டாது. இதுவே அருச் சேவையாகும் இதினால் மேலான பரமபதத்தையுங் காணலாம் (எ-று) (47)

காணலாம் பூமியிலே தோற்றமெல்லாம்
கருவென்ற வித்தல்லோ ஆதிமூலம்
பூணலா மனதுக்கு மதுவேமூலம்
புரிபட்ட மூன்றெழுத்து மேகமாதி
தோணலா மாகாச வெளிக்குட்சென்று
செபமிடவு மதிரவி கடனமாயும்
பேணலாங் குருபதத் திலக்காய்ப்போற்றி
பிடித்தவரு சித்தரென்ன பெருமைதானே.

(பொ-ரை.) இப்படி முடித்துக் கொண்ட அருளின் வேலையால் உலகத்தோற்றங்களை யெல்லாங் காணலாகும். இந்தக் கருவல்லவோ பாலத்திற்கும் ஆதியாகவு மிருப்பது. இதுவே மனவொடுக்கத்திற்குங் காரணமாகும், வாலை மூன்றெழுத்தின் பெருமையும் வெளிப்படும், சந்திர, சூரியமண்டலங்களில் சென்று அங்கு திருவருட்டாண்டவஞ் செய்து கொண்டிருக்கின்ற குருமூர்த்தியின் திருவடிகளைக் கண்டு அதைப் பெறுமாறு அழுது அதை அடையலாம். இப்படியே அழுகண்ணி சித்தர் அழுது பெற்ற பெருமையும் உனக்குத் தெரியுமல்லவா? (எ-று.)

பெருமையென்ற தாம்பிரத்தின் பற்பங்கேளு
  பேசாத கருவிடையம் சொல்வேன்மைந்தா
அருமையென்ற தாம்பிரந்தான் களஞ்சிபாரு
  அதிற்பாதி காரீய மபிர்தங்கூட்டி
தருமையென்ற வெண்காரம் வீரங்கெந்தி
  ஒன்றாகக் குருஜெயநீர் விட்டரைத்து ஆட்டு
கருமையென்ற குக்கிடத்தில் தவளநீரும்
  கனகமடா வெகுகோடி காட்சிபாரே.

(பொ-ரை.) இனித்தாம்பிர பற்பத்தால் செய்யப்படும் வேதை வருமாறு எப்படியென்றால் அருமையாச் சுத்தி செய்த தாம்பிரம் ஒன்றேகால் விராகனெடை யெடுத்து அதிற்பாதி கருவங்கபற்பமும், பாஷாணத்தையுஞ் சேர்த்து, வெங்காரம், வீரம் கந்தகம் இவைகளைத் தாம்பிர எடைக்குச் சமபாகமாகச் சேர்த்து முன் குருஜெயநீரால் அரைத்துப் பில்லை தட்டி உலர்த்தி, ஒரு அகலில் வைத்து மேலும் அகல்மூடிச் சீலைமண்செய்து உலர்த்திப் பத்து எருவிற் புடம்போட்டு ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் காலையில் தூபதீப நைவேத்திய முதலிய சோடசோப சாரங்களுடன் மனோன்மணித்தாயை நமஸ்காரஞ் செய்து மேற்படி புடத்தைப் பிரித்துப் பார்த்தால் அந்தத் தாம்பிரமானது வெண்மையான விபூதிபோலாகும், இப்படியான தாம்பிர பற்பத்தால் அனேகமான வேதைகளைச் செய்து கொள்ளலாம் இதில் எள்ளளவுஞ் சந்தேகமே யில்லை இது தாண்டவராய மூர்த்திகள் அநுபவத்திலிருக்க நான் கண்டது (எ-று) (49)

காட்சியா மின்னமொரு தொழிலைக்கேளு
  கைபாகஞ் செய்பாகங் கருவைச்சொல்வேன்

ஆட்சியாம் பொன்னிமிளை வீரங்காரம்
அந்தெடைக்கு பொன்னென்ற வப்பிரகஞ்சேர்
வாசியாங் குருஜெயநீர் விட்டுஆட்டி [த்து
மைந்தனே ருக்கிடத்தில் மடையன்போலாம்
பூச்சியாம் வேட்டுவந்தான் வைத்தகுஞ்சப்
புதுமையொக்கும் நாகத்தின் போக்குத்தானே.

(பொருள்) இன்னும் ஒருவகையான வேதையைச் சொல்லுகின்றேன். நீ அதினுடைய கைபாக செய்பாகங்களை நன்ருய்க் கவனித்துக் கொள்ளக்கடவாயாக எப்படியென்ருல், பொன்னிமிளை வீரம், வெங்காரம், இந்த மூன்றையும் ஒரு எடையாக எடுத்துக்கொண்டு அந்த மூன்றுஞ் சேர்ந்த மொத்த எடைக்குப் பொன்னப்பிரகஞ் சேர்த்து முன்முடித்து வைத்திருக்கின்ற குருஜெயநீர்விட்டு நன்ருய் மெழுகுபோலரைத்துப் பில்லைதட்டி உலர்த்தி ஒரு அகலில் வைத்து மேலும் அகல்மூடிச் சீலைமண் செய்து பத்து எருவிற் புடம்போட்டு ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் பிரித்துப் பார்த்தால் நல்ல துருசு வெள்ளை போலாகும். இது ரொம்பவும் புதுமையான தொழிலாகும். இது துத்த நாகத்தின் செய்கைபோல் சிறந்ததாகும். ()

போக்கான வசீகரத்தின் சூட்சங்கேளு
புகழ்பெரிய ஆவின் கோரோசனை கர்ப்பூரம்
வாக்கான கண்ணனுட மூலிவேரும்
மகத்தான சந்தனமும் புனுகுங்கூட்டித்
தாக்கான மந்திரமாம் ஓம்-கிலீம்-வசியஞ்
சர்வமோகினி வாவா வென்றுபோடு
தாக்கான தில்லகடம் ஆட்டிப்போலே
கண்டதெல்லாந் தேடிகின்று கதறும்பாரே.

(போ-ரை.) இனி வசியத்தின் சூட்சமார்க்கம் கேட்பா யாக எப்படியென்றால்! மிகவும் சிறப்புற்றதான கோரோசனம், பச்சைக்கர்ப்பூரம், விஷ்ணுகாந்திவேர், அரைத்த சந்தனம், புனுகு இவைகளை நன்றாயரைத்து மாத்திரை திரட்டிவைத்துக் கொண்டு ஓம் கிலீம் வசிய வசிய சர்வ மோகினி வாவா என்று ஜெபித்து ஒரு மாத்திரையைக் கொடுப்பாயானால், நீ கண்ட ஒவ்வொரு பொருளும் உன் சொற்படியே நடக்கும் (எ-று) (51)

பாரப்பா கிராமமொன்று கூடச்சேரில்
பார்வசியம் பரவசியம் மெட்டுமோடும்
வாரப்பா செங்கழுநீர்ப் பூச்சாறிட்டு
மயனம்போ லரைத்துலர்த்தி வைத்துக்கொண்டு
சேரப்பா மத்தியிலே திலர்தம்போடு
திறமான வசிகரத்தின் சித்தியாச்சு
காரப்பா விதைமறைத்துச் சொன்னார்சித்தர்
கருவையெல்லா மின்னூலிற் கண்டிடாயே.

(போ-ரை.) மேற்சொன்ன மந்திரத்துடன் கிராமம் என்பதையுஞ் சேர்த்து ஓம் கிலீம் சர்வ கிராமமும் வசிய வசிய சர்வமோகினி வாவா என்று ஜெபித்தால் உலகத்தார்களெல்லாம் வசிய மாவார்கள், அஷ்டமாசித்திகளையும் ஆடக்கூடும். பிறகு முன்சொன்ன மருந்துகளைச் செங்கழுநீர்ப் பூச்சாறு விட்டு நன்றாய் மெழுகுபோ லரைத்துப் பொடியாக உலர்த்தி வைத்துக்கொண்டு, வேண்டியபோது எடுத்து நல்லெண்ணெயிற் குழைத்துப் பொட்டாக இட்டுக்கொண்டால் வசியம் சித்தியாய் விடும். இவைகளை யெல்லாம் சித்தர்கள் மறைத்து வைத்தார்கள். அவர்களுடைய மறைப்பை யெல்லாம் நான் சொல்லிய இந்நூலிற் கண்டு கொள்வாயாக (எ-று) (52)

கண்டதொரு நூல்போல வின்னூல்தன்னைக்
காசினியோர்க் கொருநாளுங் கெடுக்கவேண்டாம்
விண்டதொரு கருக்களெல்லாஞ் சொல்லவேண்டாம்
வெளியாக கனகமுறை காண்பிக்கவேண்டாம்
பண்டதொருஞ் சிவனுனை குருவினுனை
பார்வதியாள் தன்னுனை யிந்நூல்பதனஞ்
அண்டதொரு சிஷன்வந்து அடுத்தாலுந்தான்
அருமையுள்ள சூஸ்திரத்தை யியம்பொண்ணாதே.

(போ-ரை) முதன் மாணாக்கத்தன்மை பூண்டுள்ளவனே நான் சொல்லும் இவ்விஷயத்தை நன்றாய்க் கவனிப்பாயாக! அது என்னவென்றால் சிவபெருமானுடைய திருவடிகளிலும் என்னுடைய ஆசாரியர் திருவடிகளிலுஞ் சத்தியமாகச் சொல்லுகின்றேன் நீ இதுகாறுங் கற்றுணர்ந்த நூல்கள் போலவே இந்த நூலையும் எண்ணிக்கொண்டு யாருக்கும் கொடுக்கவேண்டாம் அல்லாமலும் இதிலுள்ள மர்மங்களை யாதுலும், வேதைகளை யாதுலும் ஒருவருக்குஞ் சொல்லவும் வேண்டாம், உன்னை யடுத்துக் காத்திருக்கும் மாணாக்கனானாலும் என்னுடைய சூஸ்திரத்தைச் சொல்லவேண்டாம் (எ-று.) (53)

இயம்பவொண்ணா நாகமொன்று சூதம்ரெண்டு
இத்துடனே சவ்வீரங் காரம்பாதி
திறம்பவே பொன்னி னப்பிரகங்காலும்
நீதியென்ற வன்னிகர்ப்ப மரைதான்பூட்டி
சயம்பவே கெந்தமுங் கால்தான்சேர்த்துத்
துடிவுள்ள குருசெயநீர் விட்டுஆட்டி
சயம்பவே வறுத்தெடுத்துப் பின்னும் ஆட்டிக்
கைமுறையாய் முன்போலே பதனஞ்செய்யே.

(பொ-ரை.) சொல்லுதற்குக் கூடாத மகிமைபொருந்திய சுத்திசெய்த சிறுகண் துத்தநாகம் ஒரு எடையும், இரசம் இரண்டெடையும், வீரம் அரை யெடையும், வெங்காரம், அரை எடையும், கந்தகம் கால் எடையும், ஆக இவைகளை யெல்லாம் இம்மியும் பிசகாவண்ணம் நிறுத்தெடுத்துக் கல்வத்திட்டு முன்முடித்து வைத்திருக்கின்ற குருஜெயநீரால் நான்கு நாழிகை பரியந்தம் நன்றாயரைத்து உலர்த்திப் [1]பின்னர் அடுப்பிற் சட்டியேற்றி முன் அரைத்துலர்த்திய மருந்தையிட்டுக் கைபாகந் தவறாதபடி வறுத்தெடுத்து மறுபடியுஞ் ஜெயநீராலரைத்து உலர்த்திப் பதனஞ்செய்து கொள்ளவேண்டும். (எ-று) (54)

செய்யப்பா நாகம்பத் தாலேகோடி
திறமான வித்தையெல்லா மாடிப்பாரு
மெய்யப்பா மார்க்கமெல்லாம் வெளியாய்ச்சொன்
னேன்
விள்ளாதே யொருவருக்குங் குருமருந்தாங்
தையப்பா நிர்த்தமிட்ட பரனைப்போற்றித்
தாயான சிவகாமி பாதம்போற்றி
கையப்பா பிரபல்லிய வித்தையெல்லாங்
கண்டுணர்ந்து செய்தவனே காட்சிதாமே.

(பொ-ரை.) மேலேசொன்ன நாகபற்பத்தால் அநேக வழிகளாக செய்யப்படுகின்ற இரசவாதங்களை யெல்லாம் நான் வெளிப்படையாக சொல்லியிருக்கும் இந்தச் சூஸ்திரப்படியே செய்து பார்த்துக் கொள்ளக்கடவாயாகில் ஆனால் வேறொருவருக்குஞ் சொல்லவேண்டாம் எப்படியிருந்தாலும் சிவபெருமானையும், அவனுடைய சத்தியாகிய சிவபெருமாட்டியையும், தியானஞ்செய்தே யொவ்வொரு வித்தையையுஞ் செய்துமுடிக்கவேண்டும். அப்படி கற்றுணர்ந்து செய்பவனுக்கே அவ்விருவருங் காட்சிகொடுத் தருளுவர் (எ-று.) (55)

தாமேதான் சாஸ்திரத்தை யார்கேட்டாலுந்
 தடைசொல்லி யனுப்பிவிடு சதாசிவன்றன்னாணை
வாமென்ற விந்நூல்தான் கொடுத்தீர்தான்
 வாசியுங்கோ வென்றுசொல்லி வகைசொல்லாதே
ஆமென்ற கருக்களெல்லா முணர்ந்துகொண்டு
 அடக்கமாய்ச் செய்தொழிலின் அருமைபாரு
ஓமென்ற மௌனத்தின் செய்கைபோலே
 ஓகோகோ அந்தவிதம் உற்றுப்பாரே.

(பொ-ரை.) நான் சொல்லிக் கொடுத்திருக்கின்ற சாஸ்திரத்தை 'உனக்குக் கன்னனவர்கள் கேட்டபோதிலும் அவர்களுக்குக் கொடாமல் எதாவது தடைசொல்லி அனுப்பிவிட வேண்டியது. அப்படியே நீசெய்யவேண்டு மென்பதற்குச் சிவபெருமானுடைய திருவடிகளின்மேல் சத்தியம் வைத்திருக்கின்றேன். ஆகையால் நீமட்டிக்கும் உன்னளவில் கற்றுணர்ந்து நன்றாய் ஆலோசித்து நிதான மாயிருந்து ஒவ்வொன்றையுஞ் செய்து பார்த்துப்பின்தேக சித்திபைப்பெற்று யோக ஞானங்களைக் கைகூட்டுவித்துக் கொள்ளும் பொருட்டு, ஓம் என்ற பிரணவ மந்திரத்தை யுச்சரித்து அந்தமௌன நிலையிலின்றும் உற்றுப் பார்ப் பாயாக (எ-று)

(56)

உற்றுநின்ற ராசியிலே அமிர்தமுண்டு
 ஒளியாமற் கேசரத்தி லுயரவேறிப்
பற்றிநின்ற பிடைபின்சுழி நூலைமுன்னென்றால்
 பாய்மர்மம் வெளியகண்ட சோதிமூலம்
பற்றிநின்ற அறிவுதனை மேலேநோக்கி
 அறிந்துபார் தேசிகனைப் புகழ்ந்துகொண்டு
சத்திநின்ற பாதத்தைச் சிந்தைசெய்து
 சதாநித்தம் பூரகத்தை சார்ந்துநோக்கே

(பொ-ரை.) இங்ஙனம் மௌனநிலையைப் பொருந்தி
ராசியாகிய சந்திர நிலத்திற்குச் சென்று அந்த நிலத்தி
லிருந்தும் உண்டாகும் அமிர்தத்தைப் பானம்பண்ணி
அதைவிட்டு இடை வெளிகளிலிருக்கும் மாயைகளில்
போய்ச்சிக்கி மறைந்து விடாமல் சிதாகாசம் வரைக்குஞ்
சென்று, இடைகலை, பிங்கலை, சுழிமுனை, ஆகிய மூன்று
சரங்களும், ஒன்றாய்ச்சேரும் இடமான அகண்ட சோதி
யிற் போய்ச்சேர்ந்து அங்கே உன்னுடைய அறிவை
அதின் வழிப்படுத்தி அமர்ந்திருந்து அங்கே எழுந்தருளி
யுள்ள ஆசாரிய மூர்த்தியைக்கண்டு நமஸ்காரஞ்செய்து
அதின்பிறகு லலாடஸ்தானத்திற் சென்று ஆங்குச் சிவ
சத்தியின் திருவடிகளைச் சிந்தித்து அநுதினமும் பூரக
சரமாகவே யிருந்துகொண்டு தரிசிக்கவேண்டும். (எ-று.)

நோக்கவே யிருள்வெளியாம் நடனந்தோணும்
நுணுக்கமுள்ள யிமநாத முழக்கங்காணும்
பார்க்கவே மணியோசை சங்கிஞைசை
பரமகுரு நாதர்நின்ற கைலையங்கே
தாக்கவே மௌனத்தின் குளிகையங்கே
தோணுதெல்லாந் தோணுஞ் சொரூபமங்கே
காக்கவே யெந்நாளுங் கருணைபொங்கிக்
கடாக்ஷித்த வாலையென்ற கருத்துமங்கே.

(பொ-ரை.) அப்படி தரிசித்துக் கொண்டிருந்தால்
இருளானது நீங்கி வெளியானது காணப்பட்டு அங்கே
திருநடன தரிசனமுந்தோன்றும். அல்லாமல், பொன்னி
ஞைசையும், மணியோசையும், சங்கோசையும், தெரிய
வரும் அந்தவிடத்தில் கைலாசமும், மௌனசாதன குளி
கையும் வெளிப்படும். இனித்தோன்றாத பொருள்க
ளெல்லாமும், தற்சொரூபமும், வெளிப்படும் அன்றி எத்

காலத்திலும் திருவருளானது பொங்கி வெளிப்பட்டுக் கடாட்சித்து வாலையென்ற பெண்வெளிப்படுவாள் (எ-று.)

அங்கென்ற புரியஷ்ட மெழுத்துவாசி
ஆதார மேல்மூலத் தடக்கமங்கே
பங்கென்ற மனம்புத்தி யாங்காரமூன்றும்
பஞ்சவர்கள் ஒத்துநின்ற பதியுமங்கே
சங்கென்ற பத்மநிதிக் கடலாலேறித்
தவசிருந்த குகைவீடு தலமுமங்கே
மங்கென்ற கேசரமு முள்ளஞான
வழிமார்க்க முற்றுணர்ந்த வழிகாண்பாயே.

(பொ-ரை) அங் என்று புரியஷ்டக எழுத்தால் வாசித்து மேலாதாரமூலத்தில் அடங்கி யிருப்பதும், மனம், புத்தி, ஆங்காரம், மூன்றும், பஞ்சகர்த்தர்களும், அமர்ந்திருக்கும் இடமும் அதுவேயாகும். ஆகையால் பத்மநிதிக் கடலையும், நெருப்பாறுகிய வழியையும், மார்க்கமாகக் கொண்டு ஏறித் தவசிருந்த குகைபோன்ற வீடும், ஆகாய மார்க்கமும், அடங்கியுள்ள ஞானவழியை யுணர்ந்துகொண்டு அந்தவழியை நீ காணவேண்டும். (எ-று) (59)

வழியான சுடர்கோடி காந்திமீறு
மதியிரவி யொன்றான மார்க்கந்தோறுஞ்
சுழியான முனையிலுறை கமலமாது
துரியமெனச் சாக்கிரத்திற் சுற்றியேறக்
குழியான மௌனமு மொன்றுய்ப்பற்றிக்
கூர்மைதரு மெய்ஞ்ஞான அதிதமுற்று
விழியான கண்டகண்ட சோதியெல்லாம்
வெளியான சூஸ்திரத்தின் விபரமுற்றே.

(பொ-ரை) அந்தவழியில் ஆயிரங்கோடி சூரியர்கள் ஏககாலத்தில் ஒன்றுய்ச்சேர்ந்து வந்தாற்போன்ற காந்தி

யீறி, சூரிய சந்திரர்கள் ஒன்றாய்ச் சேரும்படியான மார்க்கந்தோன்றும் அன்றிச் சுழிமுனையென்னும் இடத்தில் வசிப்பவளான மனோன்மணித் தாயை சாக்கிராதீத ஸ்தானத்தினின்றும், திருவிளையாடல் செய்வதைக்கண்டு அவளைப்பின் பற்றிச்சென்று மௌனஞானத்தை யடைந்து மெய்ஞ்ஞானி யென்கிற பேரையுடையவனாகி சர்வமும் பிரமமெனக்கண்டு வாழக்கடவாய். அப்படிப்பட்ட நிலைகளை யெல்லாம் போதித்த சூஸ்திரமும் நல்லமங்களகுணத்துடன் நிறைவேறியது (எ-று) (60)

லிங்க மெழுகு.

ஈயவே யெடைக்கெடைதான் தங்கமிட்டு
இதில்தங்க மிட்டுருக்க வேறுமாற்றும்
மாயவே யில்லாவிட்டால் புத்தோட்டினாது
அப்பவல்லோ வேதையிது வென்னசொல்வேன்
காயவே ஜாதிலிங்க மெழுகுகேளு
கருங்கோழி முட்டையிலே பணம்போல்துவாரம்
பாயவே பணவெடையோன் றரைதானப்பா
பச்சைநல்ல கர்ப்பூர முட்டைதாக்கே.

(பொ-ரை.) இனி வேறுவகையாக இலிங்கமெழுகால் செய்யப்படும் வேதைவருமாறு! எப்படியென்றால், கருங்கோழி முட்டை ஒன்று வாங்கிக்கொண்டுவந்து அதிலே யொரு துவாரஞ்செய்து அந்தத் துவாரத்தில் பச்சைக் கர்ப்பூரம் பணவெடை ஒன்று ஷை முட்டையில் போட்டு மேலே அந்த முட்டையின் ஓட்டைக்கொண்டே மூடவேண்டும். அப்படிமூடி நாளுக்கொரு சீலையாக எழுநாளைக்கு எழுமண் சீலைசெய்யவேண்டும்.

ஆனால் வேதையின் திருஷ்டாந்தமாய் பாரு எது? வேதை மருந்தோ அந்தமருந்தின் எடைக்கெடை தங்க

விட்டுருக்கிப் பார்த்தால் மாற்றுக்காணும் அதைப் பரீட்சித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும். தங்கமென்பது செம்பு. (1)

தாக்கியே ரவியில்வைப்பாய் மெழுகதாகும்
　　தயவாக மெழுகெடுத்து லிங்கத்திற்பூசி
வீக்கியே விளக்கினிலே பிடிக்கும்போது
　　மெழுகாகு மதில்தங்கக் கட்டிக்கொண்டு
ஆக்கியே வெள்ளி செம்பிற் சேர்த்துகொண்டு
　　அப்பனே வதிற்பத்துக் கொன்றுசேரு
பாக்கியமே பண்டாக்கு இனிமேலென்ன
　　பண்பான அரிதாரக் கட்டுகேளே.

(பொ-ரை) அப்படி எழு சீலைசெய் திருக்கின்ற முட்டையை வெயிலில் வைத்துக்கொண்டு வந்தால், எத்தனை சீலை செய்திருக்கின்றதோ அத்தனைநாளில் அந்த முட்டைக் குள்ளிருக்கும் கர்ப்பூரம் மெழுகா யிருக்கும். அந்த மெழுகை யெடுத்து ஒரு பலம் இலிங்கத்தைச் சுத்திசெய்து வைத்துக்கொண்டு அந்த மெழுகை மேற்படி இலிங்கத்திற்குப்பூசி விளக்கினில் வாட்டினால் அந்த லிங்கம் மெழுகாகும். அந்த மெழுகுக்குச் சரியெடை தங்கங் கட்டி வைத்துக்கொண்டு, வெள்ளி இரண்டெடை, செம்பு நாலெடை சேர்த்துருக்கி அது உருகிக் கண்விட்டபோது சமயத்தில் முன் இலிங்கமெழுகைப் பத்துக் கொன்று கொடுக்க ஒன்பது மாற்றுருவதான பொன்னாகும். ஆகையால் இனி அப்படி முடிந்த பொன்னால் ரொம்பவும் செல்வ முடையவர்களாவார்கள். இனி அரிதாரக் கட்டுக்குச் செய்யப்படும் வேலைகளை நீகேட்பாயாக (எ-று) (2)

அரிதாரக்கட்டு.

கட்டான வரிதாரங் குழிகல்லிட்டு
  கருதியே சாருயம் விட்டரைப்பாய்
மட்டாக ஜாமமிரண் டரைத்தபோது
  வழிக்கையிலே வேளைச்சார் மூன்றுதுளிவிட்டு
தட்டாக வில்லைதட்டி காயவைத்து
  தனிநாயுருவி சாம்பல் பாண்டத்திட்டு
இட்டாகவில்லை யதின்மேலுஞ் சாம்ப
  விட்டுடனே சீலைமண்செய் தடுப்பிலேற்றே.

(பொ-ரை.) தாளகம் ஒரு கட்டியாகக் கொண்டுவந்து சுத்தி செய்து கல்வத்திலிட்டுப் பொடித்துப் பட்டைசாருயம் விட்டு இரண்டு சாமம்வரைக்கும் நன்றாயரைத்து மெழுகுபதமாய் வழிக்கிற சமயத்தில் வேளைச்சாறு மூன்று துளிவிட்டு மத்தித்துப் பில்லைதட்டி வெயிலில் வைத்துக் காயவைத்து நன்றாய்க்காய்ந்த பிறகு நாயுருவி சமூலம் சாம்பலாக்கி ஒரு சட்டிக்குள் போட்டு அந்தச் சாம்பலின்மேல் பில்லையை வைத்து மேலுஞ் சாம்பல் போட்டு மேலேயொரு சட்டிமூடிச் சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பி லேற்றவேண்டும் (ஈ-று) (3)

வெடியுப்பு மெழுகு

ஏற்றியே ஆவாரை விறகுகொண்டு
  இருசாமந் தீயெரிக்கக் கட்டிப்போச்சு
ஆற்றியே செம்புபத்துக் கொன்றீவை யொன்றீய
  வாச்சரியம் ஆருடனே செப்பப்போறோம்
மாத்தியே சார்வதற்கு வகையைக்கேளு
  மைந்தனே வெடியுப்பு புளிநவாசாரம்

தேத்தியே கூடன்றுரிசு சீனக்காரம்
சேர்த் தரைக்க வொருமெழுகதாமே.

(பொ-ரை) அங்ஙனம் அடுப்பிலேற்றிய சட்டியை ஆவாரம் விறகினால் இரண்டு சாமம் வரைக்கும் நன்றாயெரித்துப் பிறகு இறக்கி ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் பிரித்துப்பார்த்தால் கட்டிப்போயிருக்கும் அந்தக் கட்டில் செம்பு பத்தெடையுருக்கி அதில் ஒரு எடைகொடுத்தால் எட்டரைமாற்றுப் பொன்னாகும். இனி இதை விட்டு வெடியுப்பு மெழுகாற் செய்யப்படும் வேதையைச் சொல்லுகிறேன் கேட்பாயாக! எப்படி யென்றால் வெடியுப்பு, புளி, நவாச்சாரம், கர்ப்பூரம், மயில்துத்தம், சீனக்காரம் இவைகளை யெல்லாம் சமபாகமாகச் சேர்த்து அரைத்தால் அந்தச் சரக்குகளெல்லாம் ஒன்றாய் ரேசித்து மெழுகாகும் (எ-று) (4)

மெழுகாலே சரக்கெல்லாங் கட்டும்கட்டும்
மெழுகுக்கோர் யோகமது கேளுகேளு
குழுவான சுண்ணாம்பு லுப்புமாக
கொண்டரைத்து சீலையிலே பூசிக்கொண்டு
வழுவழுப்பு வாராமல் மெழுகுபோலே
வாகாக நாலுமிந்த சீலைமண்ணும்
கருகருப்பாய் காய்ச்சியே காயவைத்து
கருவாலி புடமிடவே கட்டும்பாரே.

(பொ-ரை) மேற்சொன்ன மெழுகுமுடிந்ததினால் சரக்கெல்லாம் கட்டிப்போகும் ஆனால் அந்த மெழுகைப் பிரயோகிக்கும் விதத்தைச் சொல்லுகிறேன் கேட்பாயாக! அது எப்படியென்றால் கற்சுண்ணத்தையும் சோற்றுப்பையும் நன்றாயரைத்துச் சீலைக்குப்பூசி அந்தச் சீலையை மேற்

படி மெழுகுக்குக் கவசித்து அதின்மேல் சீலைமண் நான்கு செய்து வெயிலில் காயவைத்துக் குக்குடபுடம் போட வேண்டும் (எ-று) (5)

பாஷாண கட்டு.

கட்டுமப்பா கிருஷ்ண துளசிசாற்றால்
கருதியரை வெள்ளைபாஷா ணத்தைமூடி
மூட்டுமப்பா செம்பு கிண்ணத்தில்வைத்து
மூன்றெருவிற் புடமிடவே புகையடங்கி
கட்டுமப்பா விப்படியே மூன்றுபாகங்
கண்டிட்டு குகையில்வைத் துருக்கிசெம்பி
லிட்டுமப்பா பத்துக்கொன் றிட்டுப்பாரு
இதன்வயது பத்துமாற் றென்றுகூறே.

(போ-ரை.) நன்றாயாராய்ந்தெடுத்த வெள்ளைப் பாஷாணக் கட்டியொன்று கொண்டுவந்து கருந்துளசிச் சாறுவிட்டு மெழுகாகும் வரைக்கும் அரைத்து வழித்து ஒரு செப்புக் கிண்ணத்தில் வைத்து மேலுக்கும் செப்புமூடி மண்சீலைசெய்து மூன்றெருவிற் புடம்போட்டால் புகையடங்கிப் பாஷாணங் கட்டிப்போகும். மறுபடியும் இப்படியே மூன்றுமுறை செய்து வைத்துக்கொண்டு சுத்திசெய்த செம்பினை மூசையிலிட்டுருக்கி அது உருகிக் கண்விட்டாடுஞ் சமயத்தில் மேற்படி மருந்தில் ஒருவராகனெடை கொடுத்துப் பார்த்தாயானால் நீயே பத்துமாற்றுத் தங்கமென்று சொல்லுவாய் (எ-று) (6)

வேறு-கெந்திதைலம்.

கூறவே கெந்திபல மொன்றுக்கேதான்
கூட்டவே பூநீறு மரைப்பலந்தான்

ஆறவே யாடுதீண்டா சமூலமூன்று
யரைத்து பில்லைதட்டிரவி காயப்போட்டு
யேறவே கலசமிட்டு குழித்தைல
மிறக்கியே பின்புகெந்தி பலங்காலப்பா
மீறவே பூநீறு பலமரைக்கால்
மிகுதைலத் திட்டுடனே அயத்தகட்டில்.

(போ-ரை.) சுத்திசெய்த நெல்லிக்காய்க்கந்தகம் பலம் ஒன்றும் நல்லகாலத்தில் எடுக்கப்பட்ட பூநீறு பலம் அரையும், நன்றாய்ச் சுத்தப்படுத்திய நன்னிக்கல் கல்வத் திட்டு ஆடுதீண்டாப்பாளைச் செடி சமூலமிடித்து அந்தச் சாற்றால் மேற்படி இரண்டு சரக்கையும், நன்றாய் மெழுகு போலரைத்துப் பில்லைதட்டிக் காயவைத்து குழித்தயில மிறக்கி வைத்துக்கொண்டு பின்பு வேறே நெல்லிக்காய் கந்தகம் பலம்காலும், பூநீறுபலம் அரைக்காலுமாக நிறுத் தெடுத்து மேற்படி குழித்தயிலத்தால் நன்றாய் மெழுகு போலரைத்து வைத்துக்கொண்டு பிறகு நல்ல அயத்த கட்டைக் கொண்டுவந்து வைத்துக்கொள்ளவேண்டும்.

தகட்டினிலே தடவிடவே யிரும்புபாத்து
தப்பாது பத்தரையுந் தானுச்சப்பா
வுகட்டிலே கழுதைநீர் திருகள்ளிப்பாலு [கும்
பயமிரண்டுஞ் சரியாக்கி ரவியில்வைக்க வுப்பரா
இரும்பெடுத்து தகட்டினிலே முன்பாகம் நாலத்தொ
வதில்விட்டு வைக்கவே செயநீராச்ச [ன்று
தகட்டினிலே பாஷாணக் கட்டிவாங்கி
தருமட்டி சிப்பியிலிட்டு விளக்குகொண்டு.

(போ-ரை) மேற்படி அரைத்து வைத்திருக்கும் மருந் தை இரும்புத் தகட்டுக்குத் தடவினால் அதுகட்டாயமாக

மாற்றுக் கொடுக்கும். அதை வைத்துக்கொண்டு வே றொரு பாத்திரத்தில் கழுதை மூத்திரத்தையும், திருகுக் கள்ளிப் பாலையும், ஒன்றாய்க் கலந்து வெயிலில் வைத்துக் கொண்டு வந்தால் அது வற்றி, உப்பாசவாரும் அந்த உப்பை எடுத்து மேற்படி தகட்டிற்கு மூடி ஒரு பாத்தி ரத்தில் வைத்து வெயிலில் வைத்தால் அதிலிருந்து ஜெய நீரிறங்கும். அந்தச்செயநீரை வைத்துக்கொண்டு வெள் ளைப் பாஷாணக்கட்டி நான்குவராகனிடை ஒரு மட்டிச்சிப்பியில் வைத்து இடி ஜெயநீரால் அது கனையும்படி விட்டு விளக்கெருக் (எ-று) (8)

விளக்கிலிட்டுச் சாதிகைபெரிக்க மெழுகதாகு
மெழுகெடுத்துக் காகம்பலத் தகடதாக்கி
வளக்கென்ன மெழுகிட்டு தகட்டைபொதிந்து
மைக்ததின மேதிக்கொம்பில் பன்னீர்ப்பூவிட்டு
அளக்கென்ன காகத்தை பத்துள்விட்டு
வதின்மேலே பன்னீர்ப்பூ வழுக்கிறுதி
குலக்கென்ன சிலைமண் ணைந்துசெய்து
குருணி கெருந்திமூன் றின்மேலிட்டே

(பொ-ரை) நீபாக்கியா ஒருசாதிகை யுடைக்கும் சாந்தால் அந்தப் பாஷாணம் மெழுகாகும். ஒருபலம் அந்த காகத்தைத் தகடாய்த்தட்டி மூன் மெழுகுக்குள் வைத்து ஒரு எருமைக் கொம்பில் பாதிக்குப் பன்னீர்ப் பூபோட்டு மத்தியில் மருந்தை வைத்து மேலுக்கும் பன்னீர்ப்பூவை நன்றாயழுத்திப் போட்டு அந்த சிலைமண் ணையாய்ச்செய்து ஒரு குடைவுசட்டியில் மேலும் கீழும் குருணி கெருந்தி மூன்றிப்போட்டு (எ-று) (9)

மேலிட்டு ஒருமாத்து விறகுகொண்டு
மேவவெரித் தருவாலே தியானஞ்செய்து
பாலிட்டு வப்பாலே போய்விடாதே
பாகமே கிட்டவிரு செந்திரிக்கும்
சாலிட்டு வெள்ளீய மோட்டிலுருக்கி
சார்பத்தில் மஞ்சாடி செந்தூரம்போடு
மேலிட்டு வெள்ளீயம் பழுத்துபோகும்
என்மகனே பாஷாண வித்தைபாரே.

(பொ-ரை.) மத்தியில் முன்செம்பை வைத்து அடுப்பி லேற்றி ஒரேசாதி விறகினால் நன்றாயெரித்துக் கொம்பு செவந்து கண்விடப்போகுஞ் சமயத்தில் மேற்படி நீரை யாற்றி ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் பிரித்துப்பார்த்தால் அந்தப் பாஷாணம் செந்தூரமாயிருக்கும், அந்தச் செந் தூரத்தை வைத்துக் கொண்டு (1) பலம் வெள்ளீயத்தை ஒருசட்டியிலிட்டுருக்கி அதற்குப் பத்துக்கொன்று செந் தூரம் கொடுத்தால் அந்த வெள்ளீயமானது பழுத்துவிடு கும் இதைவிட்டு பாஷாணத்தாற் செய்யப்படும் வேலை யைக் கேட்பாயாக (எ-று) (10

வேறு-பாஷாணக்கட்டு.

பாரேநீ பாஷாணக் கட்டைகேளு
படுதொட்டால் வாடிகத்தைச் சூரிச்சாறு
சேரேநீ தலையோட்டில் சீழ்மண்பூசி
சிற்றடுப்பின் மேல்வைத்து பாஷாணக்கட்டி
தீரேநீ கருக்குகொடு கட்டிப்போகும்
திசெம்பு எழுக்கொன் நீவாய்வெள்ளி
சீராடு மிவைவெரிது செய்துபாரு
செப்பாதே யொருவருக்கும் செப்பிடாதே.

(பொ-ரை.) இனி பாஷாணக் கட்டினால் செய்யப்படும் வேலைதயைச் சொல்லுகிறேன் கேட்பாயாக அது எப்படி யென்றால், ஒரு மண்டையோடு பெரிதாகப் பார்த்தெடுத்துக் கொண்டு அதன் அடிப்பாகத்தில் மண்பூசி அடுப்பி லேற்றி தொட்டாற் சுருங்கிச்சாறும் கற்றாழைச் சாறும் கலந்து மண்டையோட்டில் பாஷாணத்தைவைத்து அதற்குச் சுருக்குக்கொடுத்தால் அந்தப் பாஷாணம் கட்டுப்போகும் அதைச் செம்புருக்கி ஏழுக்கொன்று கொடுத்தால் அதுவெள்ளியாகும் ஆனால் இதையொருவருக்கும் சொல்லவேண்டாம் (சொல்லுவாயானால் சாமியின் திருவருள் உனக்குக் கிடைக்காதாகும் (எ-று.) (11)

பதினெண்சித்தர்

திருவாய்மலர்ந்த

வாதக்கோவை

முற்றுப்பெற்றது.

கற்புநிலை தவறாத

காமசௌந்தரி.

மராடா தேசத்தை ஆளும் மதிவரதன மகாராஜா மனைவி ம[...]
வல்லி இவ்விருவர்களுக்கும் புத்திர சந்தான மில்லாமையால் ரா[...]
அரசை மந்திரியிடம் ஒப்புவித்துக் காடுசென்று தபசு புரிந்து [...]
[...]ரனிடத்தில் கனி ஒன்று பெற்றுக்கொண்டு நகர்வந்து மனைவி[...]
டம் கொடுக்க அதை மனைவி புசித்தவுடன் கர்ப்பவதியாகி விஜயசே
னன், காமசௌந்தரி இவர்களைப்பெற்று நகர் கொண்டாடி பெண்
ணுக்கு தக்க வரனை வேணுமென்று சுயவரம் நாட்டி ஐம்பத்தாறு
தேசத்து ராஜர்களையும் வாழ்த்தி அலங்காரம் செய்து சபாமண்ட
பம் செல்லும்போது ஆகாய மார்க்கமாகப் போய்க்கொண்டிருந்த
மாயாராட்சதன் திடீர் என்று பெண்ணை தன் உள்ளங்கையில் ஏந்
திக்கொண்டு தன் வனம் சென்றிருக்கையில் தன் குமாரத்தியைப்
போல் பாதுகாத்துவர தாய் தகப்பனை விட்டுவந்த விசனம் அங்கே
ஒரு பஞ்சவர்ண கிளியிடம் சில கதை சொல்லத் தொடங்கினாள்.

1. கமலநாயகி கதை.
2. அங்கைய தேசத்து அரசன் காதல்கொண்ட கதை.
3. பஞ்சாப்பு தேசத்து அரசன் சாந்தசீலன் கதை.
4. திருடன் வீரசேனன் கதை.
5. ஷை சூரசேனன் கதை.
6. தபஸிரேஷ்டன் கதை.
7. மணிபுரம் ஜெயதீரன் கதை.
8. மாயராட்சதன் கதை.
9. ரூபசந்திரன் காமசௌந்தரியின்மீது காதல்கொண்டு
விவாகம் செய்துகொண்ட கதை

இத்தனைக் கதைகள் படிக்கப்படிக்க இன்பமும் புத்தியும் கற்பு
நிலை பாதுகார்க்கும் நிலைமையும் உண்டாக்கும். பெண்டுகளுக்கு
அவசியம் இருக்கவேண்டும்.

விலை அணா - 8.

பி. எஸ். டி. எம். அண்டு, சன்,
வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

176282